பெண்ணே, நீ ஏன் அழுகிறாய்?

ஆனி சகரியா பூணன்

“எந்தன் கண்ணீர், இயேசுவை ஈர்த்திடும் கண்ணீராய் மாறனுமே!”

Women Why are you Weeping? - Tamil
Annie Poonen

© **Dr.** Annie Zac Poonen, 2001

tamil.cfcindia.com

9 11 13 15 14 12 10 8

Paperback ISBN : 978-81-939898-6-9

"Scripture Quotations are from The Holy Bible, BSI-Tamil O.V
Published by: The Bible Society India.
Used by Permission. All rights reserved".

This book has been copyrighted to prevent misuse.

No part of this work may be reproduced or transmitted in any form or by any means - for example, electronic or mechanical, including photocopying and recording without the prior written permission of the publisher.

For further details please contact:

Christian Fellowship Centre
#69, Bellahalli, Kannur Post,
Bengaluru – 562149
Karnataka
India
email: cfc@cfcindia.com

ஆறுதல் நோக்கி . . .

1. தேவன் உங்கள் சொந்த தகப்பன் 7
2. தேவன் உங்கள் கணவர் 19
3. உங்கள் பிள்ளைகளைத் தேவனே இரட்சிப்பார் 24
4. ‘மரண நேரத்தில்’ நம் தேவன்! 37
5. உபத்திரவ நேரம் தேவனை மகிமைப்படுத்தும் நேரம் 43
6. இம்மைக்குரிய துக்கத்திலிருந்து விடுதலை 54
7. ‘தேவனுக்கேற்ற துக்கமே’ அவரண்டை சேர்த்திடும் 59
8. ‘சரீர வேதனையில்’ தேவனுடைய நோக்கம் 64
9. ‘அழுதிடும் பெண்களை’ விசாரிக்கும் தேவன் 72

கண் கலங்கிய பெண்களுக்கு, இப்புத்தகம் ஓர் விடியல்!

ஒரு பெண், தன் சிருஷ்டி கர்த்தாவால், உணர்வு ததும்பிய மென்மையான சுபாவத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாள்! அவள், துன்பம் நிறைந்த ஜனங்களின் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளும் அபூர்வத் திறனும் கொண்டவளாய் இருக்கிறாள்.

இருப்பினும், அவளுடைய 'உணர்ச்சிவசப்படும் சுபாவம்' வேறு பல பிரச்சனைகளுக்கும் காரணமாய் அமைந்து விடுகிறது. ஆகவே 'சராசரியான பெண்களுக்கு' சம்பவிப்பதைப் போலவே அவளுக்கும் துயரங்கள் சம்பவித்துவிடுகிறது. இந்த சமயத்தில்தான் 'அந்தப் பெண்ணிற்கு' உதவி தேவைப்படுகிறது!

தங்கள் கவலைகளை, தங்கள் கண்ணீர் தடாகத்தில் மூழ்கடித்து விடலாம், என எண்ணி, சில பெண்கள் வாரங்களாய், மாதங்களாய், அழுது கொண்டேயிருக்கிறார்கள்! சில பெண்கள், துக்கத்தின் சுமையால் நசுக்கப்பட்டு 'இருதயத்தில் அழுகிறார்கள்'. அநேக பெண்கள், தங்களுடைய பிரச்சனைகள் தீர்ந்தபிறகும் 'அந்த துன்பத்தின் தழும்பு களை' தங்கள் பெலவீன உணர்ச்சிவசத்தில் தேக்கி வைத்திருக்கிறார்கள்!

துன்பங்களும், உபத்திரவங்களும் **ஓர் மிக நல்ல நோக்கத்திற்காய்** மாறிவிட முடியும். அந்த நோக்கத்தை மனதில் கொண்டுதான் நம்மில் ஆழமாய் அன்புகூரும் சர்வ வல்ல தேவன், துன்பங்கள் நம் வாழ்வில் பிரவேசிக்க அனுமதிக்கிறார். உபத்திரவங்கள் நம் முழு குணாதிசயங்களையும் மாற்றிவிட முடியும்! கோடாரி தன்னை வெட்டும் போது சந்தனமரம் நல்ல வாசனையைப் பரிமளிக்கிறது! அதைப்போலவே ஒரு பெண்ணும் துன்பத்தின் மூலம், தான் தேவனிடத்தில் கற்றுக்கொண்ட நன்மையின் மூலமாய், தனக்குத் தீங்கு செய்தவர்களையும், மற்றவர்களையும் ஆசீர்வதிப்பவளாய் மாறிவிட முடியும்! **தேவனுக்கேற்ற பெண்ணாய்** நீங்கள் மாற வேண்டுமென்றால், ஏராளமான உபத்திரவங்களை நீங்கள் சந்தித்திடவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்... அதேசமயம், அந்த உபத்திரவங்கள் உங்களை அழுத்தி சீரழித்திட அனுமதிக்கக்கூடாது!

என்னுடைய அநேக நண்பர்கள், துன்பத்தின் ஆழத்திற்குள் சென்றிருக்கிறார்கள். சிலருடைய சூழ்நிலைகளில், அவர்களின் துன்பத்தின் ஆழத்தை காண முடியாத அளவிற்கு தவித்திருக்கிறேன்! இருப்பினும், அவர்களின் வருத்தங்களை கவனித்துக் கேட்டு, அவர்களோடு பேசி, கடிதம் எழுதி, அன்பு பாராட்டிய அனுபவம், என்னை அளவில்லாமல் ஆசீர்வதித்திருக்கிறது. துன்பங்களை சரியான விதத்தில் கையாள கற்றுக்கொண்டால், நாம் சீர் கொண்டவர்களாய் மாறிட முடியும் என்ற உண்மையை நான் கண்டுபிடித்திருக்கிறேன்! **இந்த துன்பம் என்னும் பள்ளிக்கூடத்தில்** அருமையான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுகிறோம். அந்த கல்வியின் இறுதியில் நாம் பெறும் பலனே **கிறிஸ்துவைப் போன்று** மாறிடும் நம் சுபாவம் ஆகும்!

"அவர் என்னை சோதித்த பின், நான் பொன்னாக விளங்குவேன்" என்றே

வேதம் கூறுகிறது (யோபு 23:10).

ஆனால் தங்கத்தைச் சுத்திகரிக்கும் அக்கினி... மண்ணை இறுகச் செய்துவிடும்! அதுபோலவே, ஒரு பெண்ணும் தன் துன்பங்களின் நடுவில் இறுகிப்போனவளாய், பிறர்மீது குறை சொல்பவளாயும்... தேவனையே குறைசொல்லவும் தொடங்குகிறாள்!

துன்பம் தரும் எந்த நிகழ்ச்சிகளையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கில்லை. ஆனால், **ஆண்டவர் அவைகளைக் கட்டுப்படுத்தி** அதன் மூலம் "நமக்குள்" நன்மையான காரியங்கள் உண்டாகும்படிச் செய்திட முடியும்! ஆம், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது (ரோமர் 8:28).

இயேசு உயிர்த்தெழுந்த காலை நேரத்தில், அவருடைய கல்லறையின் அருகில் அழுது கொண்டிருந்த மகதலேனா மரியாளை இயேசு சந்தித்ததைப் போலவே, இன்றும் பெண்களாகிய நம்மை அவர் சந்திக்கிறார்! அவளிடத்தில் கேட்ட "பெண்ணே, நீ ஏன் அழுகிறாய்?" என்ற கேள்வியை, இன்றும் உங்களிடத்தில் கேட்கிறார்! "என் வாழ்வில் நிகழும் சின்னச் சின்ன சம்பவங்களையும் தேவன் அறிந்திருக்கிறார்" (யோபு 23:10 - LIVING). ஆம், எதையும் காணாதவர் போல் அவர் இல்லை!

அவர் தொடர்ந்து நம்மிடம் கேட்க விரும்பும் மற்றொரு கேள்வி யாதெனில், **நீ யாரைத் தேடுகிறாய்?** இந்தக் கேள்விக்கு உங்கள் பதில் என்ன? நேர்மை கொண்ட நெஞ்சத்தோடு "ஆண்டவரே! என் துன்பத்தின் மத்தியில் நான் உம்மைத்தான் தேடுகிறேன்!" என் கண்ணீர்களின் நடுவில் "உம் முகம் ஒன்றே நான் கண்டிட வாஞ்சிக் கிறேன்!" என்று நீங்கள் கூறிட முடியுமா? மானிடரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் ஆறுதல் போதுமானதாயில்லையே! அதற்குப் பதிலாய், நாம் இயேசுவையே நோக்கிப் பார்த்திடக்கடவோம்!

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது, **அழுது கொண்டிருந்த இயேசுவின் தாயும்** 'அவரிடமிருந்தே' ஆறுதலைக் கண்டடைந்தாள். அவ்வேளையில், தன் தாய் தங்கி வாழ ஒரு வீட்டை ஆயத்தம் செய்து, தன் தாயை பராமரித்துக் கொள்ளும்படி யோவானிடம் இயேசு ஒப்படைத்தார்!

இன்றும், அதே தம்முடைய அக்கறையைத்தான் பெண்களாகிய நம்மிடத்தில் அவர் காட்டுகிறார்! நம்மீது அவர் கொண்ட கரிசனையில், நாம் இளைப்பாறுதலைக் கண்டடைய தேவன் அருள்புரிவாராக!

– ஆனி சகரியாபூணன்

பெண்ணே,
உங்கள் கண்ணீருக்கு
தேவன் தந்திடும் விடை . . .

தேவன் உங்கள் சொந்த தகப்பன்

1

“**நா**ன் என் பிதாவினிடத்திற்கும் **உங்கள் பிதாவினிடத்திற்கும்** ஏறிப் போகிறேன்” என ஆண்டவர் பட்சமாய் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள் (யோவான்.20:17).

ஒரு மருத்துவராய் நான் பணியாற்றிய காலத்தில், தங்களுக்குப் பிறந்த குழந்தை பெண்ணாக இருந்தால், அக்குழந்தையை மருத்துவ மனையிலேயே விட்டுவிட்டுச் செல்லுகின்ற எண்ணற்ற தாய்மார்களை நான் கண்டிருக்கிறேன்! பிரசவ பில்லைக் கட்டாமலே இந்த தாய்மார்கள் மறைந்துவிடுவார்கள்! இவர்களில் பெரும்பாலும் ஏழைப் பெண்மணிகள்! தங்களுக்குப் பெண்குழந்தை பிறந்ததால்...... ‘பெண் குழந்தை’ தங்கள் ஜீவியகாலம் முழுவதும் தங்களுக்குப் பாரமா யிருப்பார்கள் என்ற எண்ணமே இக்கொடிய செயலைச் செய்யும்படி அவர்களைத் தூண்டுகிறது. நம் இந்திய தேசத்தில், கேடு நிறைந்த “வரதட்சணை” (DOWRY) சம்பிரதாயம், பெண் சமுதாயத்திற்கு சொல்லொண்ணாப் பிரச்சனைகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதுவும் குறிப்பாக, நம் தேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் குடியிருந்து வாழும் **ஏழைப்பெண்களுக்கே** இந்த துயரம் அதிகமாய் சம்பவிக்கிறது. இவ்வித ஏழைத்தாய்மார்கள், தங்கள் பெண் குழந்தையை தங்கள் சொந்தக் கிராமத்திற்கு கொண்டு செல்வதைக் காட்டிலும், ஒரு கிறிஸ்தவ மருத்துவமனையிலோ அல்லது ஒரு கிறிஸ்தவ அனாதை இல்லத்திலோ விட்டுச்செல்வது தங்கள் பிள்ளைக்கு ஒரு நல்ல வாழ்க்கை ஏற்பட வழி உண்டாகும் என்றே எண்ணுகிறார்கள். ஒரு அனாதை இல்லத்தில், தங்கள் பெண் குழந்தையை ஒரு ஐசுவரியவான் தத்தெடுத்து வளர்க்கும் வாய்ப்புள்ளதென்பதையும் இவர்கள் அறிந்திருக்கிறார்கள்! மேலும், ஒரு கிறிஸ்தவ அனாதை ஆசிரமத்தில், தங்கள் பெண்பிள்ளை “புருஷர்களால் கற்பு இழிவாய் நடத்தப்படாமல்” காக்கப்படுவார்களென்றும் நம்புகிறார்கள்!!

நான் தொண்டு செய்த மருத்துவ சிகிச்சை வார்டில் மிக அழகான.... ஆனால், ஒருபோதும் சிரிக்காத, எதுவுமே பேசாத, அழக்கூடச் செய்யாத.... சாப்பிடுவதற்கும் மறுத்த, பெயர் தெரியாத இரண்டு வயது பெண் குழந்தையை வைத்திருந்தார்கள். ஒரு சமூக சேவகி, அப்பெண் குழந்தையை மருத்துவமனை வாசலில் கண்டு அழைத்து வந்திருந்தார்கள்.

அக்குழந்தை மிகுந்த புத்திக்கூர்மை உடையதாகத் தோன்றியது. ஆனால், அவளின் கண்களோ “பீதி நிறைந்ததாய்” காணப்பட்டது. ஓர் குறுகிய தனது பூலோக வாழ்க்கையில் அக்குழந்தை எவ்வளவு அதிகமாய் ‘அதிர்ச்சிகளைச்’ சந்தித்திருப்பாள் என்பதை சற்று எண்ணிப் பாருங்கள்!

அந்தப் பிரிவில் பணிபுரிந்த நாங்கள் அனைவருமே அக்குழந்தையின் மீது பிரியமாய் இருந்தோம்! எங்களால் முடிந்தவரை அக்குழந்தையை மகிழ்ச்சிப்படுத்தவும் முயற்சித்தோம். பொதுவாய் இதுபோன்ற குழந்தைகளை ஏதாவது அனாதை இல்லத்தில் நாங்கள் சேர்த்துவிடுவது வழக்கம். ஆனால் இந்தக் குழந்தையோ என்னுடைய பராமரிப்பிலிருந்த ‘நோயாளியாகவும்’ இருந்தபடியால், அக்குழந்தை சுகமானவுடன், சில கிறிஸ்தவ நண்பர்களின் உதவியோடு ஒரு பிரபல்யமான கிறிஸ்தவ அனாதை ஆசிரமத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்தோம்.

பின்பு, வருடங்கள் பல சென்றாலும், அவ்வப்போது அந்தப் பெண் பிள்ளையை நான் விசாரித்து வந்தது மாத்திரமல்லாமல், அக்குழந்தைக்காக ஜெபித்தும் வந்தேன். ஓர் நீண்ட 30 ஆண்டுகள் கழித்து ஒருநாள் அவளை நான் சந்தித்தேன்! இப்போது அவளுக்குத் திருமணமாகிப் பிள்ளைகளும் இருந்தார்கள்! ஆனால், என்னைக் கண்டதும் அந்தப் பெண் என்னிடம் கேட்ட முதல் கேள்வி என்ன தெரியுமா.... **“என் பெற்றோர்கள் யார்?”** *என்ற கேள்விதான். இந்த ஒரு கேள்விதான் அந்த 30 ஆண்டு காலமும் அவளைத் திகிலடையச் செய்திருக்கிறது!!*

வெற்றிடமாய் இருந்த அவள் இருதயம் ஒரு தகப்பனின் அன்பிற்காக, ஒரு தாயின் அன்பிற்காக நீண்ட காலமாய் ஏங்கித் தவித்திருக்கிறது!

தான் இருந்த அனாதை ஆசிரமத்தில், அவளோ இந்த அன்பை சிறிது கூட பெறாமலே வாழ்ந்திருக்கிறாள்!

இன்றோ, ஒரு ஸ்திரீ விரும்புகிற அனைத்தையும் அவள் பெற்றிருந்தாள்! ஓர் நல்ல கணவன், குழந்தைகள், நல்ல படிப்பு.... மற்றும் நல்ல வேலையும்கூட பெற்றிருந்தாள். ஆனால்! **“தகப்பன் இல்லையே”** *என்ற நெஞ்சின் பாரம் இன்னமும் அவளை அழுத்திக் கொண்டிருந்தபடியால், என்னைக் கண்டதும் அழுதுவிட்டாள்!*

துரதிருஷ்டவசமாய், எனக்கும் அவள் பெற்றோர்கள் யார் எனத்

தெரியாதபடியால், அவளின் கேள்விக்கு என்னால் பதில் கூற முடிய வில்லை. ஆனால், இந்தப் பூமியிலுள்ள எந்த ஒரு நல்ல பெற்றோர் களைக் காட்டிலும் **மேலான அன்பு கொண்ட பரம தகப்பனைக் குறித்து** நான் அவளிடம் கூற முடிந்தது. இருப்பினும், தன்னைக் குழந்தை யிலேயே நிர்க்கதியாக்கிச் சென்ற.... தான் அறியாத தன் பெற்றோர்களை அவளால் மன்னிக்கவே முடியவில்லை! தான் 'புறக்கணிக்கப்பட்டவள்' என்ற உணர்வு அவளுடைய ஆத்துமாவை அரித்துக் கொண்டிருந்ததை நான் காண முடிந்தது!!

இவளைப்போன்று வேறு சில பெண் பிள்ளைகளையும் இச்சமயத்தில் எண்ணிப் பார்த்தேன். இவர்களுக்கோ, பெற்றோர்கள் இருந்தாலும், **அவர்கள் ஏங்கி விரும்பிய அன்பையும் பராமரிப்பையும்** அவர்களிடமிருந்து பெற முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள்! இந்தப் பெண்களும் பாதுகாப்பின் உணர்வை இழந்த நிலையில் தனித்து, மகிழ்ச்சியற்ற "ஒதுங்கிய வாழ்க்கையையே" இக்கொடிய உலகில் அனுபவித்து வாழ்கிறார்கள்! இன்னும், பிரிந்துபோன குடும்பங்களில் பிறந்த பெண் பிள்ளைகள்! திருமணமாகாமலே தாயாகியவர்களுக்குப் பிறந்த பெண் பிள்ளைகள்! என, பல ரகமாய் இருப்பதை நான் கண்டேன். இது போன்ற **எண்ணற்ற பெண் பிள்ளைகளின் "துயரமான உணர்வுகளை...."** அவர்களின் பெற்றோர்கள் விளங்கிக் கொள்ளத் தவறிவிட்டார்கள்!

இருப்பினும் ஓர் நற்செய்தி யாதெனில், இவ்வித துயரமான பின்னணியிலிருந்து தவிக்கும் பெண்கள் யாவருமே, தாங்கள் வாஞ்சித்து எதிர்பார்க்கும் அன்பையும் அக்கறையையும் பாதுகாப்பையும் கண்டு கொள்ள முடியும்.... ஆம், அவர்கள் மாத்திரம் **பரலோக தகப்பனின்** மார்பில் சாய்ந்து கொள்ள வந்துவிடுவார்களென்றால் அப்படியாகும்!

அன்பார்ந்த சகோதரியே, கடந்த காலத்தில் நீங்கள் ஏதோ ஒரு விதத்தில் தவறாய் நடத்தப்பட்டதின் ஞாபக நினைவுகளால் பாதிக்கப் பட்டிருக்கிறீர்களா? உங்களின் பாதிப்பு மிக ஆழமானதாயும், அதை யாரிடமும் சொல்லக் கூடாததாயுமிருக்கிறதா? இவ்வாறு, சிறு பிள்ளையாய் இருக்கும்போதே பாலிய விஷயத்தில் தவறாய் கையாளப் பட்ட ஒரு பெண்ணை நான் சந்தித்தேன். அந்தப் பெண், தன்னை மாசு டையவளாகவே எப்போதும் உணர்ந்து, தன்னுடைய கன்னித்தன்மை திருடப்பட்டுப் போனதை எண்ணி எண்ணி கோபங்கொண்டவளாகவே வாழ்ந்து "எந்த ஒரு ஆண்மகனையும்" நம்ப முடியாத இடத்திற்குத் தள்ளப்பட்டாள்! நான் அவளைச் சந்தித்து, நடந்த சம்பவங்கள் அனைத்தும் ஓர் விபத்து போன்ற "அசம்பாவிதம்" (ACCIDENT) மட்டுமே! என்றும், இவ்வாறு நடந்துவிட்ட செயல்களுக்கு "அவள்" எவ்விதத்திலும் பொறுப்பாளி அல்ல! என்றும் எடுத்துக் கூறியவுடன்

அவள் வெகுவாய் விடுதலையடைந்துவிட்டாள்!

இவ்வாறு, ஏதோ ஒரு வகையில் உங்கள் மனதில் ஏற்பட்ட ஒவ்வொரு காயங்களையும் இயேசு மாத்திரமே சொஸ்தமாக்கிட முடியும்! உங்கள் நெஞ்சில் தங்கிவிட்ட மாசையும் அவமானத்தையும் இந்த அன்புள்ள இயேசு, சுத்திகரித்து அகற்றிவிடுவார்!

உங்களுக்குத் தீங்கிழைத்த நபரை மன்னிப்பதற்கும் அவர் உதவுவார்! அதுமாத்திரமல்லாமல் நீங்கள் பெற்ற இந்த அனுபவம், உங்களைப் போலவே துயரமடைந்தவர்களுக்கு உங்களை மனதுருக்க முள்ளவர்களாய் மாற்றி விட்டதையும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டிடும் நல்ல இடத்தை நீங்கள் அடைந்திடச் செய்ததையும் காண்பீர்கள்!!

இன்னும் சில பெண்கள், தங்கள் பெற்றோர்களின் வரம்பு மீறிய கண்டிப்பினிமித்தமும், தங்கள் உடை, நடத்தை போன்ற காரியங்களில் அவர்கள் விதித்த ஏராளமான தடைகளினிமித்தமும் பெற்றோர்கள் மீது ஓர் **கசப்பான கோபம்** அவர்களுக்குள் இருந்திட முடியும்! இதுபோன்ற சூழ்நிலையிலுள்ள பெண்கள், தங்கள் வீட்டை விட்டே ஓடி தற்கொலை செய்து கொள்ளலாமா? என்று கூட அநேக சமயங்களில் எண்ணி இருக்கிறார்கள்.

ஆனால் 'எந்த' ஒரு பெண்ணின் எதிர்காலமும், முற்றிலும் காரிருளாய் இருப்பதே இல்லை! எவ்வளவு கரிய கார்மேகத்திலும் வெள்ளிக்கயிறு போன்ற 'ஒளிக்கீற்று' அதன் அடிவாரத்தில் அவர்களுக்கென இருக்கத்தான் செய்கிறது!

ஆகவே உங்களுக்குச் சம்பவிக்கப் போகும் **நன்மையானவைகளை மாத்திரமே** சிந்திப்பதற்கு இனியாவது கற்றுக்கொள்ளுங்கள்!

உங்கள் பெற்றோர்கள் உங்களுக்குச் செய்த "நன்மையானவை களையே" எண்ணி நன்றியுள்ளவர்களாய் இருங்கள்! இன்று நீங்கள் உயிரோடிருப்பதே அவர்கள் உங்களுக்குச் செய்த நன்மைதான் என்பதை உணருங்கள். இப்போது நீங்கள் சந்திக்கும் கஷ்டங்களையும் துன்பங்களையும் சகித்து சமாளித்துக்கொள்ள தேவன் உங்களுக்கு நிச்சயமாய் உதவிபுரிவார்! ஆகவே, ஒருபோதும் உங்கள் நம்பிக்கையை தளரவிடாதீர்கள்!!

இதுபோன்ற சூழ்நிலையில், உங்களைவிட வாழ்க்கையில் நலமானதைப் பெற்றவர்களினிமித்தம் ஒருபோதும் பொறாமை கொள்ளாதிருங்கள். தேவன் உங்களைச் சிருஷ்டித்த விதத்திலோ அல்லது உங்களுக்குரிய சூழ்நிலைகளைத் திட்டமிட்டதிலோ எந்தத் தவறுமே செய்துவிடவில்லை! இந்த உலகில் உள்ள எண்ணற்ற கோடி மக்கள் உங்களைக் காட்டிலும் அதிகமான துன்பத்தையே சகித்து

வாழ்கிறார்கள்! 'நீங்களோ' நன்றி சொல்வதற்கென ஏராளமானவை களைப் பெற்றிருக்கிறீர்கள்!!

ஒருவேளை, நீங்கள் பாவம் செய்ததினிமித்தம் **திருமணத்திற்கு முன்பே** கர்ப்பந்தரித்திருக்கக் கூடும்! இதுபோன்ற நிலைக்கு ஆளாகிய அநேகம் பெண்களை நான் அறிந்திருக்கிறேன். இச்சூழ்நிலையில் பெற்றெடுக்கும் 'அந்த குழந்தையை' நல்ல தீர்மானத்துடன் பாதுகாத்திருக்கிறார்கள். சிலர் அக்குழந்தைகளைத் தாங்களே வைத்துக் கொண்டார்கள்! வேறு சிலர், மற்றவர்களுக்கு சுவீகாரமாய் (ADOPTION) கொடுத்துவிட்டார்கள்! ஆம் 'தங்கள் பிள்ளையை' அவர்கள் கொல்ல வில்லை! இச்சூழ்நிலையில், இவர்கள் தங்களைத் தேவனுக்கு முன்பாக தாழ்த்தி மனந்திரும்பியபோது... அவர்களைப் புரிந்துகொண்டு வாழும் நல்ல கணவன்மார்களையும் தேவன் அவர்களுக்குத் தந்திருக்கிறார்! மேலும், அவர்களிடம் குடி கொண்டிருந்த குற்றஉணர்வையும் அவமானத்தையும் ஆண்டவர் அவர்களிடமிருந்து எடுத்துப் போட்டார். பார்த்தீர்களா.... பிறரால் பாதிக்கப்பட்ட சூழ்நிலையி லிருக்கும் இது போன்ற **காரிருள் சமயங்களிலும்** நீங்கள் தேவன் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிருக்க முடியும்!!

ஆம், ஆண்டவர் உங்களை ஏற்றுக்கொண்டு.... ஓர் **புதிய வாழ்க்கையை** உங்களுக்குத் தருவதற்கென்றே காத்துக் கொண்டிருக்கிறார்!

சில வருடங்களுக்கு முன்பாக, திருமண வயது கொண்ட மூன்று சகோதரிகள் தங்கள் படுக்கையறையில் 'தூக்குப் போட்டு' மூவருமே தற்கொலை செய்து கொண்டார்கள் என பத்திரிக்கைகளில் வாசித்திருக்கிறோம். இவர்களைத் திருமணம் செய்வதற்கு முன் வந்த ஒவ்வொரு இளைஞனுடைய பெற்றோர்களும், ஏராளமான வரதட்சணை கேட்டார்கள்! தன்னுடைய மூன்று மகள்களையும் கரையேற்ற வேண்டுமே என்ற தவிப்பில், அவர்களது தகப்பனோ கொடிய அங்கலாய்ப்பிற்குள்ளானார்! தன் தகப்பனின் அங்கலாய்ப்பைக் கண்ட இந்த மூன்று வாலிப பெண்களும், தங்கள் வாழ்க்கையையே முடித்துக் கொண்டு... தகப்பனின் அங்கலாய்ப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்துவிட்டார்கள்! ஆ, இது எத்தனை நெஞ்சைப் பிளக்கும் கொடுமை.

ஒருவேளை, நீங்களும் கூட இதேபோன்ற சூழ்நிலையை எதிர் நோக்கியிருக்கலாம். உங்களைப் பெண் கேட்க வந்த ஒவ்வொரு திருமண வரனும் "ஏராளமான வரதட்சணை" பிரச்சனையால் தடையாகிக் கொண்டே போவதைக் கண்டு, நீங்கள் குழப்பமடைந் திருக்கலாம். இச்சூழ்நிலையில், சிறிதுகூட சோர்ந்து போகாதிருங்கள்!

ஏனென்றால், **தேவன் உங்கள் தகப்பன்!** உங்கள் தேவை என்னவென்று அவருக்குத் தெரியும். அவர் உங்களை நிச்சயமாய் மிகுந்த அக்கறையோடு விசாரிப்பார்!

இவ்வுலகில் திருமணமொன்றும் 'ஓர் மாபெரும் நிகழ்ச்சி' அல்ல! மாறாக, உங்கள் வாழ்க்கையின் மீது தேவன் கொண்டிருக்கும் திட்டத்தை நீங்கள் நிறைவேற்றுவதே, மாபெரும் நிகழ்ச்சியாகும்!

ஆகவே, உங்கள் ஜீவியம் முழுவதையும் தேவனிடத்தில் அர்ப்பணம் செய்து, உங்கள் வாழ்க்கையில் "அவர் சித்தம் ஒன்று மாத்திரமே" செய்திட நாடுங்கள்! நீங்கள் அப்படிச் செய்துவிட்டால், உங்களுக்குத் திருமணமாகிறதோ ஆகவில்லையோ.... உங்கள் ஜீவியத்தின் முடிவில் **தேவனுடைய திட்டம்** நிறைவேறி முடிந்த நிறைவான வாழ்க்கையை நிச்சயம் காண்பீர்கள். இவ்வுலகத்தில் வாழ்ந்த சிறந்த மிஷனெரிகளில் சிலர் 'திருமணமாகாத பெண்கள்' என்பதை இவ்வேளையில் அறியுங்கள்!

இதுபோலவே, நீங்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் அரசுத் தேர்வுகளில் தோல்வி அடைந்தீர்களா? உங்கள் தோல்வியைக் குறித்து அனுதாபம் கொள்ள யாருமே இல்லாததுபோல் தோன்றுகிறதா? "இனி உன்னுடைய முழு ஜீவியமும் தோல்விதான்!" என சாத்தான் உங்களிடம் கூறுகிறானா? இதுபோன்ற "பேய்த்தனமான" சிந்தைகளுக்கு ஒரு போதும் உடன்படாதிருங்கள்! அப்படியில்லையென்றால், இவ்வித சிந்தை உங்களைத் தற்கொலை செய்து கொள்ளும் இடத்திற்கே கொண்டு சென்றுவிட முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்!

இனியும் பரீட்சையின் தோல்விக்காக அழுவதை நிறுத்தி விடுங்கள்! சகோதரியே, ஏதோ ஒரு பரீட்சையோ அல்லது அநேக பரீட்சைகளில் கூட நீங்கள் தோல்வி அடைந்ததினிமித்தமோ, உங்கள் ஜீவியம் ஸ்தம்பித்து நிற்கவேண்டிய தேவையேயில்லை. இழந்துபோன தேர்வுகளை மீண்டும் எழுதுங்கள்! நிச்சயம் உங்களுக்கு வெற்றி உண்டு! **முயற்சியை மாத்திரம் விட்டுவிடாதிருங்கள்!** உங்களால் தேர்ச்சி பெற முடியவில்லையென்றால், அல்லது தேர்ச்சி பெறுவதற்குரிய போது மான புத்திக்கூர்மையோ அல்லது மேலும் படிப்பதற்குரிய பொருளா தாரமோ இல்லாதிருந்தால்.... இதுபோன்ற பெலவீனர்களையும் தரித்திரர்களையுமே இவ்வுலகில் தேவன் தெரிந்து கொண்டு, கல்வி மான்களையும் ஐசுவரியவான்களையும் வெட்கமடையும்படிச் செய்திருக்கிறார்! என்பதை நினைவுகூருங்கள்.

நீங்கள் இருக்கும் வண்ணமாகவே தேவன் உங்களை நேசிக்கிறார். நீங்கள் பரீட்சையில் தேர்ச்சியடைந்தீர்களா? அல்லது இல்லையா? என்பதைக் கொண்டு, தேவன் தன்னுடைய அன்பில் பாரபட்சம்

காட்டுவதேயில்லை. உங்களை அவர் ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக "உன் பரீட்சை மதிப்பெண்களை என்னிடம் காட்டு!" என தேவன் ஒருபோதும் சொல்லமாட்டார்!

நீங்கள் ஒருவேளை 'காதல் அன்பில்' தோல்வியடைந்திருக்கலாம். உங்களைத் திருமணம் செய்துகொள்வார் என நீங்கள் நம்பியிருந்தவர் இப்போது வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்! இதுபோன்ற சமயத்திலும், நீங்கள் அழுகிறீர்கள்! எல்லா வாலிபப் பிள்ளைகளுமே இது சமயங்களில் அழத்தான் செய்கிறார்கள்.

ஆனால், நீங்கள் நம்பியிருந்த வாலிபர் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்த செயல்... 'அந்த வாலிபன்' உங்களுக்காகத் தேவனுடைய சித்தத்தில் **இல்லையென்பதையே** நிரூபித்திருக்கிறது! இவரைக் காட்டிலும் மேலான யாரோ ஒருவர் அல்லது மேலான ஏதோ ஒன்றை தேவன் உங்களுக்காகவே வைத்திருக்கிறார். அந்த ஏதோ ஒன்று, தேவனுக்காக நீங்கள் ஊழியம் செய்திட தனிமையாய் இருக்க வேண்டியதாய் கூட இருக்கலாம்!!

இந்த உலகத்திலுள்ள வேறு எதைக்காட்டிலும் அல்லது வேறு யாரைக் காட்டிலும் **தேவன் ஒருவரே நமக்கு மிக அருமையானவர்** என நாம் புரிந்து கொள்ளும்படிக்கே அநேக நிகழ்ச்சிகள் நம் வாழ்வில் சம்பவிப்பதற்கு தேவன் அனுமதிக்கிறார்! ஆகவே, இன்றிலிருந்தாவது இந்தப் பூமியிலுள்ள எல்லாவற்றைக் காட்டிலும் தேவனே உங்களுக்கு மகா சௌந்தரியமுள்ளவராய் மாறுவாராக!!

அதேபோல், தங்கள் பெற்றோர்களால் கைவிடப்பட்டவர் களுக்கும் ஓர் உண்மையை நான் கூற விரும்புகிறேன். "உங்களை ஏன் உங்கள் பெற்றோர்கள் புறக்கணித்தார்கள்?" என்பதைக் குறித்த காரணத்தை அறிந்திட இனியும் முயற்சிக்காதீர்கள். நீங்கள் ஏதோ 'பிழையாக' உருவாகிவிடவில்லை. ஏனெனில் **அநாதி காலத்திற்கு முன்பே** உங்கள் நாட்களெல்லாம் தேவனுடைய புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறது என வேதம் திட்டமாய் கூறுகிறது (சங்கீதம் 139:15, 16).

ஆம், உலகத்தோற்றத்திற்கு முன்பே நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறீர்கள் (எபே.1:4,11). ஆகவே, உங்கள் பெற்றோர் களின் தவறுகளுக்கு நீங்கள் எவ்விதத்திலும் பொறுப்பாளி அல்ல!

"ஓர் குடும்பம்" வேண்டும் என்ற ஏக்கத்தில் நீங்கள் நீண்ட காலமாக நலிவடைந்துவிட்டீர்கள். இப்போதோ உங்களுக்கு ஓர் நல்ல **பரலோகத் தகப்பன்** கிடைத்துவிட்டாரே! அந்தத் தகப்பன், தன் குடும்பத்தில் உங்களையும் ஓர் பங்காக மாற்றிவிட விரும்புகிறாரே! இந்த சிலாக்கியத்தை எண்ணியே நீங்கள் எப்போதும் களிகூர்ந்

திடுங்கள்!! இவ்வாறு தேவனுடைய குடும்பத்தில் நீங்கள் ஓர் அங்கமாக மாறிய பிறகு "அவர் தன்னுடைய **சொந்தப் பிள்ளைகளை** *எக்காலத்தும் புறக்கணிக்கவே மாட்டார்" என்ற உண்மையை மாத்திரம் ஒருபோதும் மறந்துபோகாதீர்கள்.*

ஓர் நித்தியமான அன்பினால் அவர் உங்களை நேசித்து அந்த அன்பை உங்கள் மீது பொழிந்துவிட்டார்! "தேவனாகிய பிதாவின் கரங்களின்அரவணைப்பில் பத்திரமாய் இருக்கும் ஒரு குழந்தையைப் போலவே" உங்களை எப்போதும் கற்பனை செய்து கொள்ளுங்கள். நீங்கள், அவருடைய சாயலில்தான் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறீர்கள்! உங்களை ஆசீர்வதித்துவிடவே தீராத வாஞ்சை கொண்டிருக்கிறார்! நீங்கள் கூப்பிடும் வேளையெல்லாம் உங்கள் முன் தோன்றுவதற்கு அவர் எப்போதும் ஆயத்தமாயிருக்கிறார்!!

அவர் உங்களுக்காக சேமித்து வைத்திருக்கும் சகலத்தையும் உங்களுக்குக் காண்பித்திடும் நாளுக்காகவே அவர் காத்திருக்கிறார். இந்த பூமியிலுள்ள எந்த வீட்டைக் காட்டிலும் அல்லது சுதந்திரத்தைக் காட்டிலும், அவர் ஆயத்தம்செய்து வைத்திருக்கும் மகா மேன்மையான மாளிகையில் நீங்கள் வாழ்வதற்கு, அவர் உங்களை அந்நாளில் எடுத்துச் செல்வார்! ஆனால், அவருடைய பிள்ளையாய் மாறும்படி **உங்கள் முன் ஏந்தி நிற்கும் அவருடைய கரத்தின் அழைப்பை** *நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமே! அவருடைய குடும்பத்தின் ஓர் அங்கமாய் நீங்கள் மாறிட வேண்டுமே! அவ்வாறு நீங்கள் மாறிவிட்டால், அவருடைய வல்லக் கரத்திலிருந்து உங்களை 'யாரும்' பறித்துக் கொள்ளவே முடியாது!! ஆகவே உங்கள் முழு ஜீவியத்தையும் அவருக்கே கொடுத்துவிடுங்கள்.*

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் **தேவனுடைய பிள்ளைகளாகும்படி,** *அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" என்றே சத்திய வேதம் கூறுகிறது (யோவான் 1:12).*

நீங்கள் மாத்திரம் உங்களை ஓர் பாவியென ஒத்துக்கொண்டு உங்கள் பாவங்களுக்காக உயிர் தந்த "இயேசுவின் மரணத்தை" ஏற்றுக் கொண்டால், நீங்கள் உடனடியாக பரலோகப் பிதாவின் சொந்தப் பிள்ளையாக மாறிவிட முடியும்! உங்கள் எல்லாப் பாவங்களுக்காகவும் மனந்திரும்பி, அவைகளை விட்டுவிடுங்கள். அப்போது, அவர் உங்களுக்காக சிந்திய தன்னுடைய இரத்தத்தினால் உங்கள் பாவங்கள் அனைத்தையும் கழுவி சுத்தம் செய்துவிடுவார். இவ்வேளையில், உங்களுக்கு விரோதமாய் தவறு செய்த யாவரையும்....'உங்கள் பெற்றோர்களையும்' சேர்த்தே, மன்னித்துவிடுங்கள்! கடந்த கால

ஞாபகங்கள் உங்களை அச்சுறுத்தவோ அல்லது ஆக்கினைப்படுத்தவோ சிறிதும் இடங்கொடுத்துவிடாதிருங்கள். ஏனெனில், கடந்த கால நிகழ்ச்சிகளைக் குறித்து ஓர் குற்றமுள்ள ஆக்கினை உணர்வை நீங்கள் கொண்டிருந்தால், உங்கள் ஜீவியத்தில் தேவன் கொண்டிருக்கும் சித்தத்தை நீங்கள் ஒருக்காலும் நிறைவேற்றிடவே முடியாது.

ஆம், உங்கள் கடந்த காலத்தை நிரந்தரமாய் உங்கள் முதுகுக்குப் பின்னால் போட்டுவிடுங்கள்! மேலும் அந்த கடந்த காலத்தை இயேசுவின் இரத்தத்திற்குக் கீழாகக் கொண்டுவந்துவிட்டு, நீங்களோ உங்கள் முன்வைக்கப்பட்ட **எதிர்காலத்தை நோக்கி** முன்னேறுங்கள்! உங்களைச் சுத்தமுள்ளவராய் மாற்றுவதற்காக மாத்திரம் அல்லாமல்..... நீங்களே உங்களை "நான் சுத்தமுள்ளவன்" என உணரும்படிக்கும் இயேசு பாடுபட்டு மரித்தார். கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் என்று பிரவேசித்தாரோ அன்றே நீங்கள் தேவனுக்கு முன்பாய் நீதிமான் களாக்கப்பட்டீர்கள்! ஆகவே தேவன் உங்களைப் பார்க்கும்போது "உங்கள் முழு ஜீவியத்திலும் நீங்கள் பாவமே செய்யாதவர்கள் போலவே" காண்பார். இந்த உண்மையைக் குறித்த உணர்வு, உங்கள் இருதயத்திற்கு எப்போதும் மகிழ்ச்சியைக் கொண்டுவருவதாக!

மேலே நான் குறிப்பிட்டபடி செய்து, மகிழ்ச்சியில் பிரவேசித் திருக்கும் என்னைப் போன்ற அநேகரைப் போலவே **நீங்களும்** தேவனுடைய இந்த ஆச்சரியமான குடும்பத்திற்குள் பங்கடைந்திட முடியும்!

பிறகு, நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போதெல்லாம், தேவன் உங்கள் இருதயத்திற்குள் பேசுவதை நீங்கள் கேட்பீர்கள்! உங்கள் ஜெப வேளையில், நீங்கள் அவரிடம் பேசும்போது, பரலோகத்திலிருக்கும் தேவன் உங்கள் ஜெபத்திற்கு செவிகொடுத்து அதற்குரிய பதிலையும் தருவாரென்ற நிச்சயத்தையும் நீங்கள் பெற்றுவிடுவீர்கள்!

ஒரு சமயம், பிதாவானவர், இயேசுவிடம் "நீர் என்னுடைய நேசக் குமாரன், உம்மில் நான் பிரியமாய் இருக்கிறேன்" எனக்கூறினார். அதே போலவே, உங்கள் மீதும் பிரியங்கொண்ட பிதா உங்களைப் பார்த்து "என்னுடைய பிரியமான பிள்ளையே!" என ஒருநாளில் கூப்பிடத்தான் போகிறார்! **ஆகவே, இனியும் நீங்கள் அழுதிட வேண்டாம்!!**

இனி நீங்கள் ஓர் அனாதை இல்லை! நீங்களோ ஓர் ராஜாவின் சொந்தப்பிள்ளை!!

சில வருடங்களுக்கு முன்பாக ஒரு கடிதத்தை நான் படித்தேன். இங்கு நான் உங்களுக்கு எடுத்துக்கூற முயற்சிக்கும் உண்மைகள் யாவையும் அந்தக் கடிதம் மிக நேர்த்தியாய் வடிவமைத்திருந்ததை நான் கண்டேன். அந்த கடிதத்தை "**பாரீ ஆதம்ஸ்**" என்ற பரிசுத்தவான்

எழுதியிருந்தார். அபிஷேகத்தினால் நிறைந்த, பரவசம் மிகுந்த அந்தத் தொகுப்புகளை அந்தப் பரிசுத்தவான் அனுமதியோடு கீழே நான் குறிப்பிட்டிருக்கிறேன். அவைகளை கவனமாய் வாசித்து தியானியுங்கள்:

தகப்பனின் அன்புக் கடிதம்

(FATHER'S LOVE LETTER)

நீங்கள் வாசிக்கப்போகும் இந்தக் கடிதம் முற்றிலும் உண்மையானது. இந்த வார்த்தைகள் தேவனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிற படியால், இவைகளுக்கு செவிகொடுங்கள்! அப்போது, உங்கள் ஜீவியம் நிச்சயமாய் மாறிவிடும். அவர் உங்களை நேசிக்கிறார்! உங்கள் ஜீவகால மெல்லாம் நீங்கள் வாஞ்சித்து தேடிய அன்புள்ள தகப்பன் இவரே! இந்த அன்பின் கடிதத்தை அவர்தான் உங்களுக்கு இங்கு எழுதுகிறார்:

என் பிள்ளையே . . .

★என்னை நீ அறிந்திருக்கமாட்டாய், ஆனால் உன்னைப்பற்றிய சகலத் தையும் நான் அறிந்திருக்கிறேன் .... சங்கீதம்.139:1

★உன் உட்காருதலையும் உன் எழுந்திருக்குதலையும் நான் அறிந்திருக் கிறேன்.... சங்கீதம்.139:2

★உன் வழிகள் எல்லாம் எனக்குத் தெரியும் .... சங்கீதம் 139:3

★உன் தலையிலுள்ள முடிகளைக்கூட நான் எண்ணியிருக்கிறேன்.. மத்.10:31

★ஏனெனில் நீ என்னுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாய்.... ஆதியாகமம். 1:27

★நீ எனக்குள் பிழைக்கிறாய், அசைகிறாய், இருக்கிறாய்.... அப். 17:28

★ஏனெனில் நீ என்னுடைய சந்தானம்.... அப்போஸ்தலர் 17:28

★நீ கர்ப்பத்தில் உருவாகுமுன்னே உன்னை அறிந்திருக்கிறேன்.... எரே. 1:5

★இந்த உலகத்தை சிருஷ்டிப்பதற்கு முன்பே உன்னைத் தெரிந்து கொண்டேன் .... எபேசியர்.1:12

★ஏதோ 'பிழையாக' நீ உருவாகிடவில்லை! ஏனெனில் உன் நாட்களெல் லாம் என் புத்தகத்தில் எழுதியிருக்கிறது .... சங்.139:15-16

★உன் பிறப்பின் காலத்தையும், குடியிருப்பின் எல்லையையும் நானே முன்குறித்திருக்கிறேன் .... அப்போஸ்தலர் 19:26

★பிரமிக்கத்தக்க அதிசயமாய் நீ உண்டாக்கப்பட்டாய்.... சங்.139:14

★உன் தாயின் கர்ப்பத்தில் நானே உன்னை உருவாக்கினேன்.... சங்.139:13

★ஒருநாளில்உன் தாயின் வயிற்றிலிருந்து நானே எடுத்தேன்... சங்.71:6

★என்னை அறியாதவர்களால், நான் 'பிழையாய்' காட்டப்பட்டு விட்டேன், யோவான். 8:41-44

★நான் தூரமானவனும் கோபமுள்ளவனும் அல்ல.... மாறாக அன்பின் முழு

ரூபமும் நானே .... 1 யோவான்.4:16

★ உன்னிடம் முழுமையாய் அன்பு பாராட்டுவதே என் விருப்பம்.... 1யோவான்.3:1

★ ஏனெனில், நீ என் பிள்ளை! நான் உன் தகப்பன்!!.... 1யோவான்.3:1

★ உன் உலக தகப்பன் தருவதைக் காட்டிலும் அதிநன்மையானவைகளையே நான் உனக்குத் தருகிறேன்.... மத்தேயு 7:11

★ ஏனெனில், நானே பூரண சற்குணமான தகப்பன்.... மத்தேயு 5:48

★ நீ பெறும் எந்த நன்மையான ஈவும் என் கரத்திலிருந்தே வருகிறது.... யாக்கோபு.1:17

★ நானே உனக்கு கொடுப்பவன்! உன் தேவைகள் அனைத்தையும் தருவேன்!.... மத்தேயு 6:31-33

★ உன் எதிர்காலத்திற்கு நான் வைத்திருக்கும் திட்டங்கள் முழுவதும் நம்பிக்கைக்குரியதே .... எரேமியா.29:11

★ ஏனெனில், அநாதி சிநேகத்தால் நான் உன்னை சிநேகிக்கிறேன்... எரே.31:3

★ உன்னைக் குறித்து நான் கொண்டிருக்கும் சிந்தைகள், கடலின் மணலைப் பார்க்கிலும் அதிகம் .... சங்கீதம்.139:17,18

★ உன்மீது கொண்ட மகிழ்ச்சியில் நான் களிகூர்ந்து பாடுகிறேன்... செப்.3:17

★ உனக்கு நன்மை செய்வதிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன்.... எரேமியா.32:40

★ ஏனெனில், நீயே எனது பொக்கிஷமும் நிறைந்த சம்பத்தாயும் இருக்கிறாய், யாத்திராகமம்.19:5

★ உன்னை வாழ வைப்பதற்கு, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் நாடுகிறேன்.... எரேமியா.32:41

★ பெரியதும் அதிசயமுமான காரியங்களை உனக்குக் காட்ட நான் விரும்புகிறேன் .... எரேமியா.33:3

★ உன் முழு இருதயத்தோடும் என்னைத் தேடிவிடு, அப்போது என்னைக் கண்டடைவாய்.... உபாகமம்.4:29

★ என்னிடத்தில் மனமகிழ்ச்சியாய் இரு, நானே உன் இருதயத்தின் விருப்பங் களை அருளிச்செய்வேன் .... சங்கீதம்.37:4

★ ஏனெனில், அந்த விருப்பங்களை நானே உனக்குத் தந்தேன்.... பிலி.2:13

★ நீ நினைப்பதற்கும் மேலாய் அதிகமாய் கிரியை செய்திட நான் வல்லவரா யிருக்கிறேன் .... எபேசியர்.3:20

★ நானே உன் இருதயத்தை தேற்றுபவன் .... 2தெசலோனிக்கேயர்.2:16,17

★ உன் சகல உபத்திரவங்களிலும் ஆறுதல் செய்யும் தகப்பனாகவே இருக்கிறேன்.... 2கொரிந்தியர் 1:3,4

★நீ நொருங்குண்ட இருதயமாய் இருக்கும்போது, உனக்கு சமீபமா யிருக்கிறேன்.... சங்கீதம்.34:18

★ஒரு ஆட்டுக்குட்டியை மேய்ப்பன் சுமப்பதுபோல, என் இருதயத்திற்கு அருகில் உன்னை அணைத்து சுமக்கிறேன்.... ஏசாயா 40:11

★உன் கண்ணீர் யாவையும் ஒரு நாளில் நான் துடைப்பேன்.... வெளி.21:4

★நீ பூமியில் அடைந்த சகல துயரத்தையும் ஒழித்துப்போடுவேன்.... வெளிப்படுத்தின விசேஷம் 21:4

★நான் உன் தகப்பன்! என் குமாரன் இயேசுவை நேசித்ததைப் போலவே உன்னையும் நேசிக்கிறேன் .... யோவான்.17:23

★ஏனெனில், உன்மீது நான் கொண்ட அன்பு இயேசுவில் இருந்துதான் முதலில் வெளிப்பட்டது.... யோவான்.17:26

★குமாரன் இயேசு, என்னுடைய தன்மையின் சொரூபமாகவே வந்தார்.... எபிரெயர்.1:3

★நான் உனக்கு விரோதாய் அல்ல! உன் பட்சத்தில்தான் இருக்கிறேன் என்பதை வெளிப்படுத்தவே குமாரன் வந்தார் .... ரோமர் 8:31

★உன் பாவங்களை 'விரல்விட்டு' எண்ணிக்கொண்டிருக்கிறேனோ? இல்லவே இல்லை!.... 2 கொரிந்தியர்.5:19

★நானும் நீயும் ஒப்புரவாகிடத்தானே இயேசு மரித்தார்!.... 1கொரி. 5:18,19

★உன்மீது நான் கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமே, அவரின் மரணம்... 1யோவான்.4:10

★உன் நேசத்தை அடையும்படியே நான் நேசித்த அனைத்தையும் (குமாரனையே!) உனக்காகத் தந்துவிட்டேன்.... ரோமர்.8:32

★என் குமாரன் இயேசுவை நீ பரிசாய் ஏற்றுக்கொண்டதால், என்னையே ஏற்றுக்கொண்டாய் .... 1யோவான்.2:23

★என் நேசத்தைவிட்டு உன்னை, இனி எதுவும் 'மீண்டும்' பிரித்திட முடியாது ....ரோமர்.8:38,39

★உன் தகப்பன் வீட்டிற்கு வந்துவிடு, பரலோகம் இதுவரை காணாத விருந்தை நான் உனக்குத் தருவேன் .... லூக்கா 15:7

★நான் எக்காலத்தும் உன் தகப்பனாய் இருக்கிறேன், இனியும் உன் தகப்பனாய் எக்காலத்தும் இருப்பேன் .... எபேசியர்.3:14,15

★என் ஏக்கமான ஒரே கேள்வியெல்லாம், **நீ என் பிள்ளையாய் இருப்பாயா? ...** யோவான்.1:12,13

★**நான் உனக்காகவேதான் காத்திருக்கிறேன் ....** லூக்கா.15:11-32

மிகுந்த அன்புடன், உன் அப்பா,

சர்வவல்ல தேவன்.

"தகப்பனின் கடிதம்" ஆங்கிலத்தில் வாசித்திட http://www. fathersloveletter.com

தேவன் உங்கள் கணவர்

2

“**உ**ன் சிருஷ்டிகரே உன் நாயகர் (கணவர்); சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வ பூமியின் தேவன் என்னப்படுவார்” (ஏசாயா.54:5) என்று **உன் கர்த்தர்** சொல்லுகிறார் என்ற வசனம் எத்தனை ஆறுதலாய் இருக்கிறது.

எனக்கு மிகவும் நெருக்கமான ஒரு சிநேகிதி, ஓர் கொடூரமான விபத்தில் தன் கணவரை இழந்துவிட்டாள். தன் இளவயதாகிய மனைவிக்கு கடைசி வாழ்த்துதல்கூட சொல்ல முடியாத துர்ப் பாக்கியத்தில் அவர் மரித்தார். குடிவெறியில் தாறுமாறாய் ஓட்டிய ஓர் வாகன ஓட்டுனரால் அவருடைய வாழ்க்கை, சாலையில் பறிபோனது! அவளுடைய கணவர் ஓர் ஜெபக்கூட்டத்திற்குச் செல்லும் பாதையில் தான் இந்த விபத்து ஏற்பட்டது.

இதேபோல், என்னுடைய இன்னொரு சிநேகிதியும் தன்னுடைய கணவரை ஓர் சாதாரண சுகவீனத்தில் இழந்தாள். இவ்வாறு ஒவ்வொரு வீட்டிலும், விரும்பத்தகாத விருந்தாளியான “மரணம்” எந்த அழைப்பும் இல்லாமலே வந்துவிடுவதை நாம் காண்கிறோம்! இவ்வித மரண சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரமே, அது வழங்கிய கொடுமையான வேதனைகளையும், தனிமையையும் அறிந்திட முடியும்! இதுபோன்ற சமயங்களில், நீங்கள் நேசித்தவர்களின் நினைவுகள்தான் உங்கள் சிந்தையை எப்போதும் நிறைத்திருக்கும்.

அந்த நினைவலைகளில், இழந்துபோன கணவரோடு மீண்டும் அந்த மகிழ்ச்சியின் நாட்களை வாழவேண்டும் என்ற விருப்பமே உங்களுக்குள் மேலோங்கியிருக்கும். ஆனால், அது சாத்தியமாகாதே!

நெஞ்சத்தில் விம்மி அழும் உங்கள் துக்கங்களுக்குப் பகலிலும், இரவிலும் நீங்கள் வடிக்கும் கண்ணீரே ‘கவலை தீர்க்கும் வடிகாலாய்’ இருப்பதைக் காண்கிறீர்கள். ஆம், உங்கள் கண்ணீர்களையெல்லாம் நம் ஆண்டவர் கவனிக்கிறார் என்றே சத்திய வேதம் கூறுகிறது: “தேவரீர்,

இராச்சாமத்தில் நான் துன்பத்தில் அங்குமிங்கும் புரண்டு துவழ்வதை நீர் காண்கிறீர். என் கண்ணீர்கள் யாவையும் உம் துருத்திகளில் வைத்திருக்கிறீர். என் கண்ணீர் துளிகள் ஒவ்வொன்றையும் உம்முடைய புத்தகத்தில் கணக்கெழுதி வைத்திருக்கிறீர்'' என வாசிக்கிறோம் (சங்கீதம்.56:8 - LIVING மொழிபெயர்ப்பு).

தன் இளங்கணவரை, ஆண்டவருடைய அழைப்பிற்குச் செல்லும்படி இழந்த ஓர் பக்தியுள்ள சகோதரி, தன் கணவரை இழந்த அதே மாதத்தில் கீழ்கண்ட A.W. டோசர் எழுதிய செய்தியை வாசித்தார்கள். நான் அந்த சகோதரியை சந்தித்தபோது, அந்தச் செய்தியின் மூலமாய் தேவனுடைய பெரிதான ஆறுதலை அச்சகோதரி கண்டடைந்தார்கள் என்பதைக் கண்டேன்:

''அதோ அங்கே சில பெண்கள் கூட்டத்தைக் காண்கிறேன்! அவர்கள் ஒரு வருடத்திற்கு முன்பாகவோ அல்லது சில மாதங்களுக்கு முன்பாகவோ அல்லது சில வாரங்களுக்கு முன்பாகவோ அல்லது சில நாட்களுக்கு முன்பாகவோ, வல்லமையும் ஞானமும் நிறைந்த 'ஓர் இளைஞனைத் தங்கள் துணையாய்' பெற்றார்கள்! அந்த சம்யுக்த இளைஞன் தங்களின் வாழ்க்கை பாரங்களையெல்லாம் தன்மீது ஏற்றுக்கொண்டபடியால்.... அவள், தன் வாழ்க்கை பொறுப்பின் அழுத்தத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெற்று விட்டாள். அந்த இளம் கணவனின் நட்பில் வாழ்ந்த நாட்கள்தான் எத்தனைப் பிரகாசமும் மகிழ்ச்சியுமாய் அவளுக்கு இருந்தது! ஆனால், அந்தோ! காரிருளான அந்த நாள் வந்தபோது தன் நேசத்துக்குரியவரை அவ்விருள் பறித்துச் சென்றுவிட்டதே! ஆ, இப்போது தனிமை! வெறுமை! வறட்சி! சொல்லொண்ணா பாரமும் கவலையும் இன்று அவளை கவ்விக் கொண்டது. பாதிப்புக்குள்ளான ஸ்திரீயே! நான் சொல்வதை சற்று கவனி: உன் வலப்பக்கத்தில் ஒருவர் நடந்துவருகிறார்! அவர், இந்த உலகில் வாழ்ந்த எந்த அன்புள்ள கணவனைக் காட்டிலும் எந்த ஞானமுள்ள கணவனைக் காட்டிலும் எந்த பெலசாலியான கணவனைக் காட்டிலும்.... அதிக அன்புள்ளவர்! அதிக ஞானமுள்ளவர்! அதிக பெலனானவர்! உன்னை நடத்திச் சென்று உதவுவதற்கு சர்வ சம்பூரணர்!! அவர் உன் வாழ்க்கையில் உள்ள சகல பாரங்களையும் பொறுப்புகளையும் தாங்கி ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கிறார்! நீ நினைப்பதைக் காட்டிலும் மேலானவைகளைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். வெறுமையும் துன்பமும் நிறைந்த உன் இருதயத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் அவர் வந்து அமர்ந்திட காத்துக் கொண்டிருக்கிறார். உன்னிடம் வந்து தங்கிட நீ அவருக்கு இடம் கொடுத்துவிட்டால், உன் எல்லா தனிமையும் நெஞ்சின் வேதனையும் உன்னைவிட்டு நிரந்தரமாய் மறைந்துவிடும்!

(A.W.டோசர்)

இன்னொரு சகோதரி தன் குடிகார கணவரோடு வாழ்ந்த பொறுமை, கரை கடந்து போனதாகவும், இனியும் அவரோடு அவளால் வாழமுடியாது எனவும் எண்ணினாள். அவளுடைய சிநேகிதிகளும் அவ்விதமே, அந்தக் கணவரை விட்டுப் பிரிந்துவிடும்படிக் கூறினார்கள். அவள் தன் எல்லா நம்பிக்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் இடத்திற்கு

வந்துவிட்டாள். அவளால் எங்கும் புகலிடம் காண முடியவில்லை! தானாகவே சமாளித்துக் கொள்ளும் முழு பெலனையும் இழந்து விட்டாள்!!

இதுபோன்ற துன்பந்தான் உங்களுக்கும் இருக்கிறதோ? உங்கள் கணவரின் பிரிவினால் எழுந்த தனிமை உங்களை வாட்டுகிறதோ? பல்வேறு ஞாபக அலைகள் உங்களுக்குள் மன வருத்தத்தையும் சஞ்சலத்தையும் தருகிறதோ? சீரழிவுக்குள் நடத்திய **"உங்களின் கோபக் கொந்தளிப்பு"** *அன்று ஏற்படாமலிருந்தால் நலமாய் இருந்திருக்குமே என இப்போது எண்ணுகிறீர்களோ!*

ஓர் 'தனிமையான' பெற்றோராய் (தாயாய்) நீங்கள் மாறினாலும், உங்கள் பிள்ளைகளால் குழப்பமான சூழ்நிலைக்கு ஆளானாலும், துரும்பு உதவியும் செய்யாத உறவினர்களால் நீங்கள் சூழப்பட்டிருந் தாலும்.... நம் ஆண்டவரால் கூடாத காரியம் எதுவுமே இல்லை! நீங்கள் மாத்திரம் ஒன்று பாக்கியில்லாமல் **உங்கள் முழுமையையும்** *அவருக்கே ஒப்புக்கொடுத்துவிட்டால்.... அவர் உங்கள் வாழ்க்கையில் பிரவேசித்து, சாத்தான் கட்டி வைத்த ஒவ்வொரு முடிச்சுகளையும் அவிழ்த்து, ஒவ்வொரு பிரச்சனைக்கும் தீர்வு அளிப்பார்!*

ஆகவே, தயவுசெய்து இனியும் நீங்கள் அழவேண்டாம்! நொறுங்கிப்போன உங்கள் வாழ்க்கையின் தூள்களை அவரிடத்தில் கொண்டுவந்து சமர்ப்பியுங்கள். அவர், கைதேர்ந்த குயவன்! **நொறுங்கி விழுந்த ஒவ்வொரு பாண்டத்தையும் அவரால் மீண்டும் உருவாக்கிட முடியும்.** *ஏனெனில், நாம் அந்தக் குயவனின் கையிலுள்ள களிமண்ணைப் போலவே இருக்கிறோம்! (எரேமியா.18:6).*

இன்னும் சிலருடைய கணவர் வாழ்க்கையில், மாறுபாடான பரத்தை குணமுள்ள பெண்கள் பிரவேசித்தபடியால், சொல்லிமுடியா வேதனையையும் துன்பத்தையும் சந்திக்கிறார்கள். நீங்களும் இது போன்று வேதனைகளில் சிக்கி இருக்கிறீர்களோ? இவ்வேளையில் உங்கள் கணவரையும் அந்த ஸ்திரீயையும் மன்னித்திட ஆண்டவர் உங்களுக்கு உதவி செய்திட முடியும்! இந்த வேதனையிலும்கூட உங்கள் வாழ்க்கை சலிப்படைய அவசியமே இல்லை! இவ்வேளையில் கோபக்கனலின் கண்ணீரைச் சிந்தாதிருங்கள். இந்தப் பூமியில் உங்கள் துணைவரால் ஏற்பட்ட நஷ்டத்தை ஆண்டவர் பூர்த்தி செய்திட முடியும். உங்கள் கணவரின் இருதயத்தை மாற்றி மீண்டும் உங்களிடம் திரும்பி வரும்படிச் செய்ய அவரால் முடியும். நம் தேவன் அதிசயங் களைச் செய்திடும் தேவன்! இவ்வேளையில், வெறுப்பினிமித்தம் யாதொரு திட்டமும் மனதில் தீட்டிவிடாதிருங்கள்.

அதற்குப் பதிலாய் உங்கள் இருதயத்தை தேவன் தம்முடைய அன்பினால்

நிரப்பும்படியும், உங்கள் கணவரிடத்தில் கசப்பான வார்த்தைகளுக்குப் பதிலாய் அன்புள்ள வார்த்தைகளைப் பேசும்படியான கிருபையைத் தரும் படியும் ஜெபம் செய்யுங்கள்!

நொறுங்குண்ட ஆவி கொண்டவர்களுக்குத் தேவன் சமீபமாகவே இருக்கிறார்!!

ஒருவேளை, திருமணத்திற்காக நீண்ட வருடங்களாய் காத்திருந்த சகோதரியாய் நீங்கள் இருந்திடக்கூடும்.... இருப்பினும் இன்றுவரை யாதொரு ஒழுங்கும் கைகூடாததைக் கண்டு, நீங்கள் மனந்தளர்ந்து போய் இருக்கலாம். இவ்வேளையில், உங்கள் ஆறுதலை "இயேசுவிடம் மாத்திரமே" பெற்றுவிட நாடுங்கள். உங்கள் அன்பு பிதா ஏற்கெனவே "ஏற்ற துணையான தேற்றரவாளன்" **பரிசுத்தாவியை** *உங்களுக்குத் தந்திருக்கிறார். அவர் உங்களைவிட்டு விலகவுமாட்டார்! திக்கற்றோராய் கைவிடவுமாட்டார்!!*

இத்தருணத்தில், மற்றவர்கள் திருமணமாவதைக் குறித்து, ஒவ்வொன்றாய் நீங்கள் கேள்விப்படும்போது, அந்த சமயங்களில் உங்கள் மனது, அதிகமாய் பாதிக்கப்படக்கூடும்!

உங்களுக்கோ, திருமணமான அந்தப் பெண்ணை மனதார வாழ்த்துவதற்கு முடியாதிருப்பதையும் காண்கிறீர்கள். உங்கள் அறைக்கு ஓடிச் சென்று குமைந்து அழுவதைக் காட்டிலும்..... உங்கள் வேதனையை உணர்ந்து பரிவுடன் அருகில் நிற்கும் **இயேசுவை தரிசிக்கவே** *நாடுங்கள்!!*

அழுகையின் காரிருளையும், 'அதை மாற்றி' சமாதானம் தரும் பகலையும் தேவன் வைத்திருக்கிறார். தனக்குப் பிரியமான பிள்ளை துன்பத்திற்குள் போகும் சமயம் அவர் தனித்து ஒதுங்கி நின்று விடமாட்டார். அவர் இருதயம் நமக்காகவே பரிதபிக்கிறது. அவர் உங்களை நெருங்கி..... தொட்டு..... தன் சொஸ்தப்படுத்தும் ஔஷதத்தை உங்கள் இருதயத்தில் ஊற்றி..... **உங்கள் துன்பங்களை நீங்கள் தாங்கிக் கொள்ளும் படி செய்துவிடுவார்!** *ஆம், அவருடைய நுகம் மெதுவாயும், அவருடைய சுமை இலகுவாயும் மாறிவிடும்! நீங்கள் மாத்திரம், அனல் போன்ற உபத்திரவங்களில் உண்மையுள்ளவர்களாய் நிலைத்து நின்று விட்டால் ..... அந்த உபத்திரவங்கள்,* **நித்தியமான கன மகிமையை** *உங்களுக்கு கொண்டு வருவதைக் கண்டு ஆனந்திப்பீர்கள்!!*

தங்கள் கணவன்மார்களை ஆண்டவருக்கென்று இரத்த சாட்சியாய் இழந்துவிட்ட விதவைகளின் சாட்சிகளை நான் கேட்டிருக்கிறேன். **அவர்களின் சாட்சிகளில் தொனித்த 'ஜெயம்'** *என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது! தங்கள் கணவனைக் கொலை செய்தவர்களை இவர்களால் எப்படி மன்னிக்க முடிந்தது? இதுபோன்ற சமயங்*

களில் “பிதாவே இவர்களுக்கு மன்னியும், இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்” என சிலுவையில் அறையப் பட்ட சமயத்தில் ஜெபம் செய்த நம் குரு, பிறரை மன்னிக்கும் இந்த மாபெரும் உதவியை நமக்கும் செய்திட முடியும்!!

வடஇந்தியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததற்காக கோடாரி யால் வெட்டி கொலை செய்யப்பட்ட கணவருடைய இளம் ஏழை விதவையை நான் சந்தித்தேன். அவளுடைய சாட்சி என் நெஞ்சை நெகிழச் செய்தது! தன் சிறு குழந்தைகளோடு நின்று கொண்டிருந்த அந்த விதவை “என் கணவனின் இரத்தம் சிந்தப்பட்ட அதே இடத்தில் ஓர்சபை எழும்ப வேண்டும்! அதுவே என் ஜெபம்!!” என கெம்பீரித்தார். அந்த சகோதரியின் கண்ணீர் மெய்யாகவே “**வாகை சூடும் ஜெயத்தின் கண்ணீராகவே**” இருந்தது. நம் ஆண்டவர் இயேசுவின் இரத்தமும், பழிவாங்குவதற்கு கூப்பிட்ட ஆபேலின் இரத்தத்தைப் போலல்லாமல் இரக்கத்திற்காகக் கெஞ்சிய இரத்தமாகவே இருந்தது. எந்த ஒரு உண்மையான தேவனுடைய பிள்ளையும், நாம் வாழும்படி ஆண்டவர் கற்பித்த மலைப்பிரசங்கத்தின்படி நிச்சயமாய் வாழ்ந்திட முடியும்! (மத்தேயு.5,6,7 அதிகாரங்கள்).

நம் ஆண்டவர் மெய்யாகவே விதவைகளுக்கும், தகப்பனற்றவர் களுக்கும் தேவனானவர்! ஓர் உவமையின் மூலமாய் “ஜெபத்தை” இயேசு கற்றுக்கொடுத்தபோது, தன் எதிராளியிடமிருந்து பாதுகாப்பிற் காய் ஓர் அநீதியான நியாயாதிபதியினிடத்தில் சென்ற “**ஒரு விதவைக்கே**” நம்மை ஒப்பிட்டுக் கூறினார். இந்த விதவை விடாப்பிடியாய் கெஞ்சி, தன் பாதுகாப்பைப் பெற்றுவிட்டாள்!

அதேபோல், மற்றவர்கள் “சிறிய தொகை” என எண்ணிய இரண்டு காசுகளை தேவனுக்குப் படைத்த **ஓர் விதவையைத்தான்** இயேசு அநேகருக்கு முன் பகிரங்கமாய் மெச்சிக் கொண்டார்! அவள் தந்த காணிக்கை, தன் ஏழ்மையில் தன் முழு ஜீவனத்துக்குரிய அனைத்தையும் கொடுத்த **அதிக விலைக்கிரயம்** கொண்ட காணிக்கையாகும்! இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது யாதெனில், நாம் அவருக்காகச் செய்திடும் “ஒவ்வொரு சிறிய தியாகங்களையும்” இயேசு பார்க்கிறார் என்பதேயாகும்!

அதுவும் குறிப்பாக நம் துன்பங்கள், கண்ணீர்களின் மத்தியில் படைத்திடும் தியாகக் காணிக்கைகளை இயேசு பரவசத்துடன் காண்கிறார்!!

இவ்வாறாகவே, பக்தியுள்ள விதவைகள் தங்கள் கண்ணீரை ஆண்டவரின் பாதத்தில் வைத்துவிட்டு “பரிசுத்தவான்களின் கால் களைக் கழுவும்” ஊழியத்தை, ஆண்டவரிடமிருந்து பெறுகிறார்கள்! என வேதம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறது (1தீமோத்தேயு.5:10).

நம் பிள்ளைகளைத் தேவனே இரட்சிப்பார்

3

"உன் பிள்ளைகளை **நான்** இரட்சித்துக்கொள்வேன்" என ஆண்டவர் கூறும் ஆறுதல் வார்த்தையை கவனியுங்கள் (ஏசா.49:25).

ஒருநாள், தொலை தூரத்திலிருந்து, ஒரு தாய் என்னிடம் தொலை பேசியில் பேசினாள். அவள் தன் மகனை சில நூறு மைல்கள் அப்பால் உள்ள ஒரு கல்லூரியில் படிப்பதற்கு அனுப்பியிருந்தாள். ஆனால் அவன் அங்கு சென்றவுடன், அவனுடைய நண்பர்கள் அவனை "ஒரு கிறிஸ்தவ மார்க்க - கண்மூடிகளான" **(Christian cult - group)** குழுவிற்குள் நடத்தி விட்டார்கள். இப்போது அவனோ தன் பாடங்களை முடிப்பதற்குப் பதிலாய், அந்த குழுவின் அங்கத்தினராய் மாறி, தன் பணம் அனைத்தையும் அக்குழுவிற்கே விரயம் செய்யத் துவங்கிவிட்டான். அந்தக் குழுவின் வழிகளையும் அவர்களைப் போன்ற சம்பாஷணை களையும் கற்றுக்கொண்டு, தன் குடும்பத்தின் மீதோ யாதொரு பற்றும் இல்லாதவனாய் நடந்து கொண்டான்.

அந்த குழுவினரோ, தங்கள் கிரியைகளை வேதாகமத்தைக் கொண்டே "தாங்கள் செய்வதுதான் சரியென" நியாயப்படுத்துகிற வர்களாய் இருந்தார்கள். ஆனால், அவர்களின் வழி எவ்வளவு தவறானது என்பதை, உணர்வுள்ள எந்தக் கிறிஸ்தவனும் எளிதில் காணும்படி யாகவே இருந்தது. அந்தக் கண்மூடித்தன குழுவின் தலைவனோ, தன்னுடைய குழுவின் அங்கத்தினர்கள், தங்கள் அன்றாட வாழ்க்கையில் என்ன செய்ய வேண்டுமென்ற சிறு சிறு காரியங்களைக்கூட கட்டளை கொடுத்து நடத்திச் சென்றான்! அந்த அளவிற்கு அங்கிருந்த அங்கத்தினர்கள் யாவரும் ஓர் நெருங்கிய குடும்பத்தாராய் இசைந்து வாழ்ந்தார்கள்! தாங்கள் மகிழ்ச்சியாய் இருப்பதாகவே அவர்கள் கூறிக் கொண்டார்கள்... ஆனால், அவர்களோ **வெறுமைக்குள்ளும் அடிமைத் தனத்திற்குள்ளும்** சிக்கியிருந்தார்கள். அந்த மோசமான குழுவின் பிடியிலிருந்து சிலர் மாத்திரமே தப்பி வெளிவர முடிந்தது!

தங்கள் பிள்ளைகள் வளர்ந்து வரும் சமயத்தில், பெற்றோர்கள் தங்கள் குடும்பத்தில் தேவனுக்கென நேரம் தராமல் இருந்ததே, பிள்ளைகளின் இதுபோன்ற நிலைக்கு காரணமாயிருக்கக்கூடும். ‘குடும்பத்தில் அசம்பாவிதங்கள் நடந்த பிறகுதான்’ இப்பெற்றோர்கள் தேவனைத் தேட துவங்குகிறார்கள். **இப்போது,** தங்கள் மகனிடம் தேவன் மாத்திரமே பேச முடியும் என்பதை உணர ஆரம்பிக்கிறார்கள்.

ஆம், அந்தத் தாயின் மகனைக் கட்டியிருக்கும் வலிமையான சங்கிலியை ஜெபமே உடைத்தெறிய முடியும்!

இன்னொரு வாலிப இளைஞனையும் நான் அறிந்திருக்கிறேன். அவன் ஓர் மிக அருமையான கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப் பட்டவன். அவனுடைய குழந்தைப் பருவத்திலிருந்தே “உலகத்திலிருந்து வேறுபிரிந்து வாழும் வாழ்க்கையைத்” தன் பெற்றோர்களால் போதிக்கப் பட்டிருந்தான். ஆனால் அவன் கல்லூரிக்குச் சென்ற பிறகு, அங்குள்ள சூழ்நிலையின் நெருக்கத்தில் கொடிய குடிபோதைக்குப் பலியாகி விட்டான்! இதனிமித்தம், சொல்லொண்ணா பாரம் அடைந்த அவனுடைய பெற்றோர்கள் ஜெபித்த ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுத்தபடியால், இன்று அவன் ஓர் சிறந்த கிறிஸ்தவ மகனாய் ஜீவிக்கிறான்!

இவ்வாறு தேவபக்தியுள்ள குடும்பங்களில் வளர்ந்த பிள்ளைகள் கூட சில சமயங்களில் பின்வாங்கிவிடுகிறார்கள். இவ்வுலகத்தின் இன்பங்களில் ஈர்க்கப்படும் சமயங்களில் ‘ஓர் தற்காலிகமான வீழ்ச்சிக்குள்’ பிரவேசிக்கிறார்கள். அதுபோன்ற காரிருள் நாட்களிலிருந்து, **தாய்மார்களாகிய நம் ஜெபமே** நம் பிள்ளைகளை மீட்டெடுக்க முடியும்.

எல்லா தாய்மார்களுக்குமே, தங்கள் பிள்ளைகளுக்காக அழ வேண்டிய நேரம் இருக்கத்தான் செய்கிறது!

சிலர், தங்கள் பிள்ளைகள் சரீரத்தில் அங்கவீனமாய் பிறந்ததிற்காகவோ, அல்லது சுகமாக்கிட முடியாத சில வியாதிகளுக்காகவோ அழுகிறார்கள்! வேறு சிலர், தங்கள் பிள்ளைகள் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்தாலும்... நல்ல மேய்ப்பனை விட்டு “தூர தேசத்தில் வாழ்பவர்களைப்போன்று” பெற்றோர்களோடு எந்த இணக்கமான தொடர்பும் வைத்துக்கொள்ளாத **‘கெட்ட குமாரனுக்காய்’** அழுகிறார்கள்! இன்னும் சிலர், தங்கள் மகனோ அல்லது மகளோ, பெற்றோர்களையே மறந்துவிட்டு ‘மார்க்க கண்மூடித்தனமானக் குழுவிற்குள்’ சிக்கிக் கொண்டதற்காக அழுகிறார்கள்! இது அல்லாமல், சில பிள்ளைகள் குடிக்கும், போதை மருந்திற்கும் அடிமையாகிறார்கள்! இன்னும் சில பிள்ளைகள் **தவறான சிநேகிதர் குழுவிற்குள்** அகப்பட்டுக்

கொள்கிறார்கள்! இன்னும் கொடியதாய், சிலர் குற்றங்கள் புரியும் வழிகளில் சென்று கைது செய்யப்பட்டு **சிறைச்சாலைக் கூண்டிற்குள்** வைக்கப்படுகிறார்கள்! ஆ, ஒரு தாயின் அழுகைக்கு இவ்வாறு எண்ணற்ற காரணங்கள் சம்பவிக்கிறதே!

இதுபோன்ற எல்லா சூழ்நிலைகளிலும், "**அந்தப் பிள்ளையும்**" ஏராளமான வாழ்வின் அழுத்தங்களுக்குள் சென்று கொண்டிருப் பார்கள்! அவர்கள் நெஞ்சத்தின் அழுத்தங்களைப் பெற்றோர்கள் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கக்கூடும். ஒருவேளை "அந்தப் பிள்ளை" குடும்பத்தில் தானும் ஒரு சொந்தம்! என்ற உணர்வே இல்லாதிருக் கலாம். பெற்றோர்கள், வெவ்வேறு ஜாதி அல்லது வெவ்வேறு தேசம் போன்ற "சந்ததி இடைவெளி கூட" அந்தப் பிள்ளை, தான் தனித்து ஒதுக்கப்பட்டதாக எண்ணும்படி செய்திருக்கலாம்! இவ்வாறு, பெற்றோரிடம் நெருங்கிய தொடர்பு இல்லாத இடைவெளி, வீழ்ச்சிக்கு காரணமாயிருக்கலாம்!

எது எப்படியிருந்தாலும், எல்லோருக்கும் "நம்பிக்கை" என ஒன்று இருக்கத்தான் செய்கிறது! 'நம்பிக்கைக்கே இடமில்லாத சிறைச் சாலையில்கூட' அநேக வாலிபர்கள் தங்கள் ஜீவியத்தை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்ததை நான் கேட்டிருக்கிறேன்!

எனவே, நம் பிள்ளைகள் ஆண்டவரைவிட்டு நிரந்தரமாய் தூர சென்றுவிட முடியாது! தேவனுடைய அன்பும் இரக்கமும் அவர்களைப் பின்தொடர்ந்து, முடிவில் அவர்களை மீட்டெடுத்து விடும்! ஒரு பக்தியுள்ள சகோதரன் கூறும்போது, "**தேவ வல்லமைக்கு** முன் 'மகா பெரியது' என எதுவுமே கிடையாது! **தெய்வ அன்பிற்கு** முன் 'மகா அற்பமானது' எனவும் எதுவுமே கிடையாது!" எனக்கூறினார்.

ஆகவே, அன்புள்ள தாயே! உங்கள் கண்ணீரின் ஜெபங்கள் ஒருபோதும் வீணாகிடாது... ஜெபம் செய்வதை மாத்திரம் விட்டு விடாமல் தொடர்ந்து ஜெபியுங்கள்!

ஒருசமயம் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தை நான் சந்தித்தேன். அந்த குடும்பத்திலுள்ள நான்கு பிள்ளைகளுமே ஒருவித வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதனிமித்தம், அவர்கள் வாலிப வயதிற்கு வந்தவுடன் மரித்துப்போகும் இக்கட்டில் இருந்தார்கள்! மூன்று பிள்ளைகள் படுத்த படுக்கையானார்கள்.... அவர்களில் மூத்த பிள்ளை இறந்துபோனாள். இத்தனைக் கொடிய சூழ்நிலை இருந்தபோதும், அந்தக் குடும்பமோ "**தெய்வ அன்பின் நிறைவினால்**" பிரகாசம் நிறைந்து வாழ்ந்தார்கள்! தன் பிள்ளைகளை ஒன்றன்பின் ஒன்றாய் சவப் பெட்டிக்குள் வைத்திட வேண்டுமென்பதை அந்த தாய் நன்கு அறிந்திருந்தும்... தன் பிள்ளைகளின் சுக வாழ்விற்காக கடினமாய்

வேலை செய்து சம்பாதித்தாள்! அந்த தாய் அழுவாள்.... ஆனால், தன் பிள்ளைகளை ஆரோக்கியமான உயிர்த்தெழுந்த சரீரத்தோடு ஒரு நாளில் காண்போம் என்பதையும் அவள் அறிந்திருந்தாள்! ...சில மாதங்களுக்கு முன்புதான், அந்த தாயின் எல்லாப் பிள்ளைகளும் மரித்துப் பரலோகம் சென்றுவிட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டறிந்தேன். ஆம், இந்தப் பூமியில் அந்தப் பிள்ளைகளின் துயர வாழ்விற்கு முற்றுப்புள்ளி வந்து விட்டது!

இந்தப் பூமியில் நம்முடைய பிள்ளைகளை தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென்று பயிற்சி அளிக்கும்படி "ஓர் கடனாகவே" சொற்ப காலத்திற்கு தேவன் நமக்குத் தந்திருக்கிறார். இவ்வாறு தேவன் நமக்களித்த பிள்ளைகளிடம் நமக்கிருக்கும் பொறுப்பை கீழ்காணும் கவிதை நேர்த்தியாக விளக்குகிறது:

கடனாய் தேவன் நமக்கு ஈந்தளித்த பிள்ளை

"சொற்ப கால கடனே உன் பிள்ளை" என்றார் தேவன்:
'உயிருள்ள மட்டும் நேசி, மரித்ததும்' எனக்குத் தந்துவிடு!
அவன் எனக்கு எத்தனை ஆண்டுகள்?
உம்மிடம் நீர் அழைக்கும் காலம் எப்போது?
'காலங்களை' நீ வருந்தி விசாரிப்பது ஏன்?
உயிருள்ள காலத்தின் பரவசமே உந்தன் மகிழ்ச்சி...
'அற்பமே' நீடிக்கலாம் பிரிவின் துயரம்!
அவனது ஞாபக அன்பின் நினைவு உந்தன் ஆறுதல்!
அவனை 'நிரந்தரமாய் தந்து' வாக்குரைக்க நியதி இல்லை!
பூமியின் சம்பத்து, யாருக்கும் சொந்தமில்லை!
பூமியில் கற்றிட உனக்குப் பாடங்கள் தந்தேன்.... அதை,
உன் குழந்தை மூலம் நீ கற்றிட விரும்பினேன்!
உன் குழந்தைக்கு கற்பிக்க யாருண்டு, பார் உலகில்?
மாந்தரில் தாயாகிய உன்னையே தெரிந்தேன்!
உன் பரிவான அன்பை அவனுக்கு தருவாயோ?
உன் பிரயாசம் அனைத்தும் வீணாய் போவதில்லை...
பிள்ளை மரித்தாலும், என்னிடம் சேர்த்திடவே ஆயத்தப்படுத்து,
'நான் கரம் நீட்டி எடுக்கையில்' என்னை வெறுத்திடாதே!

மனம் உடைந்த, தாயின் பதில் :

"அன்பின் தேவனே, உம் சித்தமாகட்டும்"
இப்பிள்ளை வழங்கட்டும் தெய்வீக மகிழ்ச்சி!
துயரமே வந்திட்டால், நாங்களும் சகிக்கட்டும்!
நீர் ஒப்புக்கொடுத்த கடமை, முடிவுபரியந்த அன்பே!
என் பிள்ளை தந்த ஆனந்தம் நன்றியுடன் பெற்றிட்டோம்!

அவனுக்கென்று திட்டங்கள் முடிந்தபின் நீர் வந்தால் ...
கசந்த எம் இதயத்தில் தைரியம் தாங்குவோம்!
துன்பத்தில் உம் நோக்கம், அறிந்திடவே நாடுவோம்...."

(Author Unknown)

அன்பார்ந்த தாயே! எத்தனையோ உணர்வுகளை நம் பிள்ளைகள் தங்களுக்குள் தேக்கி வைத்திருப்பார்கள். அந்த உணர்வுகளை வார்த்தைகளில் வடிப்பதற்கோ அவர்களுக்குக் கடினம்! ஆகவே, அவர்கள் துக்கமாய் அல்லது மௌனமாய் அல்லது தனிமையாய் இருந்திடும் போது, அவர்களை நீங்கள் புரிந்துகொள்ள முயலுவது அவசியம்! அவர்கள் ஒன்றும் தீமையானவர்கள் அல்ல! நெஞ்சத்தில் நெருடும் ஏதோ ஒன்றிற்காகவே அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்!

உங்கள் பிள்ளைகளின் போராட்டம் எதுவாயிருந்தாலும், உங்களைவிட அவர்களை முழுமையாய் அறிந்த ஒருவர் பரலோகத்தில் உண்டு!

அவரே, யவீருவின் மரித்துப்போன மகள் அருகே நின்று, அவளை உயிரோடு எழுப்பியவர். அந்த இளம் பெண்ணின் துயர் கொண்ட பெற்றோர்களிடத்திற்கு தன் சீஷர்களோடு இயேசு சென்று, அந்த அறைக்குள் அமர்ந்த அற்புத காட்சியை உங்கள் கண் முன் எப்போதும் நிறுத்திப் பாருங்கள். பின்பு, அவளை உயிரோடு எழுப்பி..... அவள் பெற்றோர்களிடம் அவளைத் திரும்பக் கொடுத்து... **"அவளுக்கு, சாப்பிட ஏதாவது தாருங்கள்"** *என்றுரைத்த ஆண்டவரின் அன்பை சற்றே எண்ணிப்பாருங்கள்!*

இன்றும், **அதே அன்பின் செயலையே** *இயேசு உங்களுக்கும் செய்திடுவார்! அழுது கொண்டிருக்கும் உங்களைக் கண்டு விசாரித்திட, உங்கள் வீட்டின் அறைக்கதவைத் திறந்தளித்து, அவர் முன் உங்களின் யாதொரு பிரச்சனைகளையும் சமர்ப்பியுங்கள்! யவீருவின் பிள்ளைக்குப் போலவே உங்களுக்கும் அவர் அற்புதங்களைச் செய்வார்! ஆகவே, சிறிதேனும்கூட மனம் சோர்ந்து போகாதிருங்கள்!*

தங்கள் பிள்ளைக்களுக்காய் ஜெபித்திடும் எல்லா தாய்மார்களுமே 'திடீரென்று' ஒரு குறிப்பிட்ட தன் பிள்ளையினிமித்தம் பாரம் ஏற்பட்டு ஜெபிக்கத் தூண்டப்படும் அனுபவத்தை அடைந்திருப்பார்கள்! ஜெபித்த சிறிது நேரத்திற்குப் பின்பு, அந்தப் பாரம் அவர்களை விட்டு நீங்கியதையும் அறிந்திருப்பார்கள்!

இந்த நிகழ்ச்சிக்குப்பிறகு, தங்கள் குழந்தைக்காய் "ஜெபித்த அதே நேரத்தில்" ஓர் பேராபத்து அப்பிள்ளையை நெருங்கி வந்தது என்பதை அறிந்து ஆச்சரியமடை வார்கள்! இப்படித்தான், நம் பிள்ளைகள் நிமித்தமாய் தேவன் நம்மை ஜெபவீரர்களாய் மாற்றுகிறார்! ஜெபம் ஏதோ, ஒரு கடைசிப்

புகலிடமல்ல.... மாறாக, நம் பிள்ளைகள் சந்திக்கும் பிரச்சனைகளுக் கெல்லாம் உரிய விடையேயாகும்!

நாயீன் ஊர் விதவையும் தன் மகனை மரணத்திலிருந்து திரும்பப் பெற்றாள். ஆவிக்குரிய ரீதியாய், உங்கள் பிள்ளைகள்கூட மரித்து.... அல்லது, **லாசருவைப் போல் நாற்றத்திற்குள் இருக்கலாம்!** *ஆனால், அவனும்கூட அல்லது அவளும்கூட இயேசுவின் அழைப்பைக் கேட்டு உயிர் பெற்று எழுந்துவர முடியும்! ஆகவே உங்கள் பிள்ளைக்காக இரவும் பகலும் ஆண்டவரிடம் ஜெபம் செய்யுங்கள், அதுபோதும். தேவன் நமக்கென்று ஏராளமான வாக்குதத்தங்களை அருளியிருக்கிறார். அவை யாவற்றையும் அவர் நிறைவேற்றி, துரிதமாய் உங்களுக்குப் பதிலும் தருவார்! நீங்கள்* **கர்த்தருக்காகவே காத்திருப்பவர்களாய்** *இருந்தால், உங்கள் கண்களால் காணாதிருப்பதும் உங்கள் காதுகளால் கேளாதிருப்பதுமான.... "நலமானவைகளை" உங்களுக்காகவே அவர் வைத்திருப்பார்! (1கொரிந்தியர் 2:9).*

ஆம், "மனுஷனால் கூடாதவைகள் யாவும் தேவனால் கூடும்!" என்று இந்த வசனம் ஓர் 'மறைவான ஜீவ ஊற்றாய்' என் வாழ்வின் சோதனைகளின் பல சமயங்களில் அதிகமாய் என்னைப் பெலனடையச் செய்திருக்கிறது. பல்வேறு சூழ்நிலைகளில் என் சொந்தப் பிள்ளைகளுக் காக நான் ஜெபித்த ஜெபங்களுக்குக் கிடைத்த கணக்கிலடங்கா "பதில்களை" நான் சாட்சியாகக்கூற முடியும். என் "எல்லா" ஜெபங் களுக்கும் பதில் அளித்து, என்னுடைய நான்கு பையன்களுக்கும் தேவன் செய்த மகத்துவங்களை எண்ணி எண்ணி அவருக்கே நான் எல்லா மகிமையையும் செலுத்துகிறேன்! ஆம், **"ஜெபம் சகலத்தையும் மாற்றும்!"** *என்பதை நான் அறிந்திருக்கிறேன். உங்களுக்கும் அவ்வாறே மாற்றும்.... உங்கள் பிள்ளைகளுக்கும் அவ்வாறே மாற்றும்! நாம் வேண்டிக்கொள் வதற்கும் நினைப்பதற்கும் மேலாகவே, தேவன் நமக்கும் நம் பிள்ளை களுக்கும் அருளிச் செய்ய வல்லவராய் இருக்கிறார் (எபேசியர்.3:20).*

உங்கள் பிள்ளை ஓர் கெட்டப் பழக்கத்திற்கு அடிமையாகி யிருந்தால், அதற்காக அவனைக் குற்றப்படுத்தாதிருங்கள். ஏற்கனவே அவன் தீமைக்குள்தான் விழுந்து கிடக்கிறான். அதிலிருந்து விடுதலையாக விரும்பினாலும் அவனால் முடியவில்லை! இவ் வேளையில், உங்களையும் கூட நீங்கள் நொந்துகொள்ள வேண்டாம்! "நான் மாத்திரம் சற்று ஞானமுள்ள தாயாக இருந்திருந்தால்...." என்றெல்லாம் புலம்புவதற்கு இது நேரமல்ல!

எந்த தாயும் பூரணமானவளல்ல. நாம் யாவருமே நம்மால் முடிந்த சிறந்த வைகளையே செய்தாலும், அநேகம் தவறுகளையும் செய்துவிடுகிறோம்.

இவ்வாறு உங்களைச் சஞ்சலப்படுத்தும் வீழ்ச்சியோ அல்லது தவறோ போன்ற எதுவாயிருந்தாலும், அதை ஆண்டவரிடத்தில் அறிக்கைசெய்துவிட்டு கடந்து சென்றுவிடுங்கள்! நடந்த நிகழ்ச்சிகளுக்கான மன வருத்தங்களையும் குற்ற உணர்ச்சிகளையும் புறம்பே தள்ளிவிடுங்கள்! "**தன்னையே குற்றப்படுத்திக்கொள்ளும் செயல்**" சாத்தானின் கூர்மையான அம்புகளில் ஒன்றாகும்! அதன் மூலமாய் எண்ணற்ற தேவனுடைய பிள்ளைகளை அவன் காயப்படுத்தி, நிலைகுலையச் செய்து, "ஜெபமற்றவர்களாய்" மாற்றிவிடுகிறான்.

நம் பிள்ளைகளின் ஜீவியத்திற்காகப் போராடும் "போர்க்களத்திலன்றோ" நாம் நின்று கொண்டிருக்கிறோம்! ஆகவே, நம் பெலனையெல்லாம் வீணான அழுகையில் விரயமாக்காதிருக்கக்கடவோம்!

நமக்கோ, ஒன்று செயலாற்றப்பட வேண்டும்... அது இப்போதே செயலாற்றப்படட்டும்! நீங்கள் செயலாற்ற முன்வந்து, **உங்கள் பிள்ளையோடு பேசும் வேளையில்** உங்களுக்கு உதவி செய்யும்படி தேவனிடத்தில் கேளுங்கள். பல வருடங்களாய் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நடுவாய் எழும்பி விட்ட தடைச்சுவர்களை தேவனே தகர்த்தெறிவாராக! உங்கள் கண்ணீரின் விண்ணப்பங்கள், தேவனிடத்திலும் உங்கள் மகன் அல்லது மகளிடத்திலும் அற்புதங்களைச் செய்வதை நீங்கள் காண்பீர்கள்!

உங்கள் பிள்ளை "நிர்க்கதியாய்" இருக்கிறபடியால் உங்கள் **பிள்ளைகளின் சார்பாகவே நீங்கள் நின்று ஜெபம் செய்திட** அவசியமாய் இருக்கிறது. இவ்வேளையில் தாயாகிய நீங்கள்தான் பெலன் கொண்டவர்களாய் இருக்கவேண்டும். சிங்கத்தின் வாயிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியைத் தாவீது காப்பாற்றியதைப் போல், நாமும் நம்முடைய பிள்ளைகளை சாத்தானின் வாயிலிருந்து காப்பாற்ற வேண்டும். நீங்களோ இன்றுவரை ஓர் பெலஹீனம் கொண்ட கோழைப் பெண்ணாய் இருந்து விட்டீர்கள். இப்போதோ எழுந்து நில்லுங்கள்! உங்கள் கண்ணீரைத் துடைத்துப்போடுங்கள்! வானமண்டலத்தின் துரைத்தனத்திற்கெதிரான யுத்தத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்!! சாத்தானை எதிர்த்து, அவனை உங்கள் குடும்பத்தை விட்டே விரட்டியடிப்பதற்கு.... ஜீவ அப்பத்தைப் புசித்து, தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை வீரத்தோடு கையாளுங்கள்! இயேசுவின் நாமத்தில் அவனைக் கடிந்து கொள்ளுங்கள்! அப்போது, ஆண்டவர் நமக்கு வாக்குரைத்தபடி..... **மின்னல் வேகத்தில் அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்!** (யாக்கோபு 4:7, லூக்கா 10:18).

இதுபோன்ற சமயங்களில் "தேவனுடைய வார்த்தையே"

உங்களுக்கு அருமையாய் இருந்திட வேண்டும். உங்கள் பிள்ளைகள் நிமித்தம் ஏற்பட்ட துயர சம்பவம் உங்கள் ஆவிக்குரிய சத்துவத்தைப் பறித்துக் கொள்ள அனுமதிக்காதிருங்கள். துன்பத்தின் ஆழத்திலிருக்கும் இவ்வேளையில், தேவனுடைய ஆச்சரியமான வாக்குதத்தங்களே உங்களைப் பாதுகாத்திட முடியும்! இவ்வேளைகளில் தாவீதின் சங்கீதங்களை வாசித்து தியானியுங்கள். துக்கமும் துன்பமும் சூழ்ந்த வேளைகளில் **சங்கீத வசனங்கள்** *நம் ஆவியை உயிர்ப்பித்து நம்மைத் தூக்கி எடுக்க விசேஷ வல்லமை கொண்டதாயிருக்கிறது! தாவீதின் அனுபவத்தைப் போலவே, நீங்களும் தேவனிடத்தில் சென்று "எனக்கு அனுகூலமான ஓர் அடையாளத்தைக் காண்பித்தருளும்" (சங்.86:17) என அவரிடத்தில் கேளுங்கள். கீழ்காணும் வாக்குதத்தங்களையும் உங்களுக்கென சுதந்தரித்துக் கொள்ளுங்கள்:*

"வெட்டுக்கிளிகள் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் **திரும்ப அளிப்பேன்**" *(யோவேல்.2:25). "வாக்குதத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர்.... அவர்* **சொல்லியும் செய்யாதிருப்பாரா?**" *(எபி.10:23, எண்.23:19).*

"முந்தின மகிமையைப் பார்க்கிலும் **பிந்தின மகிமை பெரிதா யிருக்கும்**" *(ஆகாய்.2:9).*

"நாங்கள் **எதிர்பார்த்திராத** *பயங்கரமான காரியங்களை நீர் செய்தீர்" (ஏசாயா.64:3).*

"நீங்கள் எல்லாவற்றிலும் எப்போதும் சம்பூரணமுடையவர் களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் **சகலவித கிருபையையும் பெருகச் செய்ய** *வல்லவராயிருக்கிறார்" (2கொரிந்தியர்.9:8).*

மேற்கண்ட வாக்குதத்தங்கள் அனைத்தும் தீர்க்கதரிசனமான வைகள்! வல்லமை நிறைந்தவைகள்! இந்த வசனங்கள் நமக்கு நிச்சயமாய் அற்புதங்களைச் செய்துவிடும்!

"ஆச்சரியமே, அதிசயமே கர்த்தரின் வார்த்தைகள்!
அவ்வேடுகளில் மலர்ந்த ஞானங்கள் - அனைத்தும் உண்மைகள்
ஆயிரம் ஆயிரம் தடவைகள் வாசித்தாலும்
பழமையாய், அல்லது சலிப்பாய் மாறிடா!
ஒவ்வொரு வரிகளும் பொக்கிஷம்,
ஒவ்வொரு வாக்குதத்தமும் ஓர் முத்து!
அவை தரும் அனைத்துமே முழுமை பாதுகாப்பு!
ஒன்றறிவோம்... காலமும் உலகமும் கடந்துபோம்
எம் தேவனின் வார்த்தையோ நிலைத்திருக்கும்!"

– ஜூலியா ஸ்டெர்லிங்

"**தாவீதுக்கு** அவனுடைய சத்துருக்கள் விரித்த கண்ணிக்குத் தப்புவித்த ஆண்டவர் **உங்கள் பிள்ளையையும் தப்புவிப்பார்!**"என்ற ஆச்சரியமான வாக்குதத்தத்தை சங்கீதம் 124:6,7,8 வசனங்களில் வாசித்து, அதை உங்களுக்கென சுதந்தரித்துக் கொள்ளுங்கள்!

பிரச்சனைகளின் நடுவில் உங்கள் பிள்ளைக்கு 'வியாதியிருப்பதாகக்' கருதி செயல்படுவதேயல்லாமல், ஓர் 'குற்றவாளியாகக்' கருதி செயல்படாதிருங்கள். உங்கள் பிள்ளையைப் பார்த்து "இதுபோன்ற செயலை நீ எவ்வாறு எங்களுக்குச் செய்யலாம்?"என்ற **கசந்த கேள்வியை** ஒருபோதும் கேட்டுவிடாதிருங்கள். "மற்றவர்கள் உங்கள் பிள்ளைகளைக் குறித்து என்ன சொல்வார்கள்?" என நீங்கள் ஒருவேளை வெட்கமடையக்கூடும். ஆனால் நீங்களோ, மனுஷருடைய அபிப்பிராயங்களைக் குறித்து அக்கறைப்படாதிருங்கள். "மனுஷருடைய அபிப்பிராயங்களை குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்துவிடு" என என் கணவர் என்னிடத்தில் அடிக்கடி கூறுவார். ஆம், இந்தப் பூமியில் **எந்த மனிதனைக் காட்டிலும் உங்கள் பிள்ளையே** விலைமதியா மதிப்பு கொண்டதாகும்! ஆகவே 'உங்கள் குடும்பத்தின் கௌரவம் பாதிக்கப்பட்டதே' என அழுது கொண்டு உங்கள் நேரத்தை வீணாக்காதிருங்கள்! அதற்குப் பதிலாய், உங்கள் பிள்ளை தேவனிடத்தில் திரும்பி வரவேண்டுமென்றே, உங்கள் பிள்ளைக்காக அழுங்கள்! அதுபோதும்.

சுகமளிக்கும் வார்த்தைகளையும், மன்னிக்கும் வார்த்தைகளையும், விசுவாச வார்த்தைகளையும், ஒப்புரவாக்கும் வார்த்தைகளையுமே உங்கள் பிள்ளைகளிடம் எப்போதும் பேசுங்கள். முதிர்ச்சியடைந்த ஒருவரிடத்தில் நடந்து கொள்வதைப்போலவே உங்கள் பிள்ளைகளிடமும் நடந்து கொள்ளுங்கள். ஏனென்றால், உங்கள் மகன் அல்லது மகள் முதிர்ச்சி அடையும் நிலையை நோக்கியே வளர்ந்து சென்று கொண்டிருக்கிறார்கள்!

எச்சூழ்நிலையானாலும், விசுவாசத்தோடு ஜெபித்து உங்கள் பிள்ளையை சாத்தானின் வலையிலிருந்து காப்பாற்றுங்கள். இவ்வேளையில் உங்கள் கிறிஸ்தவ நண்பர்களின் **ஜெப உதவியையும்** நாடுங்கள். கெட்ட குமாரனைத் தகப்பன் ஏற்றுக்கொண்டது போலவே, உங்கள் பிள்ளையை "**எந்த நிபந்தனையுமின்றி**" ஏற்றுக்கொள்ளவே எப்போதும் தயாராயிருங்கள். தேவையானால் மருத்துவ உதவியோ அல்லது படிப்பிற்குரிய உதவியோ அவனுக்குச் செய்திட விருப்பமாயிருங்கள். வாலிபப் பிள்ளைகளிடம் தோன்றும் பிரச்சனைகளைக் கையாளுவதற்கு நல்ல அனுபவமிக்க சகோதர சகோதரிகளும் இருக்கிறார்கள்! தேவையானால், அவர்களின் உதவியையும் நீங்கள் நாடுங்கள். உங்கள் "பிள்ளைகளுடைய பிரச்சனை இன்னதென்று"

நீங்களே விளங்கிக் கொண்டால், பிள்ளைக்கு உதவிட எல்லா வகையிலும் முன்வாருங்கள்! எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கட்டான இச்சமயங்களில் **உங்கள் கணவரோடு ஐக்கியமாயிருந்து** உங்கள் பிள்ளைக்காக ஜெபம் செய்யுங்கள். வீட்டில் பிரிவினையிருந்தால், பிசாசு "உள்ளே பிரவேசித்திட" இடம் கிடைத்துவிடும். அவருடைய நாமத்தில் **இரண்டு பேர் ஒன்றாயிருந்து** பிதாவினிடத்தில் எதைக் கேட்டாலும், அதை அவர் செய்வாரென்றே இயேசு கூறியுள்ளார்.

ஆகவே, ஒருவருக்கொருவர் யார் மீதும் குற்றத்தைச் சுமத்தா திருங்கள். உங்கள் பிள்ளையின், தான்தோன்றி வாழ்க்கையின் நிமித்தம் அறுவடை செய்திடும் **விளைவுகளை** நீங்கள் கண்டாலும், "எல்லா மனுஷருக்கும் நம்பிக்கையுண்டு" என்பதை அறிந்தவர்களாய் பிள்ளைக்கு "தைரியம்" காட்டுங்கள். "என் நடைகளைத் தியானித்து என் பாதங்களை உமது கற்பனைகளுக்கு நேராகத் திருப்புவேன்" என்ற அர்த்தத்தோடுதான் சங்கீதம் 119:15 கூறுகிறது. மிகக் கேடானக் கெட்ட குமாரன், கடைசியாக தன் நடையைத் தகப்பன் வீட்டிற்கு திருப்பி விட்டானே! அந்த கெட்ட குமாரனுக்காய், அவனுடைய பெற்றோர்கள் நிச்சயம் அதிகமாய் கண்ணீர் வடித்திருப்பார்கள்! ஆனால், ஓர் நாள் வந்தபோதோ அவர்களுடைய துக்கத்தின் கண்ணீர்கள் "மகிழ்ச்சியின் கண்ணீர்களாய்" மாறிவிட்டதே!

'இப்போது' உங்கள் பிள்ளைக்கு நடந்துவிட்ட செயல்கள் "அதிர்ச்சியளிக்கும்" செயல்களாக உங்களுக்கு இருக்கக்கூடும்...

ஆனால் எந்த செயல்களும் தேவனைப் பொறுத்தமட்டில் அதிர்ச்சியளிக்கும் செயல்களே அல்ல! என்ன நடக்குமென்பதை அவர் ஏற்கெனவே அறிந் திருந்தார்... அதற்கு என்ன விடை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார்!

ஆகவே, ஒவ்வொரு பிரச்சனைக்கும், ஒவ்வொரு தவறுக்கும் "ஒரு விடையை" அவர் எப்போதும் வைத்திருக்கிறார்! ஆகவே, எந்த இக்கட்டிலிருந்தும் தேவன் நம் பிள்ளைகளை மீட்டெடுப்பார் என்ற முழு நம்பிக்கையோடும் பூரண நிச்சயத்தோடும் நாம் அவரிடம் தஞ்சமாய் ஓடி வந்திட முடியும்!

"என் மனம் கசந்தது, என் உள்ளந்திரியங்களிலே குத்துண்டேன். **நான் காரியம் அறியாத மூடனானேன்;** உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன். ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோச னையின் படி நீர் என்னை நடத்தி, **முடிவிலே** என்னை மகிமையில் ஏற்றுக் கொள்வீர்!" என தாவீது கூறினார் (சங்.73:21-24). இந்த வசனத்திற்கு ஒப்பாகவே 1கொரி.10:13-ல் "மனுஷனுக்கு நேரிடுகிற சோதனையே

யல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் **தப்பித்துக் கொள்ளும் படியான போக்கையும்** உண்டாக்குவார்'' எனக்கூறும் ஆறுதல் வசனங் களையும் தியானியுங்கள்.

ஆம், உங்களால் தாங்க முடியாத எந்த சோதனையையும் அவர் அனுமதிக்கவே மாட்டார். இரவில் வடிக்கும் உங்கள் கண்ணீர் பகலில் களிப்பாய் மாறிவிடும்! "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை **இரட்சிக்கிறார்**'' என்பது முற்றிலும் உண்மையானது (சங்கீதம்.34:18).

இதுபோன்ற நொறுக்கப்படும் அனுபவங்கள், ஆண்டவருக்கு நம்மை இன்னும் அதிகமாய் **தந்திடவும்,** நமக்குள் அவர் கிரியை செய்யும் படி **அவருக்காகக் காத்திருக்கவும்** செய்கிறது. ஒரு நாளில் இந்த உபத்திர வங்கள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துவிடும்! இதனிமித்தமாய், எந்த கிரியையுமே செய்யாமல் நீங்கள் இருந்திடாதிருங்கள். "தேவையான நேரம் வரும்போது'' கிரியை செய்திட ஆயத்தமாய் இருங்கள். அவ்வேளையில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்குப் **போதுமான ஞானத்தைத் தேவனே தருவார்.** நீங்களோ, நசுக்கப்படுவதைத் தாங்கிக் கொள்ளுங்கள்.... ஆனால், துயரமுடன் அழும் அந்த வேளை யிலும், கவனமாய் உங்கள் பணியைச் செய்திடுங்கள்!

நாம் எல்லோருமே சுய பெலனைச் சார்ந்தவர்களும், நம்மில் நாமே போதுமானவர்களாகவுமே இருந்திடப் பார்க்கிறோம். இந்நிலையில், உபத்திரவங்களே நம்மை ஜெபிப்பதற்கும், ஆண்டவரைச் சார்ந்து கொள்வதற்கும் உந்திச்சென்று கற்றுத் தருகிறது. ஆம், "பலவிதமான சோதனைகள்தான் நம்மில் பொறுமையை உண்டாக்குமென்று'' நாம் அறிந்திருக்கிறோம்! (யாக்கோபு 1:3).

இத்தருணத்தில், நாம் உபவாசித்து ஜெபிக்கும்படியும் ஆண்டவர் கற்றுக் கொடுத்திருக்கிறார்.

> **நீங்கள் எவ்வளவுதான் கோழையும் பெலவீனருமாயிருந்தாலும், பரலோகத்தின் கதவை நீங்கள் தட்டும்போது, அது உங்களுக்கு நிச்சயமாய் திறக்கப்பட்டுவிடும்! காரிருள் அமைதி நேரங்களில், உங்கள் இருதயத்தி லிருந்து தேவனை நோக்கி கூப்பிடுங்கள்! சிறிது நேரத்தில் பரலோகம் திறந்து, உங்கள் விண்ணப்பத்திற்கு 'தேவன் பேசும் பதிலை' நீங்கள் கேட்பீர்கள்!**

அக்காரிருள் நேரத்தில் தேவன் உங்களுக்குத் தந்த வாக்கு தத்தங்களை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்! அவை ஒவ்வொன்றும் ஒரு

வானவில்லாகவும், விலையேறப்பட்ட வைடூரியமாகவும் உங்களுக்கு இருப்பதைக் காண்பீர்கள்! அவைகளைப் பத்திரப்படுத்தி வையுங்கள்! என்றாவது ஒரு நாள், பிறருக்கு உதவி செய்யும்படி அதை நீங்கள் மற்றவர்களுக்குத் தரவேண்டியிருக்கும்! **துன்பத்தின் அந்தரங்கத்தில்** கேட்கும் உங்கள் பிதா, வெளியரங்கமாய் உங்களுக்கு நிச்சயமாய் பலனளிப்பார். தன் பதிலை "விரைவாய் தருவதாகவும்" அவர் மேலும் வாக்களித்திருக்கிறார். ஆகவே, நீங்கள் பதிலைப் பெறும்வரை, ஜெபத்தில் உறுதியாய் தரித்திருங்கள். உங்கள் பிள்ளையை நித்தியமாய் இழந்து போவது தேவனுடைய சித்தம் அல்லவே அல்ல. பலவந்தம் செய்யும் யாவருக்கும் தேவனுடைய ராஜ்ஜியம் சொந்தமாகவே இருக்கிறது!

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழ பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்.34:10) என்றும், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நாம் நினைக்கிறதற்கும், மிகவும் அதிகமாய் கிரியை செய்திட தேவன் வல்லவராய் இருக்கிறார்" என்றும் வேதம் கூறுவதைப் பாருங்கள் (எபேசியர்.3:20).

ஆகவே, மிகுந்த **விசுவாசத்தோடு** அவரிடம் கேளுங்கள். **தைரியமாய்** கிருபாசனத்தண்டை வந்து, ஜெபத்தில் உறுதியாய் இருங்கள். "எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு. ஆண்டவரின் சமூகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப் போகிற **உன் குழந்தைகளின் பிராணனுக்காக** உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு!" என்ற ஜெபத்தின் கூக்குரலையே நாமும் செய்திடக்கடவோம்(பிர.2:19).

"**உபவாசம்**" உணவை புறக்கணிப்பது மாத்திரமல்ல! வாழ்வின் மாயைகளையும், சுகபோக ஜீவியத்தையும், நம் சுயநல விருப்பங்களின் ஆளுகையையும், புறக்கணித்தே நாம் உபவாசித்திட வேண்டும்! ஒரு இக்கட்டு நேரத்தில் நாமே உந்தப்பட்டு உபவாசிப்பது அவ்வளவு கடினமானதல்ல. அதுபோன்ற வேளைகளில், பசி நம்மைவிட்டு மறைந்து போவதை நாமே அறிந்திருக்கிறோம். இருப்பினும், உபவாசம் நாமாகத் தெரிந்து கொண்டு உபவாசிப்பது, தேவனுக்குப் பிரியமானதாகும்! சில பிசாசுகள், உபவாச ஜெபத்தினால் மாத்திரமே விரட்டப்பட முடியும்! என்றே இயேசு கூறினார்.

ஆம், எந்த இக்கட்டான சூழ்நிலையிலும், நாம் மனுஷரோடு போராடுவதேயில்லை. மாறாக பிசாசின் அந்தகாரத்தோடுதான் நமக்குப் போராட்டம் உண்டு. தன்னுடைய முடிவு மிக சமீபமாகி விட்டதால், சாத்தான் கடுங்கோபம் கொண்டு, தேவனுடைய ஜனத்தின்

மீது புதுப்புது தந்திரமான தாக்குதல்களைத் தொடுக்கிறான்! ஆனால், சாத்தானும் அவனுடைய தூதர்களும் கல்வாரியில் இயேசுவால் ஜெயிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுடைய அழிவின் முடிவை வெளிப்படுத்தின விசேஷப்புத்தகத்தில் நாம் தெளிவாகக் காண்கிறோம். நாமோ, 'இன்றே' விசுவாசத்தில் சாத்தானை அக்கினிக்கடலில் காணக் கூடியவர்களாய் இருக்கிறோம்! தேவனுக்கே ஸ்தோத்திரம்!

ஒரு சமயம் ஒரு பரிசுத்தவான் கூறும்போது, "ஜெபம் ஓர் நீண்ட கயிற்றைப் போன்றது! அதன் மூலம், நம்முடைய பிள்ளைகளை நாம் மீண்டும் தேவனிடத்தில் தூக்கி எடுத்துவிட முடியும்" என கூறினார்!

ஒரு ஏழை விதவைக்கு கடன் கொடுத்த ஒருவன், அவள் புத்திரர் களைத் தன் அடிமைகளாய் எடுத்துச் செல்லும்படி வந்தான் என 2இராஜா.4:7-ல் வாசிக்கிறோம். இவ்வாறு அடிமைப்படுத்த வந்தவன் 'சாத்தானுக்கு இணையாகவே' சித்திரிக்கப்பட்டிருக்கிறான். அந்த விதவையைப் பார்த்து எலிசா தீர்க்கதரிசி கூறியபோது "வீட்டிற்குச் சென்று, பக்கத்து வீடுகளில் உள்ள பாத்திரங்களை வாங்கி, தன்னுடைய புத்திரர்களோடு கதவை அடைத்துக் கொள்ளும்படியும் (இது **ஜெபத்தை** சித்திரிப்பதாயிருக்கிறது), அந்தப் பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றும் படியும் (எல்லாவற்றிற்கும் போதுமான **பரிசுத்தாவியை** சித்திரிப்பதா யிருக்கிறது)" கூறினான். இவ்விதமாகவே அவளுடைய கடன் தீர்க்கப் பட்டு, அவளுடைய புத்திரர்கள் யாவரும் கொடிய கடனாளியிட மிருந்து அற்புதமாய் விடுதலையும் பெற்றார்கள். அந்த ஏழை விதவை, மிகுந்த கண்ணீரோடு தேவனை நோக்கி ஜெபித்திருப்பாள்!

அவளுடைய ஜெபமும் கண்ணீரும் தீராத ஏக்கம் நிறைந்ததாய் இருந்திருக்க வேண்டும்! ஆகவேதான் தேவன் அவளுடைய ஜெபத்திற்குப் பதில் தந்தார்!

அன்பார்ந்த சகோதரியே, அதே பதிலை தேவன் உங்களுக்கும் நிச்சயமாய் தருவார். உங்கள் பிள்ளைகளுக்காக இன்று நீங்கள் அழுது கொண்டிருக்கிறீர்களா? அப்படியானால் எபிரெயர் 11:35 கூறும், "ஸ்திரீகள், சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந் திருக்கப் பெற்றார்கள்" என்ற வேத வாக்குதத்தத்தை பற்றிக் கொள்ளுங்கள். இவ்வேளையில், ஆவிக்குரிய மரணத்திலிருக்கும் உங்கள் அன்பான பிள்ளைகளுக்கு **இந்த வாக்குதத்தத்தை** சொந்தமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்! உங்கள் பிள்ளைகளை, தேவன் மீண்டும் ஜீவனுக்குள் கொண்டு வருவார்! உங்கள் ஜெபத்திற்கு, எட்டாததும் அதிசயமுமான காரியங்களைக் காண்பிக்கவே தேவன் விரும்புகிறார். உங்களுக்காக அவர் வைத்திருக்கும் திட்டங்கள் யாவும் நன்மை யானவைகளேயாகும்!(எரேமியா 33:3).

'மரண நேரத்தில்' நம் தேவன்!

4

மரியாள் கல்லறையின் அருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள், இயேசு அவளை நோக்கி "ஸ்திரீயே, ஏன் அழுகிறாய்?" என்று பரிவுடன் கேட்டார் (யோவான் 20:11-13).

மரியாள் எதற்காக அழுகிறாள் என்பது இயேசுவுக்குத் தெரியும். ஆனால், சில சமயங்களில் நம்முடைய பிள்ளைகளை "நீ இப்போது அழும்படி என்ன நடந்துவிட்டது?" என நாம் கேட்பது போலவே இயேசுவும் கேட்டார். ஆம், இயேசு அருகிலே நிற்கும்போது நாம் அழவேண்டிய அவசியமே இல்லை! இயேசுவும்கூட லாசருவின் கல்லறைக்கு முன்பு அழுதார். லாசரு மரணத்திலிருந்து உயிரோடெழுந்து வருவான் என்பதும் அவருக்குத் தெரியும், ஆகிலும் அழுதார்.... ஏனென்றால், பாவத்தினிமித்தம் மனுக்குலம் சந்திக்க நேர்ந்த கொடிய நிலைமையை எண்ணியே அவர் அழுதார்! ஆயினும் இப்போதோ, இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததினிமித்தம் மரணமானது தன்னுடைய 'கூரை' இழந்துவிட்டது!

ஒரு தாய் தன்னுடைய மரித்துப்போன பிள்ளைகளின் மத்தியில் அழுது புலம்பிய காட்சி அன்றைய என் சிறுபிராயத்திலிருந்து இன்றுவரை என் மனதில் நிலைத்திருக்கிறது! நான் வளர்ந்து வந்த நகரத்தில், கனமழையினிமித்தம் அந்த ஏழைப் பெண்மணியின் வீடு இடிந்து விழுந்துவிட்டது! அவளுடைய வாலிபப் பையன்கள் இரண்டுபேர் அத்துயரச் சம்பவத்தில் கொல்லப்பட்டார்கள்!! நாங்கள் பள்ளிக்குச் செல்லும் வழியில் இடிந்துபோன அந்த தாயின் வீட்டையும். .... காலை தூக்கத்திலிருந்து எழுந்திருக்காமலே மரித்துப்போன அந்த வாலிபப் பையன்களின் உடல்களையும் நாங்கள் பார்த்தோம். உள்ளம் உடைந்து போயிருந்த அந்த தாய் சொல்லி முடியா துக்கத்தோடும் மன உளைச்சலோடும், மரித்துப்போன தன் பிள்ளைகளை எழுப்புவதற்கு முயற்சிப்பது போல் சப்தமிட்டு கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்!

அதினால் என்ன பயன்? 'பிள்ளைகள் மரித்துப்போனார்கள்' என்பது அந்த தாய்க்குத் தெரியும்! இந்த சோக நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த யாவருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் புரண் டோடியது. இதுபோன்ற கதிக்கு ஆளாகி, தன் எல்லா நம்பிக்கையையும் இழந்துபோன தாய்மார்களையும் தேவன் கரிசனையாய் விசாரிக்கிறார்.

சமீப நாட்களுக்கு முன்புதான், நம் தேசத்தின் சுதந்திர நாளில் ஓர் **கொடிய பூமி அதிர்ச்சி** *குஜராத் மாநிலத்தின் எல்லா முக்கிய நகரங்களையும் அழித்துவிட்டது. அப்பகுதிகளில் எத்தனை கோரமான அழுகுரல்கள் கேட்டிருக்கக்கூடும்! ஒரு சில வினாடிகளில் எண்ணற்றோர் அனாதைகளாகினர்! எண்ணற்றோர் வீடுகளை இழந்தனர்!! பூமி அதிர்ச்சி, தேவனுடைய தண்டனை என நாம் சொல்லிவிட முடியாது. இயேசுவின் நாட்களில் சீலோவாம் கோபுரம் விழுந்தபோது, அந்த விபத்தில் மரித்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிகப் பாவம் செய்தவர்கள் அல்ல என்பதை இயேசு அவ்வேளையில் தெளிவுபடுத்தினார். மேலும், கடைசி நாட்களில் யுத்தங்களும், பஞ்சங்களும், பூமி அதிர்ச்சிகளும் சம்பவிக்க வேண்டியதே எனவும் இயேசு எச்சரிக்கையாய் கூறினார். ஆகவே* **"கர்த்தருடைய வருகை சமீபித்துவிட்டது!"** *என்பதையே பூமி அதிர்ச்சிகள் நமக்கு நினைவூட்டுகின்றன. மேலும், கொடிய விக்கிரக ஆராதனைக்குள் மூழ்கிப்போயிருக்கும் நம் இந்திய தேசத்திற்குத் தேவன் இரக்கம் பாராட்டும்படியாய், நாம் யாவருமே நம் தேசத்திற்காய் ஜெபித்திட வேண்டிய அவசியத்தையும் இதுபோன்ற சம்பவங்கள் காட்டுகிறது!*

இயேசு கொடூரமாய் சிலுவையிலறையப்பட்டபோது அவரில் அன்புகூர்ந்த மற்றவர்கள் அழுததைப் போலவே மகதலேனா மரியாளும் அழுதாள்! ஓய்வுநாளுக்குப் பிறகு ஞாயிற்றுக்கிழமை, மகதலேனா மரியாள் இயேசுவின் கல்லறைக்கு அதிகாலையிலேயே சென்றுவிட்டாள்! அவருடைய சரீரத்தைக் கண்டு அதற்கு நளதம் பூசும்படி கல்லறைக்கு முன்பாக அழுது கொண்டிருந்தாள்!!

> **நம்முடைய துக்கங்களை மாற்றுவதற்கு அழுகையும் ஓர் வழியாகவே இருக்கிறது. ஆகவே, நம்முடைய அழுகையை நாம் அடக்கிவைத்துவிடக் கூடாது!**

இயேசு உயிர்த்தெழுந்தவுடன் அவரை 'முதலாவதாக' இந்த மகதலேனா மரியாள்தான் கண்டாள். இயேசு அவளோடு பேசியபோது, தன்னோடு பேசியது இயேசுதான் என்பதை அறிந்ததும், அவள் சொல்லொண்ணா பரவசமடைந்திருப்பாள்! அதன்பிறகு, துக்கத்தின்

கண்ணீர்கள் அவளிடம் காணப்படவேயில்லை!! தான் உயிர்த் தெழுந்ததை தன்னுடைய சீஷர்களுக்கு கூறும்படியான பொறுப்பை இயேசு அவளிடமே ஒப்படைத்தார்.... சீஷர்களைத் தான் சந்திக்கப் போவதையும் கூறும்படி சொன்னார். இத்தனை பரவசமான சம்பவங் களுக்குப் பிறகும், ஊழியங்களுக்குப் பிறகும், தான் சபையின் ஆரம்பத்தில் எப்படி இருந்தாளோ அதேபோலவே **தாழ்மையாகவும் ஓர் சாதாரண சகோதரியாகவுமே** *தொடர்ந்து இருந்தாள். ஆம், உயிர்த் தெழுந்த ஆண்டவரை "நான்தான்" முதலாவது பார்த்தேன் என்ற* **பெருமையில் தன்னை முன்வைத்திட** *அவள் விருப்பம் கொள்ளவே யில்லை! மாறாக, நிகழ்ச்சியின்* **பின்னணியில் தன்னை ஒளித்துக் கொண்டாள்!!** *இதுபோன்ற தெய்வ பயங்கொண்ட அப்போஸ்தலர் களையே ஆண்டவர் சபையின் எல்லா வெளியரங்கமான ஊழியங் களிலும் பயன்படுத்துவார்!! சகோதரிகளாகிய நாம் யாவருக்கும் இந்த மகதலேனா மரியாள், "தாழ்மைக்கு" ஓர் அருமையான மாதிரியாகவே திகழ்கிறாள்! நமக்கு ஆண்டவர் ஆச்சரியமான வெளிப்பாடுகளைத் தந்தாலும்.... அவரும் அவருடைய சபையுமே சகல மகிமையையும் பெற்றிட வேண்டும்!!*

அன்பான சகோதரியே, உங்கள் துக்கத்தின் நேரத்தில் லாசருவின் கல்லறையில் அழுத இயேசுவை சற்று சிந்தித்துப் பாருங்கள்! கல்லறையில் அழுத மரியாளையும் சிந்தித்துப் பாருங்கள்! ஆகவே, நமக்கும் பிரியமானவர்கள் இந்த உலகைவிட்டுப் பிரிந்து போகையில் நாம் அழுவது இயற்கையேயாகும். இதுபோன்ற ஆழ்ந்த துக்கங்கள் நம்மை விட்டு அகலுவதற்கு கொஞ்ச நாட்கள் ஆகக்கூடும். இருப்பினும், நாமோ இந்த உலகத்திலுள்ள தெய்வ பக்தியற்ற ஜனங்கள் 'பதறி அழுவதைப்போல' நாம் இருந்துவிடக்கூடாது!

> **புலம்பி அழுவதும், கூக்குரலிட்டு அழுவதும், தேவனை கனவீனப்படுத்தும் வார்த்தைகளைப் பேசுவதும், தேவனை முறையிட்டுக் கேள்வி கேட்பதும் நம்மிடத்தில் ஒருபோதும் காணப்படவே கூடாது!**

மரணம் சம்பவித்த சில வீடுகளில் அங்குள்ளவர்கள் தேவனைத் திட்டுவதை நான் கேட்டிருக்கிறேன். அதுபோன்ற இடத்தில், அந்த இடத்தை விட்டே போய்விடலாமா என்றுகூட நான் எண்ணி யிருக்கிறேன். இச்சமயங்களில், எதிர்காலத்திற்கென நமக்கு ஓர் **உயிருள்ள நம்பிக்கை** *இருக்கிறது என்பதையே அங்கு கூடியிருக்கும் புறஜாதிகள் அறிந்துகொள்ள வேண்டும்! ஆண்டவருக்குள் மரித்த வர்கள் அவருடைய சமூகத்திற்குள் உடனடியாகப் பிரவேசித்து விடுவார்கள்!! ஆகவே, மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்த*

படியால், எதிர்காலத்திற்கு ஓர் மகிமையான நம்பிக்கை நம் யாவருக்குமே இருக்கிறது!!

சில சமயங்களில் "மரித்துப்போன நம்முடைய அன்பானவர்களை **நித்திய காலமாய்** இழந்துவிட்டோமா? அல்லது இல்லையா?" போன்ற கடினமான கேள்விகள் கேட்கப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். இதுபோன்ற கேள்விகளை ஆண்டவரிடமே நாம் ஒப்புக்கொடுத்திட வேண்டும். ஏனெனில் "மறைவானவைகள் கர்த்தருக்கே உரியவைகள்" என வேதம் கூறுகிறது. இதுபோன்ற கேள்விகளுக்கு மானிடராகிய நம்மில் ஒருவர்கூட பதில் சொல்லிவிட முடியாது! இச்சமயங்களில் நீங்கள் குறி சொல்வதைப் போலவோ அல்லது கேள்விகளுக்கு பதில் கண்டு தரும் "தீர்க்கதரிசிகளைப் போலவோ" ஆகிவிட முயலாதிருக்கக் கடவோம்! இத்தகைய செயல்களெல்லாம் நாம் செய்துவிடக் கூடாதென உபாகமம் 18:10-12 வசனங்களில் ஆண்டவர் எச்சரித் திருக்கிறார். நம் துக்கங்களை மேற்கொள்ள **ஆண்டவர் மாத்திரமே** நமக்கு உதவி செய்திட முடியும்!

துக்கமான **மனச்சோர்வு** என்ற உளையான சேற்றுக்குள் நீங்கள் சிக்கிக் கொள்ளாதபடி கவனமாயிருங்கள்! அப்படியாகிவிட்டால், உங்கள் உணர்வுகளுக்கும், உங்கள் மன நிலைக்கும், உங்கள் ஆவிக்குரிய நிலைக்கும் நீங்களே தீங்கு செய்துவிட முடியும். இந்நிலையில், உங்கள் மனதில் தோன்றும் யூகங்களையெல்லாம் கூறி மற்றவர்களையும் நீங்கள் இடறச் செய்துவிட முடியும். ஒரு நாளில் நீங்கள் அன்புகூர்ந்தவரை பரலோகத்தில் காணும்போது.... இப்பூமியில் ஆண்டவரோடு நெருங்கி நடக்கும் வாய்ப்பை இழந்து வீணாக்கிய அந்த மனச்சோர்வின் காலங்களுக்காய், நீங்கள் 'அன்று' வெகுவாய் துக்கமடைவீர்கள்!

நம்மைவிட்டுப் பிரிந்த அன்பானவர்களுக்காய் நாம் அழுதிடும் சமயங்களில் 1கொரி. 15-ம் அதிகாரம் நமக்கு ஆறுதலைக் கொண்டு வரும் ஓர் நல்ல பகுதியாகும். மேலும், நாம் மற்றவர்களைப் போல் ஏன் துக்கமடைந்திடக் கூடாது என்பதை 1தெச.4:13-17 வசனங்களும் நேர்த்தியாய் கூறுகிறது: "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர் களினிமித்தம் நீங்கள் **நம்பிக்கையற்றவர்களான** மற்றவர்களைப் போல துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை. இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூட கொண்டுவருவார். கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வ தில்லை. ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான

தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது **கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.** *பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்" என வாசிக்கிறோம்.*

இயேசுவும், நமக்கு நேரடியாகக் கூறுவதுபோல, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் **மரித்தாலும் பிழைப்பான்.** *உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்" (யோ.11:25,26) எனக் கூறினார்.*

மேலும் ஆண்டவர் உயிர்த்தெழுந்தவுடன், "பயப்படாதே, நான் முந்தினவரும், பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன். மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். **மரணத்துக்குரிய திறவுகோல்களையும் உடையவருமாயிருக்கிறேன்"** *என்றே யோவான் அப்போஸ்தலனிடம் கூறினார் (வெளி.1:17,18).*

மேலும், "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" என்று தாவீது கெம்பீரித்தார்! (சங்.23:4). இதேபோல் ரோமர் 8:38-ம் வசனம்,"மரணமானாலும்... கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவிலுள்ள தேவ அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாது" எனக் கூறுவதையும் பாருங்கள்.

அன்பார்ந்த தாயே, "நான் மரிக்கும் முன்பே, என் பிள்ளை மரித்து எனக்கு முன் பரலோகம் சென்றுவிட்டதே!" என நீங்கள் தேம்பி அழக்கூடும். ஆனால், உங்கள் பிள்ளையோ சகல துன்பத்திலிருந்தும் விடுதலையாகி இன்று இயேசுவின் ஐக்கியத்திலும், தூதர்களின் ஐக்கியத்திலும் மகிழ்ந்து இருப்பதை சற்று எண்ணிப் பாருங்கள்! ஒரு நாளில் உங்களை வரவேற்பதற்காகவும் உங்கள் பிள்ளை உங்களுக்காக அங்கு காத்துக் கொண்டிருக்கிறது! ஆகவே, **இனி நீங்கள் அழ வேண்டாம்.** *ஒரு தேவனுடைய பிள்ளை கர்த்தரிடத்தில் சென்ற பிறகு, இப்பூமியில் இருக்கும் தனக்கு அன்பானவர்களிடத்தில் பேசியதைப் போன்ற கீழ்காணும் ஒரு கவிதையை வாசித்துப் பாருங்கள்:*

நான் சென்ற ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....

நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
ஆ, அந்த ரம்மியம்... உங்கள் வருங்கால வீடு!
இரட்சகரின் பரவச முகம்! ஆழ்ந்த சமாதானம்!
யாது பயம் இன்றி... மட்டில்லா மகிழ்ச்சி!

இத்தனை கண்ட நான், இந்த பூமியின் துயரத்திற்கு
"மீண்டும் திரும்பிவர" நீங்கள் விரும்புவது நலமா?
நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
என் பயணம் தனிமையல்ல, இரட்சகரும் உடனிருந்தார்
யாத்திரையில் கரம் பிடித்தே, மகிமை தேசம்
அழைத்து வந்தார்! ஆ, ஆச்சரியம்...
என வியந்தே மகிழ்வீர்கள்!
நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
நான் கண்ட காட்சி உங்களை ஆட்கொண்டு,
தனிமை அகற்றி... பயத்தை களைவீர்கள்!
அவர் தந்த பாதுகாப்பை கண்கண்டு வியப்பீர்கள்!
'இத்தனையோ உம் காருண்யம்' என வியப்பீர்கள்!
நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
என்னோடு அமர்ந்திட்ட தேவனை கண்டு,
'அவரண்டை என்று சேர்வோம்?' என வாஞ்சித்து,
துரிதப்பட தவிப்பீர்கள்! ...ஒரு ஆன்மா இழந்தாலும்,
துடித்திடும் அவரிதயம்! மீட்கப்படும் ஆன்மாவிற்கோ
அவரிதயம் மகிழுமே! அதுவே, சிருஷ்டிகரின் பேரானந்தம்!
நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
அவரமைத்த நித்தியமே எனது வாசஸ்தலம்,
ஏங்கிடும் உன் உள்ளமும் "பரலோகம் காணுமே!"
இம் மகிழ்ச்சி விலகியே வாழ்ந்திடேன் என்பீரே!
இனி பரலோகம், நம் இல்லம்! அது இன்றி நாமில்லை!!
நான் இருக்கும் ஸ்தலத்தை நீங்கள் கண்டிருந்தால்....
"கூடிடுவோம் மீண்டுமென" அன்று நீ அறிவீர்கள்!
பிரிந்தாலும் இன்றுமே 'இடைவெளி' சுருக்கமே!
அவர் மார்பில் பாதுகாப்பாய் என்றென்றும் தங்கியே
பரன் வாசல் நாள்தோறும் காத்திருப்பேன் உனக்காக!
உன்னை வரவேற்கும் அந்நாள்...
என் மகிழ்ச்சியின் பொன்னாள்!!

(Author Unknown)

இவ்வாறு, கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்கும் **மகிமையான நம்பிக்கை** *எவ்வளவு பெரிதென்பதை சற்றே தியானித்து இன்புறுங்கள்!*

உபத்திரவநேரம், தேவனை மகிமைப்படுத்தும் நேரம்

5

என்னுடைய சிநேகிதிகளில் அநேகர் ஆண்டவராகிய இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்த போதும், அவர்களுடைய கணவர்களோ இரட்சிக்கப்படாதவர்களாகவே இருந்தார்கள். இந்நிலையில், அவர்களின் கணவன்மார்கள் அவர்களைத் துன்புறுத்தவும் செய்தார்கள். சில சமயங்களில், அவர்களை சரீரப் பிரகாரமான வேதனைப்படுத்தவும், பல்வேறு வழிகளில் அநேகருக்கு முன் இழிவுபடுத்தவும் செய்தார்கள். இவர்களில் சிலர், அவர்கள் விரும்பாவிட்டாலும், விவாகரத்தும் செய்யப்பட்டார்கள்! இன்னும் சிலர், இந்த இழிவுகளையெல்லாம் தங்கள் குடும்பத்தின் சமாதானத்திற் காகவும், தங்கள் பிள்ளைகளின் நலனுக்காகவும் 'மௌனமாய்' சகித்துக் கொண்டார்கள்!!

இவ்வாறு, இருதயத்தில் சொல்லிமுடியாத பாரத்தினால் அழுது கொண்டிருக்கும் இல்லங்கள் இன்று ஏராளமாய் இருக்கின்றன. இதுபோன்ற மனைவியர்களுக்கு ஆண்டவர் தன் **கிருபையைத் தந்தருளி,** ஆண்டவருக்கு அவர்கள் கடைசிமட்டும் உண்மையாய் நிலைநிற்கவும், கிறிஸ்துவின் சுபாவமான மன்னிப்பிற்கும், சாந்தகுணத்திற்கும், அடங்கியிருத்தலுக்கும் வலிமையான சாட்சியாய் இருக்கும்படியும் செய்திருக்கிறார். இவ்வாறு, ஆண்டவர் நிமித்தம் தன் தாய் துன்பத்தில் பொறுமையாய் இருப்பதை அவர்களின் பிள்ளைகளும் காண்கிறார்கள்.

தன் தாயின் சாட்சியை வைத்து இந்தப் பிள்ளைகளும் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்கள்! தீமையைத் தேவன் எவ்வாறு நன்மையாய் மாற்றுகிறாரென்பதைப் பாருங்கள்! நாளாவட்டத்தில், இவர்களில் சிலருடைய கணவன்மார்கள் ஆண்டவருக்குள்ளாய் ஆதாயம் செய்யப்பட்டதையும் கண்டிருக்கிறோம்!

என்னுடைய சிநேகிதிகளில் ஒருத்தியின் கணவர் "ஓர் இரகசிய குழுவில்" உறுப்பினராய் இருந்தபடியால், தான் அடைந்த சொல்லி

முடியா துன்பங்களை எனக்கு கூறினாள். பல ஆண்டுகளாய் அவளுடைய வீட்டில் குழப்பமே நிலவியது. தன் கணவருக்காக அவள் சிந்திய கண்ணீருக்கு அளவேயில்லை! அந்த குழுவோடு அவர் கொண்டிருந்த தொடர்பினால் ஏற்பட்ட விளைவுகள் குடும்பத்தைப் பாதித்து விடுமே, என தன் கணவரிடம் அந்த சகோதரி கெஞ்சி அழுது பார்த்தாள். ஆனால் அவரோ, அந்த குழுவைவிட்டு வெளிவர முடியாத நிலையில் இருந்தார். அந்த குழுவிலிருந்த பணக்கார வியாபாரிகளின் தொடர்பு அவருக்கு இருந்ததால், அவரும் பணக்காரராய் மாறி விட்டார்!

இதுபோன்ற தந்திரத்தைத்தான் இயேசுவை சோதிப்பதற்கும் சாத்தான் முயற்சித்து "என்னை நீர் தாழப் பணிந்து கொண்டால், இந்த பூமியின் **சகல இராஜ்ஜியங்களையும் அதன் மகிமையையும்** உனக்குத் தருவேன்" எனக் கூறினான். ஆனால் "இயேசுவோ" சாத்தானைக் கடிந்து கொண்டு, தனக்கு அப்பாலே போகும்படி விரட்டியடித்தார்!

இத்தகைய 'இரகசிய நிறுவனங்களில்' சிக்கிக் கொண்ட சிலர் அதிலிருந்து வெளியேறி கிறிஸ்தவர்களாய் மாறியிருக்கிறார்கள். அவ்வாறு வெளிவந்த சகோதரர்கள், அக்குழுவைப்பற்றி சில தகவல் களைக் கூறியிருக்கிறார்கள். அக்குழுவில் புதிய உறுப்பினராய் சேர விரும்புகிறவர்கள், "அக்குழுவின் சட்டதிட்டங்களை நாங்கள் மீறினால் எங்களுக்கும் எங்கள் குடும்பங்களுக்கும் சாபம் உண்டாகட்டும்!" என அறிக்கை செய்யவேண்டுமாம். இன்னும் சில குழுக்களில், குழுவின் மீது கொண்ட தங்கள் விசுவாசப் பிரமாணத்தை, தங்கள் சொந்த இரத்தத்தினால் எழுதித் தரவேண்டுமென்றும் கூறுவார்களாம்! இக்குழுவில் சேரும் அநேகர், இவ்வாறு தாங்கள் அளிக்கும் வாக்குறுதிகள் எவ்வளவு அபாயகரமானது என்பதை அறியாமலே செய்கிறார்கள். இன்னும் சில குழுவினர் இரகசியமாய் "சாத்தானுக்கே" ஆராதனை செய்கிறார்கள்!

இவ்வாறு தாங்களாகவே தெரிந்து கொண்ட கொடிய இரும்பு விலங்கிலிருந்து ஒருவன் விடுபட்டு வருவது, அவ்வளவு எளிதான காரியமல்ல!

இருப்பினும், கடந்த நாட்களில் செய்த ஒவ்வொரு தீமையான உறுதிமொழிகளும் 'வாபஸாய்' மாறும்படி தேவன் ஒருவனுக்கு உதவி செய்திட முடியும்! இதுபோன்ற அடிமைத்தன குழுவிலிருந்த அநேகரை இப்போது ஆண்டவர் விடுதலை செய்திருக்கிறார்! இவர்களில் ஒரு சிலர் இந்த தீய நிறுவனங்களுக்கு ஒரு காலத்தில் தலைவர்களாயும் இருந்திருக்கிறார்கள்!!

ஆகவே, இதுபோன்ற நிலையிலிருக்கும் கணவருக்காக நீங்கள் ஜெபிப்பதை ஒருக்காலும் நிறுத்திவிடாதிருங்கள். கண்ணீர் சிந்தி

விசுவாசத்துடன் ஜெபம் செய்யுங்கள். உங்களுக்கு ஒரே ஒரு மகன் மாத்திரமேயிருந்தால் எப்படி ஜெபிப்பீர்களோ, அதற்கு ஒப்பாகவே **உங்கள் கணவருக்காக ஆண்டவரின் பாதுகாப்பை வாஞ்சித்து ஜெபம் செய்யுங்கள்.** கிறிஸ்து சிலுவையில் நமக்காக மரித்தபோது அனைத்து சிறையிருப்பு விலங்குகளையும் முறித்துவிட்டார்! ஆம், சிறைப்பட்டிருப்பவர்களை விடுதலையாக்கும்படியே அவர் இந்த பூமிக்கு வந்தார்!

திருமணமாகாத சில பெண்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியால், தங்கள் உறவினர்களிடமிருந்து கடுமையான உபத்திரவங்களைச் சந்தித்திருக்கிறார்கள். தன் மகள் இயேசுவை ஏற்றுக்கொண்டபடியால் "**தான் தற்கொலை செய்யப்போவதாக**" அவளுடைய தாய் அச்சுறுத்தினாள்! இவ்வாறு தன்னுடைய நலனுக்காய் பாடுபட்ட அன்புள்ள தாயை, உங்கள் விசுவாசத்தினால் துன்புறுத்த வேண்டியிருக்கிறதே என்ற உங்கள் **இருதயத்தின் வலி** எவ்வளவாயிருக்குமென்பதை இயேசு அறிந்திருக்கிறார்.

இருப்பினும், நம் பெற்றோர்களைக் காட்டிலும் தேவனையே அதிகமாய் நேசிக்கும்படியும், இந்த உறுதியில் மரணபரியந்தம் நிலைத்திருக்கும்படியும் ஆண்டவர் நம் யாவருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்!

இந்நிலையில் உங்கள் பெற்றோர்கள் ஆண்டவரிடத்தில் மனந்திரும்பி வரும்படி நீங்கள் ஜெபிக்கும் கண்ணீரின் ஜெபங்கள் ஒருக்காலும் வீணாகிப்போகாது! இவ்வாறு தன் மகளின் விசுவாசத்திற்காக தற்கொலை செய்வதாக அச்சுறுத்திய தாய், சில வருடங்களுக்குப் பிறகு, தன் மகள் ஓர் அருமையான கிறிஸ்தவ சகோதரனை மணந்து கொள்ளும் விழாவில் மிகுந்த மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டார்கள்!

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதினிமித்தமோ, அல்லது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிந்ததினிமித்தமோ சில வாலிபப் பெண்கள் வீட்டை விட்டே துரத்தப்பட்டதை நான் அறிந்திருக்கிறேன். அதுபோன்ற வாலிபப் பிள்ளைகளை **தேவன் கனப்படுத்தி**, ஓர் மகிமையான எதிர்காலத்தை அவர்களுக்கென ஆயத்தம்செய்து வைத்திருப்பாரென்பதை நான் அருதியிட்டுக் கூறிட முடியும்! கடைசி நாளில் பிதாவானவர் அவர்களைப் பார்த்து "இதோ என் நேசக் குமாரத்தி! இவளில் நான் பிரியமாயிருக்கிறேன்!!" என நிச்சயமாய் உள்ளம் பொங்கிடக் கூறிடுவார்!!

மேலும், **பொருளாதார நெருக்கடியினிமித்தம்** உங்கள் கணவரின் பெற்றோர்கள் வீட்டிலேயே காலமெல்லாம் வாழவேண்டிய நிலையில் நீங்கள் இருக்கிறீர்களா? அந்தப் பெற்றோர்கள் எவ்வளவுதான் நல்லவர்களாயிருந்தாலும் நீங்களோ "ஓர் கூட்டுக் குடும்பமாகவே"

வாழ்ந்திடவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறீர்கள். உங்கள் இல்லத்தை உங்கள் கணவரின் உறவினர்களுக்கும் பகிர்ந்தளித்து.... உங்கள் கணவரின் தாய்தான் வீட்டை நிர்வகிக்கவும் செய்கிறார்! வீட்டிலுள்ள அனைத்தும் பொது சொத்தாகவும், சிற்சில சமயங்களில் உங்கள் 'சொந்த சிந்தைகள்கூட' பொது சொத்தாய் மாறிப்போவதை நீங்கள் உணருகிறீர்கள்! இந்த துக்கத்தால் ஆட்கொள்ளப்பட்டு இருதயத் திற்குள் நீங்கள் அழுகிறீர்கள்!! **உங்களுக்கென சொந்தக் குடும்ப மில்லாதபடி ஏமாற்றப்பட்டதாகவே** நீங்கள் உணருகிறீர்கள்.

உங்களுடைய உணர்வுகளையெல்லாம் உங்கள் கணவரிடம் பகிர்ந்து கொள்ள விரும்பினாலும், அவரின் உறவினர்களைப்பற்றி எது சொன்னாலும், அது அவரைப் பாதிக்குமென அறிந்து எதுவுமே அவரிடம் உங்களால் கூற முடிவதில்லை!

இவ்வித **துயரச் சூழ்நிலைகளை,** நம் இந்திய தேசத்திலுள்ள எத்தனையோ பெண்களைப் போலவே **ஏற்றுக்கொண்டு** "அந்தந்த நாளுக்காக மட்டுமே வாழ்ந்து" காலத்தைக் கடந்து முன்னேறுங்கள்!

இந்திய கலாச்சாரத்தை உங்களால் மாற்றிட முடியாது! ஆனால், "உங்களை" தேவன் மாற்றிட முடியும்!! பிறரை **மன்னிக்க** கற்றுக் கொண்டு, உங்களுக்கு எதிராய் பேசப்பட்ட வார்த்தைகளினிமித்தம் **மனம் புண்படாதிருக்கவும்** பழகிக்கொள்ளுங்கள். அந்தக் கொடிய வார்த்தைகள், இன்றிலிருந்து சுமார் நூறு வருடங்களுக்குப் பிறகு யாதொரு மதிப்புமற்றதாகவேயிருக்கும்! இதற்குப் பதிலாக, சாதகமான நன்மையான அநேக சூழ்நிலைகளைச் சிந்திக்கப் பழகுங்கள். அன்றாட ஜீவியத்தில் உங்கள் வீட்டில் நீங்கள் பெற்றிருக்கும் சகாயமான உதவிகள், தங்கள் தாத்தா பாட்டிகளுடன் பிள்ளைகள் குதூகலமாய் இருக்கும் சிலாக்கியங்கள்.... போன்ற காரியங்களையே எண்ணி மகிழுங்கள், ஏனெனில் எத்தனையோ குடும்பங்கள் தங்கள் உறவினர் களை விட்டு வெகுதூரமான இடங்களில் ஜீவிக்கிறார்களே!

இவ்வாறு, வீட்டிலுள்ள பல்வேறு குழப்பங்கள் மத்தியிலும், நீங்களோ அந்தரங்கத்தில் உங்கள் இருதயத்திற்குள்ளாய் கர்த்தரோடு இசைந்து நடக்கும் இனிய அனுபவத்தைப் பெற்றவர்களாய் இருந்திட முடியும்!

இப்போது, உங்களைப் போலவே கடினமான சூழ்நிலைகளில் வாழும் எத்தனையோ இந்தியப் பெண்களுக்கு நீங்களே ஆறுதலாயும் பெலனாயும் இருந்திட முடியும். நசுக்கப்படுவது போன்ற ஒவ்வொரு அனுபவங்களும் 'கிறிஸ்துவின் பாடுகளில்' நாம் பங்குபெறுவதற்கே உதவிசெய்கின்றன! இதன் மூலமாய் **கிறிஸ்துவின் சுபாவத்தைப் பெற்று** இதுபோன்ற அனுபவங்களுக்குள் கடந்து வரும் நம்மைச் சுற்றியுள்ள

மற்றவர்களுக்கு **ஆசீர்வாதமாயும்** இருந்திட முடியும்!!

"போதுமான வரதட்சணை" கொண்டுவராதபடியால் உங்கள் கணவரின் உறவினர்கள் தங்கள் வார்த்தைகளாலோ அல்லது தங்கள் செயல்களாலோ உங்களை வேதனைப்படுத்துகிறார்களா? இதனிமித்த மாய், உங்களைச்சூழ இருப்பவர்களினிமித்தம் நீங்கள் சலிப்படைந்து "எனக்குத் திருமணமாகாமலே இருந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே" என்றெல்லாம் சிந்திக்கத் துவங்கிவிட்டீர்களா? கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் "வரதட்சணையினிமித்தமான மரணத்தை" நாம் செய்தித்தாளில் வாசிப்பது எத்தனை வருத்தமாயிருக்கிறது. உங்கள் ஜீவன் உங்களுடையதல்ல! அது தேவனுக்கே சொந்தமானதாகும். ஆகவே, அதை நீங்களாகவே முடித்துக் கொள்ள ஒருபோதும் துணியாதிருங்கள்!

அதற்குப் பதிலாய் நீங்கள் சந்திக்கும் உபத்திரவங்களைத் தாங்கிக் கொள்ளும்படியான கிருபையைத் தேவனிடத்தில் கேளுங்கள்!

உங்கள் குடும்பத்திற்கு "துக்கத்தைக் கொண்டுவரும்" எந்தச் செயலையும் செய்யாதிருங்கள். உங்கள் பாதுகாப்பை ஆண்டவரிடமே கண்டடையுங்கள்! எந்தச் சோதனையும் உங்கள் திராணிக்கு மேலாய் சென்றுவிட தேவன் அனுமதிப்பதேயில்லை என தேவன் வாக்குதத்தம் செய்துள்ளார். ஆகவே, உங்களுடைய நாட்களையெல்லாம் பிறரைக் குற்றம்சாட்டுவதற்கும் குறைசொல்லுவதற்குமே நீங்கள் பயன் படுத்துவது ஒன்றுக்கும் உதவாத வீணான செயலேயாகும்! தேவன் உங்கள் பட்சத்தில் கிரியை செய்யும்படி **விசுவாசத்துடன் காத்திருங்கள்.** ஆம், அவரில் நம்பிக்கையாயிருப்பவர்கள் ஒருபோதும் வெட்க மடைந்து போக மாட்டார்கள் (ஏசாயா.49:23). மேலும், கர்த்தருக்குக் காத்திருப்பவர்கள் "ஒரு நாளில்" கழுகுகளைப்போல செட்டைகளை யடித்து உயர எழும்பி, பறந்து பறந்து ஆனந்திப்பார்கள் (ஏசாயா.40:31).

உங்கள் சூழ்நிலைகளுக்கு **ஏற்ற ஞானத்தை** ஆண்டவர் தரும்படி அவரிடம் கேளுங்கள்.

இன்னும் சில விசுவாசிகள், ஆண்டவர் நிமித்தமாய் **நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்லப்படும் "விசேஷித்த பாக்கியத்தையும்"** பெற்றிருக்கி றார்கள். ஆம், இவ்வித அனுபவம் உண்மையிலேயே பாக்கியமானதும் கனத்திற்குரியதுமாகும்... ஏனென்றால், நம்முடைய ஆண்டவரேகூட அவருடைய எதிரிகளால் இவ்விதமாய் விசாரணை ஸ்தலத்திற்கு இழுத்துச்செல்லப்பட்டிருக்கிறார்! உங்கள்மீது தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் பொய்யானதாய் இருக்கலாம். ஆகிலும், இதுபோன்ற நிகழ்ச்சிகள் சம்பவித்திட ஆண்டவர் அனுமதிப்பதிலும்

ஒரு நோக்கம் இருக்கத்தான் செய்கிறது! நாம் நீதிபதிகளுக்கு முன்பாக நிற்கும்போது "என்ன பேச வேண்டுமென்று நீங்கள் பயப்பட வேண்டாம், நீங்கள் என்ன பேச வேண்டுமோ, அதை அவரே நமக்குச் சொல்லித் தருவார்!" என ஆண்டவரே நமக்கு உறுதியளித்திருக்கிறார். ஆகவே ஒரு சிறு குழந்தை தன் தகப்பனை நம்பியிருப்பதைப்போல், நாம் அவர் மீது நம்பிக்கையாயிருக்கலாம்!

இவ்வாறு அநியாயமாய் நீதிமன்றங்களுக்கு இழுத்துச் செல்லப் பட்டவர்களுக்கு அற்புதமான வாக்குதத்தங்களை தேவன் தமது வசனங்களில் தந்திருக்கிறார். இந்த வசனங்கள் அனைத்தையும் இயேசுவின் நாமத்தில் உங்களுக்கென நீங்கள் சொந்தமாய் பற்றிக் கொள்ளுங்கள்:

"**கர்த்தரே எனக்காக வழக்காடும் வழக்கறிஞரும்** *பாதுகாப்பவருமா யிருந்து என்னைத் தப்புவித்து விடுவிப்பார்" (1சாமு. 24:15* LIVING*).*

"பயப்படாதிருங்கள்! கலங்காதிருங்கள்! ஏனெனில், இந்த யுத்தம் உங்களுடையதல்ல.... தேவனுடையது! நீங்கள் அமைதியாய் நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்! கர்த்தர் உங்களோடேயிருக்கிறார்!" (2நாளா.20:15-17 LIVING*).*

"நீதிமான்கள் நியாயாதிபதிகளுக்கு முன்பாய் நியாயம் விசாரிக்கப் படுகையில், ஆக்கினைக்குள்ளாய் தீர்க்கப்படும்படி கர்த்தர் அவனை அவர்கள் கையில் விட்டுவிட மாட்டார்" (சங்கீதம் 37:33 LIVING*).*

"நியாயத்தீர்ப்பு கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலு மிருந்து (அதாவது, எந்த மனிதனிடத்திலுமிருந்து) வராது. **தேவனே நீதிபதியாயிருந்து** *சிலரை ஆக்கினைக்குள்ளாக்குவார்! சிலரை விடுவிப்பார்! ஆம், துன்மார்க்கனுடைய வலிமையை முறித்து, நீதிமானின் வலிமையையோ (கொம்புகளையோ) உயர்த்துவார்!" (சங்கீதம் 75:6-10* LIVING*).*

"தமது கண் கண்டபடியோ, **பொய்சாட்சியின்படியோ** *அல்லது காது கேட்டபடியோ கர்த்தர் தீர்ப்பு வழங்கிடமாட்டார். ஏழைகளுக்கும், சிறுமையானவர்களுக்கும் கர்த்தர் பாதுகாப்பளித்து, அவர்களுக்கு எதிரியாய் வந்த துன்மார்க்கர்களை சங்கரிப்பார்" (ஏசா 11:3-5* LIVING*).*

"அவர்களின் வசைச் சொற்கள் எனக்குத் தீங்கு செய்யாது. ஏனெனில் கர்த்தராகிய ஆண்டவரே எனக்கு உதவி செய்கிறார். ஆகவே, அவைகளைத் தாங்கிக் கொள்ளும்படி நான் கற்பாறையைப் போலாகினேன்! **நான் வெட்கப்பட்டு போவதில்லை** *என்பதை அறிந்திருக்கிறேன். ஏனெனில், தேவன் எனக்குச் சமீபமாய் இருக்கிற படியால் நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பார். எனக்கு எதிராய்*

குற்றம்சாட்டி வழக்காடுவதற்கு தைரியம் கொண்டவர்கள் யார்? நாம் சேர்ந்து வழக்காடு மன்றத்திற்குச் செல்வோம்! அவர்கள் எனக்கெதிரான குற்றச்சாட்டுகளைக் கூறட்டும்! சர்வவல்ல கர்த்தரே எனக்குப் பிரதியாய் வழக்காடி, **நான் குற்றமற்றவன் என்பதை நிரூபிப்பார்!** *எனக்கு எதிராளிகளாய் வந்தவர்கள் அனைவரும் மறைந்து போவார்கள். பொட்டுப்பூச்சி அரித்த வஸ்திரத்தைப் போல் பழசாகிப் போவார்கள். மற்றவர்களை அழிப்பதற்கு தந்திரம் செய்த யாவரும் அவர்களுடைய தந்திரத்தினாலேயே அழிந்து போவார்கள். இது கர்த்தரால் உண்டாயிருக்கும்... அவர்கள் அனைவரும் வேதனையில் கிடப்பார்கள்!" (ஏசா.50:7-11* LIVING BIBLE).

"*கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், உனக்கு விரோதம் செய்தவர்கள் தூரமாவார்கள், நீயோ சமாதானமாயிருப்பாய்! நான் உன் பட்சத்திலிருக்கிறபடியால் திகில் உன்னை அணுகாது! உன் சத்துருக்கள் வேரோடு பிடுங்கப்படுவார்கள். உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோகும்.* **வழக்காடு மன்றத்தில் உலாவும் எல்லாப் பொய்களுக்கும் எதிராய் நீ நியாயத்தைக் காண்பாய்**" *(ஏசாயா .54:14-17* LIVING*).*

"*கர்த்தர் சொல்கிறார், இதோ நானே உன் வக்கீல்! உன்னுடைய வழக்குகளை நானே விசாரிப்பேன்!" (எரேமியா* **51:36** LIVING*).*

"*ஓ என் ஆண்டவரே, எனக்கு வக்கீலாயிருந்து நீரே என் வழக்கை நடத்தும்! ஏனெனில் நீரே என் பிராணனை மீட்டுக்கொண்டீர். அவர்கள் எனக்குச் செய்த அநியாயத்தை நீர் கண்டீர், என் நியாயாதிபதியாய் நீரேயிருந்து என் நியாயத்தை நிரூபித்தருளும்.*

எனக்கு விரோதமான அவர்களின் சதிகளை நீர் கண்டிருக்கிறீர். எனக்கு விரோதமாய் அவர்கள் பேசிய நிந்தையான வாய் மொழிகளையும் அவர்கள் கிசுகிசுத்து பேசிக்கொள்ளும் திட்டங்களை அறிந்திருக்கிறீர். என் அழிவிற்கு வகைசெய்து நகைப்புடன் பாடிடும் பாடலையும் கண்டிருக்கிறீர்!" (புலம்பல் 3:58-63 LIVING).

"*தேவன், தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்" (லூக்கா.18:7,8* LIVING*).*

"*அவருடைய வேளை இன்னும் வராதபடியினால்* **ஒருவனும் அவரைப் பிடிக்கவில்லை**" *(யோவான் 7:30; 8:20).*

ஆகவே, நீங்களோ அல்லது உங்கள் கணவரோ ஆண்டவரினி மித்தமாய் உங்களைக் குற்றம்சாட்டுகிறவர்களுக்கு முன்பாக நீதிமன்றத்தில் நிற்க வேண்டியதிருந்தால், அதனிமித்தம் அழாதீர்கள்!

உங்கள் கண்ணீர்களுக்கு அணை போட்டுவிடுங்கள்! அதற்குப் பதிலாய் உங்களைக் குற்றஞ்சாட்டுகிறவர்களுக்காகவே வருத்த மடையுங்கள்! அண்டசராசரங்களுக்கும் நீதிபதியாயிருப்பவர் அவர்களோடு இடைபடும் அந்த நியாயத்தீர்ப்பின் நாள் எத்தனை பயங்கரமாயிருக்கும்! இயேசுவும்கூட காட்டிக்கொடுக்கப்பட்டு பரிகசிக்கும் மக்களுக்கு முன்பாக விசாரணை மன்றத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். ஆகவே, அந்த நிகழ்ச்சி உங்களுக்கும் நடந்தால், அதைக்குறித்து ஆச்சரியப்படாதிருங்கள். நீங்கள் அவருடைய சீஷனன்றோ? அவரைப் போன்ற இதே அடிச்சுவட்டை நீங்களும் பின்பற்றிவர அவர் வழங்கியிருப்பது உங்களுக்குக் கிடைத்த விலையேறப்பெற்ற பாக்கியமேயாகும்! ஆகவே, மிகுந்த தைரியமா யிருங்கள்! இது, கண்ணீர் வடிக்கும் நேரமல்ல! அதற்குப் பதிலாய், துள்ளிக் குதித்து ஆர்ப்பரியுங்கள்! ஏனெனில், பரலோகத்தில் உங்கள் பலன் மிக அதிகமாய் இருக்கிறது என்றே வேதம் சுட்டிக் காட்டுகிறது. இந்த துன்பவேளையில், இயேசு உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார், ஒரு நாளில் உங்களை இந்த உலகிற்கு சுட்டிக் காட்டுவார்! கனப்படுத்துவார்!!

இந்தப் பூமியில் நம் வாழ்க்கை, துன்பத்தின் வாழ்க்கையாகவே இருந்திடவே அவசியமாயிருக்கிறது. அவருடைய பாடுகளில் நாம் பங்கு பெற்றாலும், **அவருடைய பொங்கி வழியும் மகிழ்ச்சியையும்** அவரே ஒவ்வொரு சோதனைகளிலும் நமக்குத் தருகிறார். நமக்கு முன்னோடியாய், அவரே தன்னுடைய நெருங்கிய நண்பனால் காட்டிக் கொடுக்கப்பட்டு நிந்தை மிகுந்த விசாரணை மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அவர் அறையப்பட்டார்! அதிகமாய் அடிக்கப் பட்டார்! அவருடைய முதுகு உழப்பட்டது! இன்று நாமாகிலும் ஒரு வக்கீல் அமர்த்திக்கொண்டு நியாயம் கிடைக்குமென நம்பிக்கையுடன் இருக்க முடியும். ஆனால் இயேசுவுக்கோ நியாயமான விசாரணை நடைபெறாமல், அநீதியாய் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டு, மரண தண்டனை பெற்றார். அவருடைய மரணம் எந்த ஒரு மானிடனும் இதுவரை அடைந்திடாத கொடூர மரணமாய் இருந்தது! அந்த மரணத்திலும்கூட அவருடைய உள்ளமோ மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது.... ஏனெனில், அந்த துன்பங்களுக்குப் பிரதிபலனாய், உங்களையும் என்னையும் பாவத்தின் பிடியிலிருந்து விடுதலையாக்கி, நம்மைத் தன்னுடைய சொந்த மணவாட்டியாய் ஆக்கிக்கொள்ளும்

பிரதிபலன்மேல் அவருடைய சிந்தை நிலைநின்றதே காரணமாகும்!! இவ்வாறு பாடுகளின் மூலமாய் நமக்கு மகிழ்ச்சியைத் தருவதற்கு அவரே காரணரானார்!

ஏசாயா.53:7-9 வசனங்கள் என்னை எப்போதும் பரவசப்படுத்து கின்ற அருமையான வசனங்களாகும். "அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப் பட்டும் இருந்தார், ஆனாலும் அவருடைய **வாயை அவர் திறக்கவில்லை.** அடிக்கப்படும்படி கொண்டுபோகிற ஒரு ஆட்டைப் போலவும் தன்னை மயிர்கத்திரிக்கிறவனுக்கு (குற்றவாளிக் கூண்டில் நிறுத்திய வனுக்கு) முன்பாக **சத்தமிடாதிருக்கிற** ஆட்டைப் போலவும் அவர் தமது **வாயைத் திறவாதிருந்தார்!** சிறைச்சாலைக்கும் நியாயத்தீர்ப்பிற்கும் எடுத்துச் செல்லப்பட்டு மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார். ஆனால், அன்று வாழ்ந்த வம்சத்திலிருந்த ஜனங்களில், அவர்களுடைய பாவங்களினிமித்தமே" அவர் தண்டிக்கப்பட்டு மரித்தார் என்பதை அறிந்தவர்கள் யார்? அவரோ ஓர் துன்மார்க்கனைப் போல ஓர் ஐசுவரியவானின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். அவருடைய வாயில் எந்த தீமையான வார்த்தையும் வஞ்சனையும் காணப்படவில்லை" (LIVING BIBLE).

அப்போஸ்தலனாகிய பவுலும் சுவிசேஷத்திற்காக அதிகமான பாடுகள் பட்டார். ஆனால், அந்த சிறைச்சாலைக்குள்ளிருந்துதான் மகா உன்னதமான நிருபங்களையும் எழுதினார். சிறை துன்பத்தின் மத்தியில் எழுதப்பட்ட பிலிப்பியர் நிருபத்தில்தான் "**கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்**" என்ற புத்திமதியை நமக்கு எழுதினார்!

கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கும் யாவருமே ஏதாகிலும் ஒருவகையில் துன்பப்படுவார்கள்! ஆகவே அவ்விதத் துன்பங்கள் நமக்கு நேரிடும்போது "**ஏதோ புதுமையென**" நாம் திகைத்து விடக்கூடாது என 1பேதுரு.4:12 கூறுகிறது. துன்பங்கள் சூழும் "**ஒவ்வொரு வேளைகளிலும்**" ஆண்டவர் தமது வார்த்தையின் மூலமாய் நம்மைத் தேற்றுவார்!

"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது" என துன்பத்தோடு "பாக்கியத்தையும்" ஆண்டவர் இணைத்துக் கூறுவதைப் பாருங்கள் (மத்தேயு.5:10). நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களை **மன்னிக்கவும், அன்புகூரவும்,** அவர்களுக்காக **ஜெபிக்கவும்** இயேசு கற்றுக் கொடுத்தார்! இவ்வாறு, நமக்குத் தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்வது மூலமாய் "நாம் **அன்புள்ள** பிதாவின் பிள்ளைகள்" என்பதை நிரூபிக்கிறோம். ஆம், தேவன் **எல்லோருக்குமே** நல்லவராகத்தான் இருக்கிறார்! ஒருவேளை

உங்கள் நெருங்கிய நண்பரோ, அல்லது உறவினரோ உங்கள் முதுகிற்குப் பின்பாக உங்களுக்கு கொடிய தீங்கு இழைத்திருக்கலாம். அதற்காக நீங்கள் அழவேண்டாம்! அதற்குப் பதிலாய், "இயேசுவின் அடிச் சுவடுகளில்" நானும் நடந்துவர சிலாக்கியம் பெற்றேனே என்பதில் களிகூர்ந்திடுங்கள். இதுபோன்ற சமயங்களில் 'கிறிஸ்துவின் சிந்தையே' உங்களை ஆண்டு ஆட்கொள்ளக்கடவது!!

ஆண்டவர் நிமித்தமாய் நீண்ட ஆண்டுகளாய் சிறையிலிருக்கும் சில 'பாஸ்டர்களைக்' குறித்து நான் வாசித்திருக்கிறேன். அவர்களுடைய மனைவிகளுக்குத்தான் இது எத்தனை வேதனையாய் இருக்கக்கூடும்! இன்றும்கூட, அநேக நாடுகளில் உபத்திரவத்திற்குள் ஆளாகியிருக்கும் கிறிஸ்தவக் குடும்பங்களுக்காக நாம் யாவரும் ஜெபித்திட வேண்டும். நம் இந்திய தேசத்திற்கும் உபத்திரவங்கள் வரும் காலம் நெருங்கி விட்டதை நாம் உணர்கிறோம். நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருக்கும் படியாக தேவன் நம்மை காத்துக்கொள்ள நாம் ஜெபம் செய்திடக் கடவோம். இது சமயங்களில், ஆண்டவர் நிமித்தமாய் உபத்திரவத்திற்கு ஆளாகி மரித்த **இரத்த சாட்சிகளைப்பற்றிய புத்தகங்களை** நாம் வாங்கி வாசிப்பது நல்லது. இதுபோன்ற புத்தகங்கள், நாம் உபத்திரவங்களை சந்திக்கும் நேரத்தில் நம்மை ஸ்திரப்படுத்த நிச்சயமாய் உதவும்!

"இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:15) என்றும்,

"அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கன மகிமையை உண்டாக்குகிறது" (2 கொரி.4:17) என்றும்,

"நீ ஆறுகளைக்கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை"(ஏசா.43:2) என்றும்,

"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்தி லாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்ய திராணியுள்ளவர்களாகும் படி" (2 கொரி.1:4) என்றும்,

"தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்கு வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் எங்களை முற்றும்முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்" (எபி.7:25) என்றும்,

"இயேசுகிறிஸ்துவே நமக்காக பரிந்துரை செய்யும் நீதியுள்ள வக்கீல்" (1யோவான்2:1) என்றும்,

"நீதிமான் துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்" (சங்.112:7) என்றும்,

"அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்"(உபா.33:25,27) என்றும்,

“அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்திருக்கிறார்” (செப்.3:17) என்றும்,

“அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி.... தேவனிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது” (ரோமர் 8:28) என்றும்,

“தேவன் நமக்கு அடைக்கலமும், பெலனும் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்” (சங்.46:1) என்றும், பரலோகம் ஈந்திடும் மெய்யான ஆறுதலின் வார்த்தைகள் நம்மை காத்து நடத்துவதாக!

நாம் சந்திக்கப் போகும் “அக்கினிமயமான உபத்திரவங்கள்” என பேதுரு கூறினார்! ஆனால் ஆண்டவரோ, “நீ அக்கினியில் நடக்கும் போது வேகாதிருப்பாய்” என்றல்லவா கூறிவிட்டார்!(ஏசாயா 43:2).

அதாவது, உபத்திரவங்களின் நடுவில் நம் ஆத்துமா எக்காலத்திலும் அழிந்திடாது என்றே ஆண்டவர் வாக்குரைத்திருக்கிறார்.

நாம் ஜெபிப்பதற்கு இயேசு கற்றுக் கொடுத்திருக்கிறார். பரிசுத்த ஆவியானவரும் நமக்காக வாக்குக்கடங்கா பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார்! நம் துன்பங்களை வார்த்தையினால் ஜெபிக்க முடியாத தருணங்களில், **பரிசுத்த ஆவியானவர் நமக்காக உதவி செய்து** *ஜெபிக்கிறார்! ஆகவே இந்த நல்ல பரிசுத்த ஆவியானவரிடத்தில் நம்மை முற்றிலும் ஒப்புவிப்போமாக.... அப்போது, அவர் நமக்குள்ளிருந்து கூக்குரலிட்டு நமக்காக ஜெபிப்பார்!*

இம்மைக்குரிய துக்கத்திலிருந்து விடுதலை!

6

"**லௌ**கீக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது" என வேத வசனம் எச்சரிப்பதைப் பாருங்கள் (2கொரி.7:10).

ஸ்திரீகளுக்கு நடுவில் காணப்படும் பெரும்பாலான அழுகைகள் சுய-பட்சாதாபத்தினிமித்தமும், மனம் புண்பட்டதினிமித்தமும், அவமானப்பட்டதினிமித்தமும் அல்லது அவர்கள் விரும்பிய பூமிக் குரிய பொருட்கள் கிடைக்காததினிமித்தமுமே உண்டாயிருக்கிறது!

சுபாவமாகவே சில ஸ்திரீகள் அதிக உணர்ச்சிவசப்படுகிறவர் களாகவும், மனம் நோகிறவர்களாகவும் இருக்கிறார்கள். இவ்வித **ஆக்ரோஷமான சுபாவம்,** மிக எளிதில் அவர்களை ஆத்திரமூட்டச் செய்து விடுகிறது. ஆனால் யாக்கோபு 1:19 கூறும்போது,"கோபிக்கிறதற்கு தாமதமாயிருங்கள்" என்றே கூறுகிறது. மேலும், "மூடனின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" என்றும் பிரசங்கி 7:9 கூறுகிறது. ஜனங்கள் துரிதமாய் தங்கள் நிதானத்தை இழக்கும்படி சாத்தான் செய்துவிட்டு .... பின்பு சுய-ஆக்கினையின் உணர்விலே அவர்கள் உழன்று அல்லலுறும்படிச் செய்துவிடுகிறான். சாத்தானின் இவ்வித தந்திரத்திற்கு எச்சரிக்கையாய் இருங்கள்! 'கேடான இந்த நிலையிலிருந்து' குதித் தெழுந்து, உங்கள் பாவத்திற்காய் மனந்திரும்பி, ஆண்டவரிடம் வந்து விடுங்கள்!

சில ஸ்திரீகள் எப்போதும் **தங்களைவிட மேலான** சகோதரிகளை வைத்தே தங்களை ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்! இவ்வித ஒப்பிட்டுப் பார்க்கும் சுபாவம் அவர்களை அதைரியத்திற்கும், நம்பிக்கையை இழப்பதற்கும் நடத்தி அவர்களைச் சஞ்சலமான நிலைக்கு ஆளாக்கி விடுகிறது.

மற்றவர்களோடு உங்களை ஒப்பிட்டுப் பார்க்க விரும்பினால் "சேரியில் வாழும் மக்களைப் போன்ற" உங்களைவிட மோசமான நிலையிலுள்ள மக்களை வைத்தே உங்களை ஒப்பிட்டுப் பாருங்கள்!

சில பெண்கள் பழக்கத்திலேயே ''தனிமையாய்'' இருப்பவர்களாயும், பிறரைத் தனக்கு சாதகப்படுத்துகிறவர்களாயும் இருந்து, **தங்களின் ஆறுதலை** *எங்குமே பெற்றுக்கொள்ள முடியாதவர்களாய் இருக்கிறார்கள்! இந்த இழிநிலைக்குப் பதிலாக,* **ஆண்டவரோடு கொண்ட ஓர் நெருங்கிய உறவை** *வளர்த்துக் கொள்பவர்களாகவே நாம் இருந்திட வேண்டும்!*

இன்னும் சில பெண்கள், தங்கள் நடுத்தர வயதில் சரீர பெலஹீனமடைகிறபடியால் அவர்களின் ''ஹார்மோன் மாற்றத்தினால்'' சிறிய காரியத்திற்குகூட அழுகிறவர்களாய் இருக்கிறார்கள்! இதுபோன்ற மருத்துவ நிலைக்குட்பட்டவர்கள், சிகிச்சையின் மூலம் ஸ்திரப்படும்படி, ஒரு மருத்துவரைக் காண்பது நல்லது. தேவன்தான் நம்மை உருவாக்கினார்! நம்முடைய உடற்கூற்றை அவர் அறிந்திருக்கிறார்! 'நாம் வேண்டுதல் செய்தால்' வியாதியின் பெலஹீன நேரங்களில் நமக்கு உதவி செய்திட அவர் மிகுந்த ஆர்வம் கொண்டவராய் இருக்கிறார்.

இவ்வாறு **உங்களுடைய அழுகைகள் உலகப்பிரகாரமான துக்கத்திலிருந்து தோன்றுவதாய் இருக்கிறதா?** *என்பதை அறிய கீழ்காணும் குறிப்புகளைக் கொண்டு உங்களைச் சோதித்துப் பாருங்கள்:*

☆ நீங்கள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்களால், ஒரு சொகுசான மகளாய் நீங்கள் வளர்க்கப்பட்டீர்களா? அதனிமித்தமாய், சின்னச் சின்ன அசௌகரியங்களையும் தாமதங்களையுங்கூட உங்களால் சகித்துக் கொள்ள முடியாமல் எளிதில் எரிச்சலடைகிறீர்களா? உங்கள் அழுகைக்கு இதுதான் காரணமோ? இவ்வித நிலைக்கு ஆளாக்கிய உங்கள் பெற்றோர்களின் வளர்ப்பு குறித்து அவர்களை நீங்கள் குற்றஞ்சொல்லாதீர்கள்! அதற்குப் பதிலாய், உங்களின் எரிச்சலடையும் சுபாவம் ஓர் ''முட்டைப் பருவத்தில்'' தோன்றும் போதே, அது பொரித்து..... ஓர் விஷப் பாம்பாய் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு செய்வதற்கு முன்பே, அந்த முட்டையை அழித்துவிடுங்கள்! இவ்வாறு வளர்ப்பினிமித்தம் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, உதவி செய்யும்படி தேவனிடம் ஜெபம் செய்யுங்கள்.

☆ துணிமணிகள், இசை, ஆபரணங்கள், போன்றவைகளை நீங்கள் அதிகமாய் நேசிப்பதினிமித்தம்..... அது கிடைக்காத பட்சத்தில், மகிழ்ச்சியற்றவர்களாய் மாறி அழத் துவங்குகிறீர்களா? இதுபோன்ற உலகப்பொருட்களை உங்கள் பெற்றோர்களோ அல்லது உங்கள் கணவனோ வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில், அவர்களிடம் நீங்கள் சண்டையிடத் துவங்குகிறீர்களா? ''இந்த லௌகீக மனப்பான்மையிலிருந்து'' தேவன் உங்களை விடுதலை செய்யும்படியாய் ஜெபம் செய்யுங்கள்.

☆ உங்களுக்கோ அல்லது உங்கள் கணவருக்கோ அல்லது உங்கள் பிள்ளைக்கோ வேலை கிடைக்காததினிமித்தமோ அல்லது பதவி உயர்வு கிடைக்காததினிமித்தமோ அல்லது நீங்கள் எதிர்பார்த்த கல்லூரியில் அட்மிஷன்

கிடைக்காததினிமித்தமோ நீங்கள் அழுகிறீர்களா? நம் குடும்பத்திற்கு "எது சிறந்தது" என்பதை தேவனே அறிந்திருக்கிறார்! அவரே உங்களை ஆளுகை செய்கிறார்! இந்த சூழ்நிலைக்காகவும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் கூறிடுங்கள்!

☆ ஏதோ ஒரு விதத்தில் ஜனங்கள் உங்களை வேண்டுமென்றே துன்புறுத்து கிறார்களா? அவர்களை மன்னிப்பதற்கு 'இப்போது' உங்களுக்கு கஷ்டமாய் தோன்றுகிறதா? அந்த கோபத்திலும் வெறுப்பிலும் நீங்கள் அழுது கொண்டிருக்கி றீர்களா? அதனிமித்தமாய் அந்தக் குறிப்பிட்ட நபர்களை மற்றவர்களிடம் தீமையாய் பேசுவதற்கும் தூண்டப்படுகிறீர்களா? இதுதான் உங்கள் நிலையென்றால் "பழி வாங்கும் உணர்வு" உங்களை ஆட்கொண்டு விட்டது என்பதை அறியுங்கள்! அவர்கள் யாவரையும் **"உங்கள் மனதிலிருந்து" விடுதலை செய்துவிட்டு,** அவர்களை மன்னித்து விடுங்கள்! பின்பு, அவர்களை மீண்டும் சந்திக்கும்போது, உண்மையான புன்சிரிப்போடு அவர்களை நீங்கள் வாழ்த்திடமுடிவதை நீங்கள் காண்பீர்கள்!!

☆ ஏமாற்றப்பட்டோ அல்லது அநீதியாக நடத்தப்பட்டோ, ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்திற்காக நீங்கள் அழுது கொண்டிருக்கிறீர்களா? "இந்த நஷ்டத்தை" தேவன் பயன்படுத்தி உங்களைப் பண ஆசையிலிருந்து விடுதலையாக்கவும், இன்னும் அதிகமாய் இயேசுவைப் போலாக்கவும் கிரியை செய்திட முடியும். எந்த நஷ்டத்தையும் நமது ஆண்டவரே பூர்த்தி செய்துவிடுவார்! ஏனெனில், அவரே சகல நன்மையான ஈவுகளுக்கும் உபகாரியாய் இருக்கிறார், அவரே நியாயாதிபதியாகவும் இருக்கிறார்! உங்களை ஏமாற்றியவர்களை, நீங்கள் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தால், பரிதபிக்கும் நிலைக்கு ஆளாவீர்கள்! இவ்வேளையில் நீங்கள் கேட்டுப் பார்க்க வேண்டிய நல்ல கேள்வி என்னவெனில், "நஷ்டமடைந்த இந்த நிகழ்ச்சி, இன்றிலிருந்து ஐம்பது வருடங்கள் கழித்து ஒரு பொருட்டாக எண்ணப்படுமா?" என்பதேயாகும்.

☆ வேறு யாரிடமும் சொல்ல முடியாதபடி உங்கள் கணவரோடு ஏதாகிலும் பிரச்சனைகள் இருக்கிறதா? இவ்வேளையில் "திருமணங்களை" சாத்தான் அழிப்பதற்கு முயற்சிக்கிறான் என்பதை அறியுங்கள். ஓர் அழகான பெட்டகமாகவே தேவன் திருமணத்தை உருவாக்கியிருக்கிறார்! ஆகவே உங்கள் திருமண ஜீவியத்தை **ஓர் தோட்டத்தைப்போலவே** வளர்த்திட ஆசை கொள்ளுங்கள். அத்தோட்டத்தில் 'பிரிவினை எண்ணங்கள்' 'சந்தேகங்கள்' போன்ற சத்துரு விதைத்த 'களைகளை' தொடர்ச்சியாகப் பிடுங்கி எறியுங்கள்! அதற்குப்பதிலாய், தேவபக்தியின் விதை களாகிய அன்பையும், மன்னிக்கும் சுபாவத்தையுமே விதைத்துக் கொண்டிருங்கள்!

☆ நீங்கள் **"மீண்டும் கர்ப்பமானபடியால்"** அழுகிறீர்களோ? இனி 'குழந்தை வேண்டாம்' என விரும்பிய உங்களுக்கு "மீண்டும் கர்ப்பம்" உண்டானதை அறிந்து வருத்தமடைந்திருக்கக் கூடும். 'ஒவ்வொரு குழந்தையும்' தேவனுடைய ஈவு என்பதை மறவாதீர்கள்.

ஆகவே, ஒரு பிள்ளையை மனதளவில்கூட நீங்கள் புறக்கணிப்பது அந்த பிள்ளையை கொல்வதற்கே சமமாகும்!

ஒவ்வொரு பிள்ளையையும் இயேசுவின் நாமத்தில் ஏற்றுக் கொள்ளுங்கள்! இதுபோன்ற சமயங்களில், நீங்கள் எந்தக் குழந்தை வேண்டாமென்று எண்ணினீர்களோ, அந்தப் பிள்ளையே, மிகுந்த மகிழ்ச்சியை உங்கள் இருதயத்திற்குக் கொண்டுவருவதைக் காண்பீர்கள்! *'இப்போது'* நீங்கள் பெற்ற குழந்தையை **ஏற்றுக்கொண்ட பிறகுதான்,** உங்கள் குடும்பத்திற்கு ஒரு "கட்டுப்பாட்டை" நீங்கள் கொண்டுவர முடியும்.

☆ உங்களின் அழுகை, பிறருடைய கவனத்தை உங்கள் பட்சம் ஈர்க்கிறது என்பதைக் கண்டுபிடித்தபடியால் அழுகிறீர்களோ? போதுமான அளவு அழுதுவிட்டால், உங்கள் கணவரிடமிருந்து அல்லது உங்கள் பெற்றோரிடமிருந்து உங்கள் விருப்பத்தை அந்த அழுகை பெற்றுத்தந்துவிடும் என நம்பியிருக்கிறீர்களா? இதுபோன்ற "சுயநலத்திலிருந்து" ஆண்டவர் உங்களை விடுதலை செய்யும்படி ஜெபம் செய்யுங்கள்.

☆ நீங்கள் விரும்பிய பிரகாரம் காரியம் நடக்கவில்லை என்பதற்காக அழுகிறீர்களோ? உங்கள் ஜெபங்களுக்கு தேவன் பதில் தராததால் அழுகிறீர்களோ? இதுபோன்ற மனப்பான்மை "**நான் முக்கியமானவள்**" என்ற சுய உணர்விலிருந்து தோன்றுவதேயாகும்! இவ்வேளையில், ஆண்டவர் தம்முடைய பொறுமையை உங்களுக்குத் தரும்படியே நீங்கள் ஜெபித்திட வேண்டும்.

இம்மைக்குரிய உங்கள் வாழ்வின் கவலைகளை அடிக்கடி நினைவு படுத்தி, மற்றவர்களின் ஆறுதலையும் அனுதாபத்தையும் பெற்றிட ஆசையோ? "அந்த நினைவுகளைச்" செத்த உடலைப் பாதுகாக்கும் "எகிப்திய மம்மீஸ்" போன்று பத்திரமாய் வைத்திருக்க விருப்பமோ? இந்த இழி நிலையிலிருந்து நீங்கள் மீட்கப்பட **துயரமான சம்பவங்களை மீண்டும் நினைவுகூரும்படி** *எப்போதெல்லாம் சோதிக்கப்படுகிறீர்களோ, அப்போதெல்லாம் அந்த சிந்தைகளை அப்புறப்படுத்திட தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படி ஜெபம் செய்யுங்கள்! இவ்வாறு, நீங்கள் தொடர்ச்சியாய் ஜெபம் செய்து வந்தால், சில காலங்களுக்குப் பிறகு அந்த கடந்த கால சம்பவங்களை நீங்கள் முற்றிலுமாய் மறந்து விடுவீர்கள்! உங்கள் ஆத்துமாவும் சுகம் பெற்று விடும்!*

உங்கள் கடந்த காலம் "கெட்டுப்போன பிரேதத்திற்கு" ஒப்பாயிருக்கிறபடியால், அவைகளை நீங்கள் நிரந்தரமாய் புதைப்பதே அவசியமாயிருக்கிறது!

அப்படிச் செய்தால், ஓர் பெரிய அடிமை கட்டிலிருந்து நீங்கள் விடுதலையாகி, பரலோகத்தின் முன் ருசியை இந்தப் பூமியிலேயே நீங்கள் அனுபவிப்பீர்கள். நீங்கள் வாழும்படி இந்த உலகத்தை சிறந்த ஸ்தலமாய் 'இப்போது' மாற்றியதுமல்லாமல், உங்களைச் சூழ்ந்த மற்றவர்களுக்கும் அந்த இனிய உணர்வை நீங்கள் தந்துவிட முடியும்!

'தேவன் விரும்புகிறபடி' உங்கள் வாழ்க்கையை வாழ்ந்துவிடுங்கள். உங்கள் சுயநலத்திலிருந்து மனந்திரும்பி, உங்கள் முழுமையையும் ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் 'சமர்ப்பணம்' செய்துவிடுங்கள்.

உங்கள் பொறுமையின் எல்கைக்கே நீங்கள் வந்து விட்டதாக எண்ணுகிறீர்களோ? அது, நீங்களாக எண்ணிக்கொண்ட சலிப்பான எண்ணமேயாகும்! ஏனெனில், **தேவனுடைய கிருபை** உங்கள் எந்த சூழ் நிலைக்கும் போதுமானது! மேலும், உங்கள் திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்பட தேவன் ஒருபோதும் அனுமதிக்கவும் மாட்டார்!

எண்ணற்ற பரிசுத்தவாட்டிகள், ஆண்டவருக்காய் ஏராளமான துன்பம் அடைந்திருக்கிறார்கள். 16-ம் நூற்றாண்டில், பிரான்சு நாட்டில் வாழ்ந்த **மேடம் குயான்** என்ற அம்மையார் தன்னுடைய விசுவாசத்திற் காக, கடுங்குளிர் கொண்ட சிறைச்சாலைக்குள் நீண்ட காலமாய் அடைக்கப்பட்டிருந்தார்கள்! அக்கொடிய சிறைச்சாலையிலிருந்து அந்த அம்மையார் எழுதிய புத்தகங்கள் அவருடைய ஆவியிலிருந்த "**ஜெயதொனியைப்**" பிரகடனம் செய்வதாகவே இருக்கிறது. இவ்வாறு, ஆண்டவர் மீது கொண்ட பக்தியில் அந்த அம்மையார் நிலைத்திருந்த படியால், இன்றும்கூட அந்தப் புத்தகங்கள் அநேகரை ஆசீர்வதித்துக் கொண்டே இருக்கிறது!

ஸ்திரீகளாகிய நாம் "வலிமையாயிருக்கும்படியே" தேவன் விரும்பு கிறார். நாமே மனம் உடைந்து போய்விடாமல், போராட்டத்தி லிருக்கும் மற்ற சகோதரிகளுக்கு, நாம் உதவி செய்திடவே தேவன் விரும்புகிறார். அதற்குப் போதுமான **அவருடைய வல்லமை** நமக்கு எப்போதும் ஆயத்தமாகவேயிருக்கிறது! தம்முடைய வல்லமை மூலமாகவே அவர் நம்மை வலிமைகொண்டவர்களாய் மாற்றுகிறார். ஆகவே நாம் அவரையே நம்பியிருக்கக்கடவோம்! ஆண்டவருடைய உதவி, நம்முடைய 'கெட்ட நேரங்கள்' அனைத்தையும் "நல்ல நேரங் களாய்" மாற்றுவதை நம் கண்ணார கண்டிட முடியும்!

உங்கள் முழு ஜீவியத்தையும், எதிர்காலத்தையும் ஆண்டவருடைய கரத்தில் அப்படியே கொடுத்துவிட்டால், மிகக் கஷ்டமான நேரங்களிலும் அவர் உங்களுக்கு நிச்சயமாய் உதவி செய்வார். இனிவரும் நாட்களில், இதுவரை இருந்ததைவிட அதிகமான துன்பங்களை நீங்கள் சந்திக்கக் கூடும்!? ஆனால் நீங்களோ அவைகளை நிச்சயமாய் மேற்கொண்டுவிடுவீர்கள்! உங்கள் சுபாவத்தில் குடி கொண்டிருக்கும் **அசுரர்களை** நீங்கள் ஜெயிக்கும்படி அவர் உதவி செய்து, அவருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்ந்திட போதுமான வல்லமையையும் உங்களுக்குத் தந்திடுவார்!

இவ்வாறாக, நீங்கள் அநேகருக்கு "**ஆசீர்வாதமாய்**" மாறிவிடுவீர்கள்!

'தேவனுக்கேற்ற துக்கமே' அவரண்டை சேர்த்திடும்

7

“**தே**வனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது” என பவுலும் (2கொரி.7:10), “துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் ஆறுதலடைவார்கள்” என ஆண்டவர் இயேசுவும் கூறியிருப்பதைப் பாருங்கள் (மத்தேயு 5:4).

பரிசுத்தஆவியின் மூலமாகவே தேவனுக்கேற்ற துக்கம் நமக்குள் உருவாகிறது. அது சமயங்களில், நம்முடைய வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத நெஞ்சத்தின் அழுத்தங்களைப் பரிசுத்த ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்வார் (ரோமர் 8:26).

இந்த துக்கமே **நாம் மனந்திரும்பும்படி** முதன் முதலாக கிரியை செய்து, ஆண்டவரிடத்தில் நாம் வரும்படிச் செய்தது. பரிசுத்தாவியானவர் நம்முடைய இருதயத்திற்குள்ளிருந்து கிரியை செய்யும் இந்த கிரியைக்கு, நம்முடைய ஜீவியகாலமெல்லாம் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்பதே நலமானதாகும்.

நாம் ஆவிக்குரிய வீழ்ச்சியடையும்போதும், ஆண்டவருடைய ஐக்கியத்தை இழக்கும்போதும், **உன்னதப்பாட்டின் மணவாளி, தன் மணவாளனின் ஐக்கியத்தை இழந்ததால் தவித்ததைப்போன்று... நாம் அழவேண்டும்!** (உன்னதப்பாட்டு 3:1-4). இதுபோன்ற அழுகை நம் ஆத்துமாவிற்கு நலமானதேயாகும்! மனந்திரும்புதலின் கண்ணீர்கள் ஒருபோதும் வீணாய் போவதில்லை! ஆண்டவருடைய வெளிச்சத்தில் நம்மைக் காணும் போதுதான், நம்முடைய எளிதில் மனம் புண்படும் சுபாவம், பொருளாசை, பெருமை, சுயநலம், சுய அனுதாபம் ஆகிய சிலந்திவலை பின்னலைப் போன்ற சுபாவங்கள் நம் இருதயத்தை தீட்டுப்படுத்தி... நமக்கும் நம்மைச் சூழ்ந்துள்ளோருக்கும் வாழ்க்கையை எத்தனை சிரமமிக்கதாய் மாற்றிவிட்டதென்பதை நாம் காணமுடியும்!

இதனிமித்தமாய் அழுதிடும் நம்முடைய அழுகையானது, நாம் நொறுங்குண்டு தாழ்மைப்படுவதற்கு நடத்தி... தேவனுடைய கிருபையை நாம் தொடர்ச்சியாய் பெற்றுக்கொள்ளும்படியும் செய்கிறது!

ஒரு பாறையைப்போன்று உறுதியாய் நின்று, ஆண்டவரை ஒரு போதும் மறுதலிக்கமாட்டேனென்றே பேதுரு மிகுந்த நம்பிக்கை யுடையவனாயிருந்தான். தன்னுடைய குருவைத் தற்காப்பதற்கு, கெத்செமனேயில் பட்டயத்தையும் உருவிவிட்டான்! ஆனால், ஆண்டவர் அவனை ஏற்கனவே எச்சரித்தபடியே, அந்த சோதனை நேரத்தில் இந்தப் பேதுரு வீழ்ச்சியடைந்தான். இருப்பினும், வீழ்ச்சியின் வேளையில், தன் எஜமானனாகிய இயேசுவின் மனதுருக்கமும் மன்னிப்பும் நிறைந்த கனிவான பார்வை, பேதுருவை உடைந்துபோகச் செய்து **மனங்கசந்து அழுதுவிட்டான்!!** இனியும், தான் ஆண்டவரைச் சந்தித்து, தன்னுடைய தோல்விக்காய் மன்னிப்புக் கேட்டு, தான் எவ்வளவாய் அவரில் நேசம் கொண்டிருப்பதை கூறிவிட எவ்வாறு சந்தர்ப்பம் கிடைக்கும் என்ற ஏக்கத்தின் வியப்பில் பேதுரு ஆழ்ந் திருந்தான்! இதேபோன்ற பல்வேறு சமயங்களில், ஆண்டவரை மறுதலித்த அநேகம் தேவனுடைய பிள்ளைகளுக்கும், பேதுருவைப் போன்ற அனுபவமே சம்பவித்திருக்கிறது. அன்பார்ந்த சகோதரியே, இதே அனுபவத்தில் நீங்களும் இருந்தால், “உங்களுக்கும் நம்பிக்கை உண்டு!” என்ற உறுதியை, நான் அளித்திட விரும்புகிறேன்.

பேதுருவைப் புடைப்பதற்கு முன்பாக, தேவனிடத்தில் சென்று சாத்தான் அனுமதி கேட்க வேண்டியதாய் இருந்தது என்பதை ஒரு போதும் மறந்திடாதீர்கள்! அதேபோலவே உங்களைப் புடைப்பதற்கும் தேவனிடம் சென்று சாத்தான் **அனுமதி கேட்டுத்தான்** வரவேண்டும்! பேதுருவின் விசுவாசம் ஒழிந்து போகாதபடி அவனுக்காக இயேசு ஜெபித்தார். அதேபோல் இன்றும் உங்களுக்காக இயேசு ஜெபிக்கிறார்! சோதனையின் ஊடாய் பேதுரு கடந்து சென்று ‘குணமடைவான்’ என அவன்மீது ஆண்டவர் விசுவாசம் கொண்டிருந்தார். உங்கள்மீதும் அதே விசுவாசம் அவருக்கு உண்டு! பேதுரு குணமடைந்தபின் தன்னுடைய சக விசுவாசிகளைப் பெலப்படுத்தும்படி புறப்பட்டுச் சென்று, ஆண்டவருக்கு மகத்தான ஊழியத்தை செய்து முடித்தான். உங்களுக்கும் அதேபோன்று காரியம் சம்பவிக்கும்!

கெத்செமனேயில் ஆண்டவரின் எச்சரிப்பிற்கு பேதுரு செவி கொடுத்து, அவருடைய ஆலோசனையின்படி **ஜெபித்திருந்தால்,** அவன் வீழ்ச்சியடைந்திருக்கவே மாட்டான். ஆனால் பேதுருவோ சுய நம்பிக்கை கொண்டவனாயிருந்தபடியால் தோற்றுப்போனான்! ஆகிலும், ஆண்டவர் உயிர்த்தெழுந்தவுடனே, பேதுருவுக்குத் தோன்றி அவனை

உற்சாகமூட்டினார். "ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன்!" எனக் கூறும் நல்ல வாய்ப்பையும் பேதுரு பெற்று விட்டான். ஆண்டவர் **மீண்டுமாய் அவனை** *ஓர் அப்போஸ்தலனாய் நியமனம் செய்தார்!*

தேவன் மிகவும் நல்லவராயிருக்கிறபடியால், நம்முடைய உண்மையான சுபாவத்தை நாம் கண்டுகொள்ளும்படி, எதிர்ப்பு களையும், சோதனைகளையும் நம் ஜீவியத்தில் அனுமதிக்கிறார். அதன் மூலமாய் நம்மைத் தாழ்த்தி... நொறுங்கச் செய்து... தன்னுடைய சொந்த சாயலில் நம்மை மறுரூபப்படுத்துகிறார். ஆகவே, தேவனுடைய அன்பிலிருந்து நம்மை **எதுவுமே** *பிரித்துவிட முடியாது!*

*நம்முடைய துக்கத்தின் மத்தியில், நம்முடைய சொந்தப் பிரச்சனை களால் நாம் வாரிக்கொள்ளப்பட்டு "***மற்றவர்கள்மீது கொண்ட கரிசனையை***" நாம் ஒருபோதும் இழந்துவிடக்கூடாது. நமது ஆண்டவர் "துக்கத்தின் மனிதராய்" (MAN OF SORROWS) இருந்தபோதும் "நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டார்" என்றே காண்கிறோம். தன்னைப் புறக்கணித்த எருசலேம் ஜனங்களைக் கண்டபோது அவர்களுக்காகவே அழுதார்! இதை விவரிக்கும் ஒரு ஆங்கிலப் பாடல்:*

"தன் துக்கங்களுக்கு அழுதாரில்லை
வியர்வையின் இரத்தம் எனக்கன்றோ சிந்தினார்"

என நேர்த்தியாய் கூறுவதைப் பாருங்கள். ஆம், நம் ஆண்டவர் மற்றவர் களுக்காகவே அழுதார். இன்று இயேசுவின் ஸ்தானத்தில், மற்றவர்களுக் காக அழுதிட வேண்டிய 'முறையை' இப்போது **நாம்** *பெற்றிருக்கிறோம்!!*

அநீதியாய் சிறையிலடைக்கப்பட்ட யோசேப்பின் சரித்திரத்தை சிந்தித்துப் பாருங்கள். அந்தச் சிறைச்சாலையில் யோசேப்பு தன் சொந்த துக்கங்களை மறந்தவனாய், **சிறைக்கைதிகளின் துக்கங்களே** *அவனை ஆட்கொண்டிருந்தது! இவ்வாறு பார்வோனின்* **பானபாத்திரக்காரன்மீது** *யோசேப்பு கொண்டிருந்த அக்கறைதான், முடிவில் அவன் சிறையி லிருந்து வெளிவருவதற்கும் நடத்தியது!*

பார்த்தீர்களா, மற்றவர்கள்மீது கொண்ட மெய்யான அக்கறையே உங்களின் விடுதலைக்கு வகுத்துத் தரும் முதற்படியாய் மாறிவிட முடியும்! (ஆதி.40:7).

"அள்ளித்தூவும் விதையை சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான். ஆனாலும், தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்" என்றே வேதம் உத்திரவாதம் அளிக்கிறது (சங்.126:6).

தேவனுக்கேற்ற துக்கங்கொண்டு **அழுத புருஷர்களின்** *நல்ல உதாரணங்களை சற்றே தியானியுங்கள் :*

☆ தேவனுடைய மகிமையைக்கண்டு.... தன் சுபாவத்தைப் பார்த்ததும் "ஐயோ!

அதமானேன், அசுத்த உதடுகளுள்ள மனுஷன்!" என **ஏசாயா அழுதார்** (ஏசாயா 6:5).

☆ தேவ ஜனத்தின் பின்மாற்றத்தைக் கண்டு, தன்னுடைய கண்கள் "கண்ணீர் ஊற்றாய் மாறி, ஜனங்களுக்காய் தொடர்ச்சியாய் தன்னுடைய கண்கள் அழுதிட வேண்டுமென விரும்பி" **எரேமியா அழுதார்** (எரேமியா 9:1; 13:17).

☆ தேவ ஜனத்தின் பாவங்களுக்காக **தானியேல் அழுதார்** (தானி.9:20,21).

☆ வீழ்ச்சியடைந்த தேவ ஜனத்தின் நிலையைக் கண்டு **எஸ்றாவும், நெகேமியாவும் அழுதார்கள்** (எஸ்றா 10:1; நெகேமியா 1:4).

☆ மனந்திரும்பாத தன் சொந்த யூத ஜனங்களுக்காக தன் இருதயத்தில் **பவுல் இடைவிடாத துக்கம்** கொண்டிருந்தார் (ரோமர் 9:1–3).

தேவனுக்கேற்ற துக்கம், "ஆண்டவருக்கு எவைகள் துக்கத்தைத் தருமோ அதே துக்கத்தை நாமும் அடையும்படிச்" செய்துவிடும்! நம் தேசத்திலுள்ள விக்கிரக ஆராதனையை சற்று சிந்தித்துப் பாருங்கள். இதனிமித்தம் ஆண்டவர் எவ்வளவாய் துக்கங்கொண்டிருப்பார்! நம் தேசத்திலுள்ள விக்கிரக கோபுரங்களையும் சிலைகளையும் நாம் ஏராளமாய் பார்த்துப் பழகிவிட்டபடியால், அவைகள் நம் ஆவியில் எந்த சலனமும் ஏற்படுத்தாததுபோல் தோன்றுகிறது (அப்.17:16). ஆனால் நாம் வாழும் ***இந்த தேசத்தினிமித்தம்*** *ஆண்டவருக்கு முன்பாக நம் யாவருக்குமே ஓர் பொறுப்பு இருக்கத்தான் செய்கிறது. இதைத் தேவன் குறிப்பிடும்போது "என் நாமம் தரிப்பிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்தி லிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்" எனக் கூறினார் (2நாளா. 7:14).*

மற்றவர்களுக்காய் ஜெபிக்கும்படி *என் இருதயத்தில் ஆண்டவர் தந்தருளின பாரமான நிகழ்ச்சிகளை நான் எண்ணிப் பார்க்கிறேன். ஒரு சமயம், ஒரு தாய் தன்னுடைய மகன் தூக்கமில்லாமல் அவதிப்படுவதைக் கூறி என்னை ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த மகனோ, அதிர வைக்கும் "ராக் - மியூசிக்கில்" அடிமைப்பட்டு, தேவனைத் தேடவோ எந்த ஆர்வமும் அற்றவனாயிருந்தான். இப்போது அவனுடைய அலைக்கழிக்கும் வியாதியில், மனநிலை மருத்துவத்தின் உதவிகூட பயனற்றதாய் போனது. நீண்டகாலமாய் அவன் கவனித்துக் கேட்ட "ட்ரம் - அடிப்பின் ஒலிக்கு" ஒப்பாகவே அவனுடைய தலை இப்போது வேகமாய் அதிரத் துவங்கிவிட்டது! தேவனோ தம்முடைய இரக்கத்தி னிமித்தம் எங்களுடைய ஜெபத்தைக் கேட்டு அவனை சுகமாக்கினார்.*

இவ்வாறு அதிரச் செய்யும் "ராக் - மியூசிக்கை" தங்கள் பிள்ளைகள் கேட் பதால் வரும் அபாயங்களை, அநேக தாய்மார்கள் அறியாதிருக்கிறார்கள்!

நான் பயணம் சென்று கொண்டிருந்த ஒரு சமயத்தில், ஆண்களும் பெண்களுமாயிருந்த ஒரு குழுவில், அவர்களோடு 2- வயது 3- வயது கொண்ட பெண் குழந்தைகளும் இருந்தார்கள். அந்தப் பிள்ளைகளிடம் அவர்கள் நடந்துகொண்ட விதம் தவறாயிருந்ததை நான் கவனித்தேன். அந்த சிறு பெண்பிள்ளைகளோ செயலற்றவர்களாகவும், பயத்தினால் பீடிக்கப்பட்டவர்களாகவும், மயக்க மருந்து தரப்பட்டவர்களைப் போலவும் காணப்பட்டார்கள். இக்குழுவினர் அந்தப் பிள்ளைகளைக் கடத்தி வந்திருக்கக்கூடும் என்றே நான் எண்ணினேன். அதை நிரூபிப்பதற்கு எந்த ஒரு ஏதுகரமும் என்னிடமில்லாதபடியால், அச்சூழ்நிலையில் நான் எதுவும் செய்ய முடியாத நிலையிலிருந்தேன். பரிதாப நிலையிலிருந்த அந்தப் பிள்ளைகளை நான் கண்ட நிகழ்ச்சி எனக்குள் ஆழமான உணர்த்துதலை உண்டாக்கி நம் தேசத்தில் "குழந்தை - துர்ப்பிரயோகம்" செய்பவர்களுக்காய் ஜெபிக்கும்படி என்னைத் தூண்டியது!

*இன்னொரு சமயத்தில், இந்திய தேசத்திலுள்ள சுவாமிஜிகள் நடத்தும் பக்தி தியானங்கள் மூலமாய் "***சமாதானம் பெறும்படி***" மேற்கத்திய நாட்டிலிருந்து வந்த ஒரு ஆங்கிலேய பெண்ணை நான் சந்தித்தேன். அவளிடத்தில், "மெய்யான குரு ஆண்டவராகிய இயேசுவைப் பற்றி" கூறும் ஓர் சந்தர்ப்பத்தை நான் பெற்றேன். பின்பு, அந்தப் பெண்ணிற்காய் தொடர்ந்து* **ஜெபிக்கும்படியான பாரமும்** *பெற்றேன்! இவ்வாறு, சில மேற்கத்திய நாட்டு மக்கள் நம் இந்திய தேசத்திற்கு வந்து ஆண்டவரை அறிந்து கொண்டிருக்கிறார்கள்! இவ்விதமாய், தேவை நிறைந்த, சமாதானத்தைத் தேடி அலையும் ஜனங்களுக்கு உங்களை* **சாட்சியாக பயன்படுத்தும்படி** *ஆண்டவரிடத்தில் நீங்களும் ஜெபம் செய்யுங்கள்!*

அன்று எருசலேம் வீதியில் இயேசு சிலுவை சுமந்து சென்று கொண்டிருந்த வேளையில், சில பெண்கள் தனக்காக அழுவதைக் கண்டார். அவர்களிடம், தனக்காக அழாமல் அவர்களுக்காகவும் அவர்களுடைய பிள்ளைகளுக்காகவும் அழும்படி இயேசு கேட்டுக் கொண்டார்! அச்சமயத்தில் "எருசலேம் குமாரத்திகளே!" என பரிவுடன் அழைத்து "எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என அன்புடன் வேண்டிக் கொண்டார்.

இப்போதும் "இந்தியாவின் குமாரத்திகளே!" **இன்று** *ஆண்டவர் உங்களுக்கு கூறுவதை உங்களால் செவி கொடுக்க முடிகிறதா?*

'சரீர வேதனையில்' தேவனுடைய நோக்கம்

8

*"ஏராளமான ஸ்திரீகள் நாள்பட்ட வியாதியினால் பாதிக்கப்பட்டு தொடர்ச்சியான வேதனையிலும், தூக்கமற்ற இரவுகளிலும் தங்கள் ஜீவியத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறார்கள். தங்கள் எதிர்காலத்தில் "என்ன சம்பவிக்குமோ?" என்ற பீதியினால் அவர்களுடைய மனம் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, தங்கள் பிள்ளைகள் "**தாயற்றவர்களாய்**" மாறிவிடுவார்களே என்ற பயமே அவர்களுக்குள் மேலோங்கிய பீதியாயிருக்கிறது! இதுபோன்ற சிந்தைகள் எவ்வளவு துன்பகரமாய் இருக்குமென்பதை சற்று எண்ணிப்பாருங்கள்!*

இவர்களில் அநேகர் வியாதியின் வலியிலிருந்து தற்காலிகமான விடுதலையைத்தான் நம்பியிருக்கிறார்கள். வலிதீர்க்கும் சக்தி கொண்ட மாத்திரைகள் கூட சில காலங்களுக்குப் பிறகு இவர்களுக்கு செயல் படுவதில்லை!

இன்னும் சிலர், ஒரு சகோதரிக்கு புற்றுநோய் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டவுடன்.... அந்தப் புற்று நோய், இனி அடுத்து தனக்கு வந்துவிடுமோ? என்ற அச்சத்திற்குப் பலியாகிறார்கள்!!

இயேசுவுங்கூட வேதனையை அனுபவித்திருக்கிறபடியால், நமக்காக அவர் பரிதபிக்கவும், ஆறுதல் செய்யவும் அவரால் முடியும்!

அவர் சிலுவையை மரணபரியந்தம் சகித்தபடியால், நாம் வேதனையி லிருக்கும்போது நாமும் முடிவுபரியந்தம் சகித்திட, நமக்கு அவர் உதவி செய்திட முடியும்!

*ஆகவே, வேதனையினிமித்தம் உங்கள் ஜீவனை நீங்களே எடுத்துக் கொள்ளும் சோதனைக்கு ஒருக்காலும் இடங்கொடுத்து விடாதிருங்கள். ஏனெனில் "**மரணத்திற்குரிய திறவுகோல்**" இயேசுவின் கையில்தான் இருக்கிறது! (வெளி.1:18). எனவே, அந்தத் திறவுகோலை அவரிட மிருந்து பறித்துக்கொள்ள நீங்கள் முயற்சிக்க வேண்டாம். நீங்கள்*

எவ்வளவு வேதனையை சகிக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்லை, தேவனுடைய நேரத்திற்காக மாத்திரமே காத்திருங்கள்! உங்கள் வேதனையின் பொறுப்பை தேவன் எடுத்துக்கொண்டு, அதிலும் தன் பரிசுத்தத்தைக் கட்டளையிடுவார். "பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு" என்றே வேதம் கூறுகிறது (பிர.3:2). ஆகவே ஆமோஸ் 4:12 கூறுகிறபடி **"உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு"** என்ற வசனமே நமக்கு எப்போதும் கருத்தாய் இருக்க வேண்டும்.

இதுபோன்ற வசனங்களை "சாவதற்கு ஆயத்தமாகிவிடு!" என நம்மை மிரட்டும் கொடூர வசனங்களாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அதற்குப் பதிலாய் "தன்னைச் சந்திக்கும்படி அழைப்பிதழ் தரும்" நம் சிருஷ்டி கர்த்தாவின் அன்பின் அழைப்பாகவே நாம் அவை களைக் கருதிட வேண்டும். ஒரு மெய் கிறிஸ்தவனுக்கு, மரணமானது தன் குடியிருப்பை மாற்றிக்கொள்ளும் தருணம் மாத்திரமேயாகும்! பரலோகமே நம்முடைய இறுதியான வீடாகும்!!

புற்றுநோயினால் மரிக்கும் தருவாயிலிருந்த ஒரு தாயைக் குறித்து நான் வாசித்திருக்கிறேன். தன்னுடைய மிகுந்த வேதனையின் நடுவில், தன் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரு செய்தியை ஒலிநாடாவில் பதிவு செய்து கொடுத்தார்கள். அந்த ஒலிநாடாவில், தன் பிள்ளைகள் வளர்ந்துவரும் ஒவ்வொரு பருவத்திற்கும் தேவையான ஆலோசனைகளைக் கொடுத்திருந்தார்கள்! ஒரு சரியான வாழ்க்கைத் துணையைத் தெரிந்து கொள்வதற்குரிய ஆலோசனையைக்கூட பதிவு செய்து கொடுத்தார்கள்! மேலும் தன் பிள்ளைகளுடைய அப்பா மறு திருமணம் செய்து, ஒரு புதிய தாயை வீட்டிற்கு அழைத்து வரத் தீர்மானித்தால், அந்தத் தாயை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு "பிள்ளைகளின் வரவேற்பை" அவள் உணரும்படிச் செய்யவேண்டும் என்றும் ஆலோசனை கூறி பதிவு செய்தார்கள்.

பூமியில் தன் ஆயுசு நாட்கள் குறைந்துவிட்டது என்பதை அறிந்து, தன் முழு வேதனையையும் ஆண்டவர் மீது வைத்துவிட்டு, தன்னால் முடிந்த எல்லா நன்மைகளையும் தன் குடும்பத்திற்கு அந்த தாய் செய்து முடித்தார்கள்!

மருத்துவர் உங்களுடைய நலனைக் குறித்த துர்ச்செய்தியைக் கூறியபடியால் நீங்கள் அழுகிறீர்களோ? வேதனை வரும்போதெல்லாம், வலியைக் குறைக்கும் மாத்திரைக்காகவே நீங்கள் தொடர்ந்து காத்திருக்கிறீர்களா? நீங்கள் ஏன் இயேசுவிடம் கதறி கூப்பிடக் கூடாது? கொடிய வேதனைகளையும் அவர் தாங்கியிருக்கிறபடியால், நீங்களும் தாங்கிக் கொள்ளும்படி உங்களுக்கு அவர் இரக்கம் செய்திட முடியுமே! உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர்

இடங்கொடாமல், ஒவ்வொரு சோதனையையும் **தாங்கும்படியான** கிருபையையும் பெலனையும் அவர் உங்களுக்குத் தந்தருள்வார்! இந்தப் பூமியில் உள்ள வேதனைகள் யாவும் "இனி வேதனையும் அல்லது வருத்தமும் இல்லாத ஒரு சிறந்த ஸ்தலத்தை" நாம் எதிர்நோக்கி யிருக்கும்படியே நம்மைத் தூண்டுகிறது!

எங்கள் சபைக் கூட்டங்களில் நாங்கள் அடிக்கடி பாடும் ஒரு பல்லவியை நான் சிந்திப்பதுண்டு:

"கர்த்தர் சமூகம் என் சந்தோஷமே
அது நிறைவான சந்தோஷமே
என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழியுதே
ஆனந்தம் பேரானந்தமே!"

தொடர்ந்து வரும் அந்தப் பல்லவியில் "கர்த்தர் சமூகம் என்றும் சமாதானமே", "கர்த்தர் சமூகம் என்றும் வல்லமையே", "கர்த்தர் சமூகம் என்றும் ஜெயமே" என இனிமையாய் கூறப்பட்டிருக்கும். பாடுவதில் தான் எத்தனை ஆறுதல் அளிக்கும் வல்லமை அடங்கியிருக்கிறது! அதுவும், வேதனையிலும், துன்ப சூழ்நிலைகளிலும் பாடிடும் பாடல் மிகுந்த ஆறுதலை நமக்குத் தருகிறது!

உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் ஆண்டவருக்கு முழுமையாய் அர்ப்பணம் செய்யப்பட்டிருந்தால், சரீர வேதனை உங்களுக்கு வரும்போது, அது உங்களுக்கு சற்றே இலகுவாயிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

கடந்த நாட்களில், ஒரு தலைவலிகூட உங்களால் தாங்க முடியாததாய் இருந்திருக்கக்கூடும். ஆனால் இப்போதோ, உங்கள் உயிருக்கே ஆபத்தான வியாதி வந்தாலும், நீங்கள் அதற்காக ஜெபித்து..... பின்பு கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருந்திட முடியும்!

"நாம் தண்ணீர்களைக் கடக்கும் வேளையில் அது நம்மேல் புரளுவதில்லை," என்றும் அவர் உறுதியளித்து வாக்குதத்தம் செய்திருக் கிறார். இந்த வசனங்களை LIVING BIBLE மொழி பெயர்ப்பு நேர்த்தி யாகக் கூறுகிறது:

"ஆழமான தண்ணீர்களின் கொடிய துன்பங்கள் மத்தியில் நான் உன்னோடேயிருப்பேன். கஷ்டத்தின் ஆறுகளை நீ கடந்து செல்லும் போது நீ மூழ்கிப் போகமாட்டாய்! நெருக்கத்தின் அக்கினியில் நடந்து செல்லும் போது நீ எரிந்து போகமாட்டாய்! அக்கினி ஜுவாலைகள் உன்னைத் தீண்டாது! நீ பயப்படாதே! நான் உன்னோடேயிருக்கிறேன்" (ஏசாயா.43:2,5).

ஒவ்வொரு சூழ்நிலைக்கும் அவருடைய கிருபை நமக்குப் போது

மானதாகவேயிருக்கிறது! நம்முடைய உபத்திரவங்கள் அதிகரிக்க அதிகரிக்க, தேவன் வழங்கும் **கிருபையின் அளவும்** நமக்கு அதிகரித்துக் கொண்டே செல்லும்! அந்த நல்ல தேவனுக்கே துதி உண்டாகக்கடவது!

"தேவனுடைய விலையேறப் பெற்ற அலங்கரிப்பாய்" திகழ்ந்த அநேகர், கற்பனைக்கும் எட்டாத துன்பத்தின் ஆழங்களிலிருந்து தோன்றியவர்களேயாவர். "**வைரங்கள்**" பூமியின் ஆழத்திலிருந்து உருவாகுவதைப் போல், இவர்களும் சொல்லிமுடியா வெப்பத்திலும் அழுத்தத்திலும் துன்பங்கள் சகித்து, எல்லா மனுஷருடைய கண்களுக்கும் மறைவாயிருந்து தோன்றியவர்களேயாவர்! இதேபோல, நீங்களும் ஆண்டவருடைய விலையேறப்பெற்ற அலங்காரமாய் இருந்திட முடியும்! தேவன் உங்களோடு இடைபடும் சமயங்களில் மகிழ்ச்சியுடன் உங்களை ஒப்புக்கொடுத்து **சுய–பட்சாதாப கண்ணீர் வடிக்காதவர்களாய்** நீங்கள் இருந்தால்... தேவன் மாத்திரமே கண்டிட்ட உங்கள் கண்ணீர், உங்களை கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாய் மறுரூபப்படுத்திட கிரியை செய்வதாய் மாறிவிடும்!

என்னுடைய நெருங்கிய சிநேகிதி ஒருவருக்கு, தவறான மருத்துவ சிகிச்சையளிக்கப்பட்டபடியால், அதனிமித்தமாய் தொடர்ச்சியான துன்பத்திற்கு ஆளாகியிருந்தார்கள். இந்நிலையில், அவளுடைய துன்பம் இன்னுமதிகமாய் மாறியது.... காரணம், அவளால் அந்த **மருத்துவரை மன்னிக்க முடியவில்லை** என்பதுதான்! மருத்துவர்களும் தவறு செய்ய வாய்ப்புள்ள மானிடர்தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்த மருத்துவரை மன்னித்துவிட்டு, தனக்கு ஏற்பட்ட பங்கை ஏற்றுக் கொள்ள அவளுக்கு நீண்டகாலம் பிடித்தது. எந்த மருத்துவரைக் காட்டிலும் இயேசுவே சிறந்த மருத்துவர்! ஏனெனில், நம் நெஞ்சில் விழுந்த காயங்களைக்கூட அவரால் சுகப்படுத்திட முடியும்!

கிறிஸ்தவளல்லாத ஒரு இளம் பெண்ணை நான் அறிந்திருக்கிறேன். அவள் வழக்கம்போல் பஸ் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தபோது, அவளுடைய அலுவலகத்தின் எஜமானன் "**பர்தா–முகத்திரை**" அணிந்த ஒரு பெண்ணைப் போல் மாறுவேடத்தில் வந்து, அவளுக்கு முன் நின்று பேச்சுக்கொடுத்தான். அவளிடத்தில், அவளுடைய எஜமானனுக்கு ஓர் மறைவான விரோதம் இருந்தபடியால், அதை வஞ்சம் தீர்ப்பதற்கு அவள் முன் நின்றான். அவள் அருகில் மாறுவேடத்தில் வந்த அவன், சற்றும் எதிர்பாராத வகையில் அவளுடைய முகத்தில் கொடிய திராவகத்தை ஊற்றிவிட்டு ஓடி மறைந்தான்! பெருத்த அதிர்ச்சிக்குள்ளான அவள்.... **கண் பார்வையிழந்து, நிரந்தரமான குருடியாய்** மாறிவிட்டாள். அந்தப் பெண் மிகவும் அழகுள்ள பெண்! ஆனால், அவளுடைய அழகு அவளை விட்டு நிரந்தரமாய் மறைந்து போய்விட்டது! திராவக வீச்சினால்

அடைந்த வேதனை அவளால் தாங்கக்கூடாததாயும்.... அவள் படுத்திருந்த மருத்துவ அறையிலிருந்த அனைவருமே அவளுடைய வேதனையின் கூக்குரலோடு சேர்ந்து அழுதார்கள்! படுக்கையிலிருந்த அவளிடம், அந்த மருத்துவமனையிலிருந்த யாரோ சிலர் **இயேசுவின் அன்பைக்** குறித்து அவளிடம் பேசினார்கள். அதனிமித்தமாய், இயேசுவைத் தன்னுடைய சொந்த இரட்சகராய் காணும்படியாக அவளுடைய "ஆவிக்குரிய கண்கள்" திறந்துவிட்டது! அவளுடைய நீண்டகால மருத்துவ சிகிச்சையின் செலவினிமித்தம் அவளுடைய குடும்பம் தரித்திரமாய் மாறியது! இருப்பினும், அவளுடைய குடும்பத்தாரும் இயேசுவின் அன்பைக் குறித்து கேள்விப்பட்டதும், துரிதமாய் இரட்சிக்கப்பட்டார்கள். திராவக வீச்சுக்கு முன்பாக எடுத்த அவளுடைய அழகான புகைப்படத்தை நான் கண்டிருக்கிறேன்!

ஒன்று எனக்குத் தெரியும், இப்போதுள்ள அழகைக் காட்டிலும் மகா சௌந்தரியம் உள்ளவளாய் பரலோகத்தில் நான் அவளை மீண்டும் காண்பேன்! அதை நான் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்!

பல வருடங்களுக்கு முன் ஓர் இளம் பெண்ணை நான் சந்தித்தேன். அவள் ஊனமடைந்த தன் கணவனை பல்லாண்டுகளாய் பராமரிக்க வேண்டிய இக்கட்டில் இருந்தாள். ஒரு விபத்தில் தவறி விழுந்ததி னிமித்தம், அவளுடைய கணவன் சொற்ப வயதில் ஊனமுற்ற நொண்டியாக மாறினான்! அவர்கள் இயேசுவைப்பற்றி இதற்கு முன் கேள்விப்பட்டதேயில்லை! இந்த துயர சம்பவத்திற்குப்பின் அவர்களுடைய உறவினர்கள் அனைவரும் அவர்களைக் கை விட்டார்கள். இந்நிலையில், எந்த ஆதரவுமற்ற பரிதாபநிலைக்கு ஆளானார்கள். ஆண்டவர் அவர்களைச் சந்தித்தபோது, அவர்கள் இருவருமே இயேசுவைத் தங்கள் இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்கள்! இப்போதோ இந்த ஊனமுற்ற தம்பதியரை தேவன் பயன்படுத்தி, **ஊனமுள்ள ஜனங்களுக்கு ஊழியம் செய்திடும்** கிருபையை அவர்களுக்குத் தந்திருக்கிறார். இப்போது, அநேகர் அவர்கள் மூலமாய் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொண்டார்கள். அவர்களுக்கு கொடிய தரித்திரமும் துன்பமும் இருந்தாலும்கூட, அவர்கள் முகமோ எப்போதும் பிரகாசம் உள்ளதாய் இருந்தது. அவர்களைச் சந்திக்க வந்து ஆசீர்வதிக்கப்பட்ட அனைவரும், அத்தம்பதியினரின் **பிரகாசமுள்ள ஜெய கெம்பீரமான** பார்வையை மறக்க முடிவதில்லை.

இன்று இவ்வாறிருந்தாலும், அவளுடைய கணவருக்கு விபத்து நடந்த சமயத்தில், இவளோ புதிதாய் திருமணம் செய்து கொண்டு, ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் நிலையிலிருந்தாள். விபத்தின் செய்தி, அவள் மனநிலையைப் பாதித்து "**இந்தத் துயரம் எங்களுக்கு ஏன்**

நடந்தது?" என தேவனிடத்தில் இரவும் பகலும் பல மாதங்களாய் அழுது புலம்பினாள். இந்த மோசமான நிலையில்தான் இயேசு வந்து அவர்களைத் தன் சமாதானத்தினாலும் வல்லமையினாலும் நிறைத்தார்! இன்று அவர்களை, நம் இந்திய தேசத்தின் ஒரு புறக்கணிக்கப்பட்ட பகுதியில் தேவன் வல்லமையாக உபயோகப்படுத்தி வருகிறார். அவர்களைக் குறித்து நான் சிந்திக்கும் போதெல்லாம், சங்கீதம் 34:5-ல் கூறப்பட்ட "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந் தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" என்ற வசனமே என்னுடைய ஞாபகத்திற்கு வரும். அவர்களுடைய வல்லமையான சாட்சி எனக்கு சொல்லி முடியா சவாலைத் தந்திருக்கிறது!

இன்னொரு இளம் மனைவியை நான் அறிவேன். அவளால், தன் கணவராலும், அவருடைய பெற்றோராலும் உண்டான துன்பங்களைத் தாங்க முடியாமல் தன்மீது மண்ணெண்ணையை ஊற்றித் தீ வைத்து தற்கொலை செய்ய முயன்றாள். தங்கள் கணவராலும், தங்கள் மாமனார் மாமியாராலும் "வரதட்சணைக்காக" துன்புறுத்தப்படும் பெண்கள் இவ்விதமாய் தங்கள் மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்துக் கொள்வது நம் இந்திய தேசத்தில் ஓர் மிக சாதாரண செயலாய் மாறிவிட்டது. ஆனால், இந்த இளம் பெண்ணோ மரிக்கவில்லை! **மண்ணெண்ணெயின் தீயின் ஜுவாலையிலிருந்து மாத்திரமல்லாமல், நரகத்தின் ஜுவாலை யிலிருந்தும் தேவன் அவளை இரட்சித்தார்!** இன்று அவள், எங்கள் கிராம சபை ஒன்றில் ஓர் அருமையான சகோதரியாய் திகழ்ந்து தேவனுடைய அன்பிற்கும் இரக்கத்திற்கும் நல்ல சாட்சியாக விளங்குகிறாள்!

மேற்கண்ட சகோதரிகள் யாவரும், தங்கள் வாழ்வில் சம்பவித்த மோசமான விபத்துக்களில் ஆண்டவர் இயேசுவை எவ்வாறு அறிந்து கொண்டார்கள் என்பதைக்கூறும் நல்ல மாதிரிகளாயிருக்கிறார்கள். அவர்களை நான் நினைவுகூரும்போதெல்லாம், அவர்களுக்காக ஜெபித்து, "இந்தப் பெண்கள் நிரந்தரமான வேதனைகளில் வாழ வேண்டியிருக்கிறதே" என தேவனுக்கு முன்பாக அழுதுமிருக்கிறேன்!

அற்புதமாய் சுகம் பெற்ற சில சகோதரிகளையும் அறிந்திருக் கிறேன். அவர்களில் சிலர், தாங்கள் சுகம் பெற்றவுடன் **இயேசுவின் சீஷர்களாய்** மாறியிருக்கிறார்கள். இன்னும் சிலர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, இப்போது தேவனுடைய மகிமைக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் பூமியில் இயேசு இருந்தபோது, தன்னிடத்தில் வந்த யாவருக்கும் சுகம் கொடுத்திருக்கிறார். உங்களையும் அவர் சுகப்படுத்தும்படி அவரிடம் கேளுங்கள்! நாம் சுகவீனமா யிருக்கும்போது, **சபையின் மூப்பர்களை** அழைத்து, எண்ணெய் பூசி, ஆண்டவருடைய நாமத்தில் அவர்கள் நமக்காய் ஜெபிக்கும்படி

கேட்டுக்கொள்ள வேண்டுமென வேதம் நமக்கு கூறுகிறது. அந்த விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை சுகமாக்குமென்ற உத்திரவாதத்தையும் வேதம் நமக்குத் தந்திருக்கிறது (யாக்கோபு.5:14).

சில சமயங்களில், வியாதி பாவத்தோடு சம்பந்தம் கொண்டதாயும் இருக்க முடியும். இப்பூமியில் ஆண்டவர் சுகமாக்கிய சில பேரிடத்தில் "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. இனி நீ பாவஞ்செய்யாதே" என்று அவர்களிடம் கூறினார்.

வாத நோய்கள், அலர்ஜி போன்ற ஒவ்வாமை நோய்கள், இரத்த அழுத்த நோய்கள், வாய்வு சம்பந்த நோய்கள் போன்றவைகள் நமக்குள் ஏற்பட்ட பதட்டமான உணர்வுகளோடும், கசப்பு மற்றும் மனம் புண்பட்ட உணர்வுகளோடும் தொடர்பு கொண்ட நோயாகவேயிருக்கிறது!

இதுபோன்ற சமயங்களில், நாம் முதலாவது நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து, ஆண்டவர் நம்மை மன்னித்தருளும் படியே கேட்க வேண்டும்! மேலும், நாம் யாரிடமெல்லாம் மனம் புண்பட்டோமோ அவர்களிடம் சென்று ஒப்புரவாகவும் வேண்டும்! உங்களுக்கு விரோதம் செய்தவர்களுடைய குற்றம் எவ்வளவு மோசமாயிருந்தாலும்... "**மன்னிக்காத ஆவி**" *உங்களைப் பற்றிக் கொள்ளாதிருக்க மிகுந்த ஜாக்கிரதையாய் இருங்கள்! என்னதான் மருத்துவம் பார்த்தாலும், தேவன் மாத்திரமே நம்மைக் குணமாக்குகிறவர்! அவ்வாறு நீங்கள் பாவங்களை அறிக்கை செய்து குணமானவுடன் தேவனுக்கு நன்றி செலுத்தி, அவருக்கே சகல மகிமையையும் கொடுத்துவிட மறவாதிருங்கள்!*

தேவனுடைய சித்தத்திற்கு உங்களை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்துவிட்டு, உங்களை சுகமாக்கும்படி ஆண்டவரிடம் விசுவாசத்துடன் கேளுங்கள். ஆண்டவரே உங்களுக்கு சுகமளிக்கும் மருத்துவர்! **சுகம் பெற்ற உங்கள் சரீரத்தைத் தேவனுக்கே திரும்பவும் தத்தம் செய்து,** *பிறரை ஆசீர்வதிப்பதற்கும், உதவி செய்வதற்கும் முன்வந்து, அவருடைய ஊழியத்திற்குப் பயன்பட உங்களை அர்ப்பணித்து விடுங்கள்!*

அவருடைய **உண்மையுள்ள பிள்ளைகளில்** *சிலர் இன்னும் வியாதியில் இருக்க, மற்றவர்களை அவர் சுகமாக்குகிறாரே, அது ஏன்? என்பதற்கான விடையை நாம் விளங்கிக்கொள்ள முடியாததுதான்! சர்வவல்ல ஆளுகைக்குரியவர் நம் தேவன்! அவருடைய ஆளுகையில்,* **யாக்கோபு** *கொல்லப்பட அனுமதித்தார்.... ஆனால்,* **பேதுருவை** *அற்புதமாய் சிறையிலிருந்து மீட்டார் (அப்.12). எப்படியிருந்தாலும், மரணத்திற்குரிய திறவுகோல் நம் ஆண்டவருடைய கரத்தில்தான் இருக்கிறது! அந்தக் கதவை உங்களுக்கு 'அவர் மாத்திரமே' திறந்திட*

முடியும். ஆகவே, நாம் மாத்திரம் **அவருடைய சித்தத்தின்படி ஜீவித்துவிட்டால்** *நம் காலத்திற்கு முன்பே நாம் மரிப்பது கூடாத காரியம்! நாம் மரணத்திற்கு அஞ்சிடவும் தேவையில்லை!*

தென் இந்தியாவின் டோனாவூரைச் சேர்ந்த ஏமி கார்மைக்கேல் அம்மையார், படுத்த படுக்கையாய் இருந்த காலத்தில்தான், மிக அற்புதமான புத்தகங்களையும், கவிதைகளையும் எழுதினார்கள். அந்த அம்மையார் சுக பெலனோடு இருந்திருந்தால், அந்தப் புத்தகங்களையும் கவிதைகளையும் எழுதியிருக்கவே மாட்டார்!

ஆம், நம்முடைய சுகமான சரீரத்திலும், "தொடர்ச்சியாக மாம்சத்தில் முள் கொண்ட" சரீரத்திலும், கிறிஸ்து மகிமைப்பட முடியும்! (பிலிப்பியர் 1:20).

ஆகவே நம்மைச் சந்திக்கும் துக்கங்களையும் உபத்திரவங்களையும், தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் நம்மைத் **தாழ்த்துவதற்குக்** *கிடைத்த அருமையான சந்தர்ப்பங்களாகவே நாம் எடுத்துக் கொள்ளக்கடவோம். இனியும், நாம் நமக்காக அழாதிருக்கக்கடவோம்!*

ஆம், "உங்கள் இருதயம் நொறுங்குவதற்கு சமீபமான வேளையில்" கர்த்தரும் உங்கள் சமீபமாயிருக்கிறார்! (சங்.34:18).

நாம் அழுகையின் பள்ளத்தாக்கில் கடந்து வரும்போதுதான், தேவன் 'அதை' மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படியான நீரூற்றாய் மாற்றிட முடியும்! (சங்.84:6). பார்த்தீர்களா, நம் துன்பங்களின் மத்தியில் பரத்திலிருந்து வரும் ஜீவத்தண்ணீரால் தேவன் நமக்கு ஆறுதல் செய்து பரவசமளித்ததைப் போலவே.... இப்போது, அதே ஜீவத் தண்ணீரை நம்மைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கக் கூடியவர்களாய் தேவன் நம்மை மாற்றிவிட்டார்!

ஒரு நாளில் நம் கண்ணீர் யாவையும் துடைத்துப் போடுவதாகவே தேவன் நமக்கு வாக்குதத்தம் செய்திருக்கிறார் (வெளி.21:1-4). அதன் பிறகு துக்கம் இல்லை! உபத்திரவம் இல்லை! மரணமுமில்லை! அழுகையும் இல்லை! கதறலும் இல்லை! வேதனையுமில்லை!.... ஏனென்றால், முந்தின அவையாவும் இப்போது ஒழிந்துபோயின! நம் பிதா நம்மோடு எப்போதும் வாசமாயிருக்கும் அந்தப் புதிய வானத்திற்காகவும், அந்தப் புதிய பூமிக்காகவுமே இப்போது நாம் ஏக்கத்துடன் காத்திருக்கிறோம்!

நம் இருதயத்திலிருக்கும் அந்த ஏக்கத்தின் பெருந்தொனியே "கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரமாய் வாரும்!" என்ற ஜெபமாயிருக்கிறது!

அழுதிடும் பெண்களை விசாரிக்கும் தேவன்

9

பிதா நம்மை நேசிப்பதையும் அவர் நம்மீது கோபமாயில்லை என்பதையும் காண்பிப்பதற்கே தேவ குமாரன் இந்தப் பூமிக்கு வந்தார்! மேலும், சமுதாயத்தில் தூக்கி எறியப்பட்ட தாழ்ந்த, தகுதியில்லாத பெண்களையும் இந்த பூமியில் அவர் தூக்கியெடுக்கவே வந்தார். வெவ்வேறு சமயங்களில், வெவ்வேறு தேவைகளுக்காக இயேசு வினிடத்தில் வந்த அநேகப் பெண்களைக் குறித்து சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். அவர்களில் ஒருவருடைய அழுகுரலைக்கூட இயேசு அசட்டை செய்து புறக்கணிக்கவில்லை! அழுது நின்ற பெண்களிடம் அவர் எப்போதும் அன்பான வார்த்தைகளையே பேசினார்!

அவர்களிடம் அவர் பரிவுடன் கேட்ட முக்கியமான கேள்வி யாதெனில் **"பெண்ணே, நீ ஏன் அழுகிறாய்?"** என்ற கேள்விதான்.

தன் ஜீவியத்தில் **மகதலேனா மரியாள்** அதிகமாய் அழுதாள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. ஒரு சமயம், ஏழு பொல்லாத ஆவி களால் அவள் பிடிக்கப்பட்டிருந்தாள். ஆனால், இயேசுவோ அவளை விடுதலை செய்துவிட்டார்! அந்த நன்றிக் கடனை அவள் ஒருபோதும் மறக்கவேயில்லை. அந்த நன்றியுணர்வின் விளைவே, அவள் இயேசுவினிடத்தில் காட்டிய **தியானபக்தி!** சாத்தானோ, அவளுடைய வாழ்க்கையை அழித்திருந்தான்.... பிசாசுகளும் ஒன்றன் பின் ஒன்றாய் அவளைப் பிடித்துக் கொண்டது! பேய் பிடித்த ஓர் கொடூர ஸ்திரீ யாகவே அவள் நகரத்தில் கருதப்பட்டு, புறக்கணிக்கப்பட்டிருந்தாள்!

ஆகிலும், சோர்வின் ஆழத்திற்குள் விழுந்து, பாவ சாக்கடையில் மூழ்கிப் போன வர்களை, இயேசு எங்ஙனம் மீட்டெடுத்து ஆவிக்குரிய சிங்காசனத்தில் அமரச் செய்ய முடியும் என்பதற்கு இந்த மகதலேனா மரியாள் ஓர் சிறந்த மாதிரியாய் இருக்கிறாள்!

மரியாள், மார்த்தாள் ஆகிய இருவரும் அழுதார்கள் என வேதம் கூறுகிறது. சகோதரிகளாக இருந்த இவர்கள், தங்கள் இல்லத்தை

இயேசுவுக்குத் திறந்து கொடுத்தார்கள். இவர்கள் இருவருமே தங்கள் **ஆண்டவருக்காக ஓய்வில்லாமல் ஊழியம் செய்திட** எப்போதும் மகிழ்ச்சி யாய் இருந்தார்கள்! ஒருநாள், அவர்களின் சகோதரன் லாசரு மரண வியாதிப்பட்டான். இந்த சகோதரிகள் இயேசுவுக்கு "அவசர அழைப்பு" விடுத்தார்கள். ஆனால், இயேசுவோ அவர்களுடைய வீட்டிற்குச் செல்ல பகிரங்கமாய் தாமதித்தார் என்பதை யோவான் 11-ம் அதிகாரம் விவரிக்கிறது. அவ்விதமான தாமதத்தை அவர்களால் அப்போது புரிந்து கொள்ள முடியவில்லை. ஏன் அவர் உடனே வரவில்லை?

நம் ஜெபங்களுக்கு ஏற்பட்ட ஒவ்வொரு தாமதமான பதிலும், நாம் கேட்பதை விட நலமான ஒன்றைத் தரும்படி தேவன் திட்டமிட்ட தாமதமேயாகும்!

முடிவில், லாசரு மரித்துப் போனான்! அதன் பிறகுதான் இயேசு அங்கு வந்தார். மரியாளும் மார்த்தாளும் இயேசுவினிடத்தில் இரண்டு வித்தியாசமான முறையில் நடந்து கொண்டார்கள். இயேசுவின் தாமதத்தை ஒருவள் கசந்த உள்ளத்தோடு குறை கூறினாள்! அவள் சகோதரியோ தன் கசப்பை தனக்குள் வைத்துக்கொண்டு அமைதியாய் இருந்துவிட்டாள். இருப்பினும், இயேசுவோ அவர்களுடைய துக்கங் களைப் புரிந்து கொண்டார்! அவர்களுக்காக அவர் பரிதபித்தது மாத்திரமல்லாமல், அழவும் செய்தார்! அவர்களுடைய குறை கூறுதலையும், கசப்பையும் அவர் மன்னித்துவிட்டு, அவர்களின் சகோதரனையோ மரணத்திலிருந்து உயிர்த்தெழும்படி செய்தார்!

அந்த சகோதரிகளோ இயேசுவிடம் "சுகத்தை" மாத்திரமே எதிர்பார்த் தார்கள். ஆனால் அவரோ அவர்களுக்கு "ஓர் உயிர்த்தெழுதலை" தந்தரு ளினார்! இப்போது அவர்களுடைய அழுகை, சந்தோஷமாக மாறியது!

இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆம், நாம் கேட்பதற்கும் அல்லது நினைப்பதற்கும் மேலாகவே அவர் நமக்கு செய்திட முடியும். இன்றும், ஸ்திரீகளுக்காக, அவர் அழுது.... பின்பு அவர்களின் கண்ணீர்களைத் துடைக்கிறார்!

பெயர் சொல்லப்படாத ஒரு ஸ்திரீயைக் குறித்து சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறோம். அவள் தன்னுடைய சரீரத்தில் பன்னிரண்டு ஆண்டு காலமாய் இரத்தப் பெருக்குடையவளாயிருந்தாள். அவளும் அநேக மருத்துவரிடத்தில் சென்று பார்த்தாள். அவளுடைய ஆஸ்தி முழுவதும் மருத்துவர்களுக்குப்போனதேயல்லாமல் சுகமடையவில்லை! அவளு டைய வியாதியோ பிறரிடம் சொல்வதற்குகூட கூசும்படியான "இரத்தக் கசிவு" நோயாய் இருந்தது. இவ்வாறு, நாள்தோறும் இரத்தக் கசிவுயிருந்தபடியால் அவள் மிகுந்த பெலஹீனமும், இரத்த சோகை உடையவளாயும் இருந்திருப்பாள்! எத்தனையோ இரவுகளில், தேவன்

தன்னை சுகமாக்கும்படி கெஞ்சி ஜெபித்த அழுகையினிமித்தம், தன் தலையணையை நனைத்திருப்பாள். மற்ற யூதர்கள் எதிர்பார்த் திருந் ததைப் போலவே, இவளும்கூட "மேசியா வருவார்... இஸ்ரவேலின் சகல துன்பங்களிலிருந்தும் இஸ்ரவேலை விடுதலையாக்குவார்!" என மிகுந்த ஆர்வத்துடன் காத்திருந்தாள். ஆனால், பன்னிரண்டு ஆண்டுகளாய் அவளுடைய கூக்குரலுக்கு பதில் கிடைக்கவில்லை. திடீரென்று ஒருநாள், "மேசியா வந்துவிட்டார்! எனவும், அவர் இன்று தன்னுடைய ஊருக்கு வருகிறார்!" என்றும் கேள்விப்பட்டாள்! அந்நாளில் பெருந்திரளான ஜனங்கள் கூடிவிட்டார்கள். இயேசுவைச் சுற்றி ஜனங்கள் நெருக்கி முண்டியடித்து நின்றார்கள். இருப்பினும், இந்தப் பெரும்பாடுள்ளான ஸ்திரீ எப்படியாயினும் அந்தக் கூட்டத்திற்குள் சென்று, இயேசுவின் வஸ்திரத்தையாவது தொட்டுவிட வேண்டும் என தனக்குள் உறுதியான தீர்மானம் செய்து கொண்டாள். இத்தனை பெலஹீனமான ஸ்திரீ, ஆண்களின் கூட்டத்தையும், பெண்களின் கூட்டத்தையும், பிள்ளைகளின் கூட்டத்தை கடந்து சென்று... ஆர்வமுடன் கரத்தை நீட்டி, எப்படியோ அவருடைய வஸ்திரத்தின் தொங்கிக் கொண்டிருந்த கீழ்ப்பகுதியின் ஓர் ஓரத்தை அவளின் விரல் தொட்டுவிட்டது! என்ன ஆச்சரியம், அவள் உடன டியாக சுகமாகிவிட்டாள்!! இயேசு நின்று, தனக்கு முன் வரும்படி அவளை அழைத்ததும்... அவள், தன்னுடைய சாட்சியை அந்தக் கூட்டத்திற்கு மகிழ்ச்சி கலந்த பயத்துடன் மெதுவாகக் கூறினாள்! அவளுடைய சாட்சி, கடந்த 2000 ஆண்டுகளாய் உலகமெங்குமுள்ள மக்களை ஆசீர்வதித்திருக்கிறது!

நீங்களும்கூட இதுபோன்ற "அறியப்படாத ஓர் சகோதரியாய்" பல ஆண்டுகள் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கக்கூடும். பிறரிடத்தில் சொல்வதற்கே கூசும்படியான வியாதியினாலும் நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடும். உங்களை ஆண்டவர் ஒருபோதும் ஏமாந்து போகச் செய்யமாட்டார்! **அவரிடத்தில் வந்துவிடுங்கள்!** இன்றும்கூட நாம் அவரிடம் சென்று, அவரை விசுவாசத்தினால் தொட்டுவிட முடியும்! இந்த இயேசு நம் வியாதிகளையும், நோய்களையும் சுமந்த படியால், **அவருடைய தழும்புகளால்** நாம் குணமடைகிறோம்.

யோவான் 4-ம் அதிகாரத்தில் **தேவை மிகுந்த ஒரு சமாரிய ஸ்திரீயைக்** குறித்து வாசிக்கிறோம். அவளுடைய வாழ்க்கை ஓர் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கையாகவே இருந்தது. திருமணம் செய்து, பின்பு மறுதிருமணம் செய்து.... இவ்வாறு ஐந்துமுறை அவளுக்கு சம்பவித்து விட்டது! இப்போது அவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனுஷனோ அவளுடைய கணவர்கூட இல்லை! தன்னுடைய

ஜீவியத்தைக் குறித்து அவளே மிகவும் சலிப்படைந்தவளாய் இருந்தாள். யூதர்கள், சமாரியர்களை "**ஓர் தாழ்ந்த ஜாதி**" என்றே நிந்திப்பார்கள். பொதுவாய் சமாரிய ஸ்திரீகள், தங்கள் கிராமத்திலுள்ள கிணற்றுக்கு காலையிலேயே சென்று தண்ணீர் மொண்டு வருவார்கள். ஆனால் இவளோ இந்தக் கிராமத்தின் மற்ற பெண்களின் மத்தியில் அநேக துன்பமான அனுபவங்களை அடைந்திருக்க வேண்டும். அந்தப் பெண்கள் இவளை உதாசீனம் செய்து, வேதனை தரும் வார்த்தைகளைக் கூறி, அவளைத் தங்களைவிட்டுப் புறக்கணித்துவிட்டார்கள்! அவளுக்கோ, சமாரியாவில் வெட்கமும், புறக்கணிப்பும், வருத்தமும் ஓர் தொடர்ச்சியான பங்காயிருந்திருக்க வேண்டும். இதனிமித்தமே, தன்னைச் சுற்றி ஒருவரும் வராத மதிய வேளையில் அவள் கிணற்றுக்குச் சென்றாள்! தன்னுடைய இவ்வித சூழ்நிலையில், ஓர் புருஷனை கிணற்றண்டையில் கண்டபோது எவ்வளவு ஆச்சரியமடைந்திருப்பாள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

நம் எஜமானனாகிய ஆண்டவரோ, அவளைச் சந்திக்க வேண்டுமென்பதற் காகவே சமாரியாவின் வழியாய் பயணம் மேற்கொண்டிருந்தார்! மேலும், அந்த மத்தியான வேளையில் அந்தக் கிணற்றண்டையமர்ந்து அவளோடு பேசுவதற்கு காத்துக் கொண்டிருந்தார்!

அப்போது, அவருக்கிருந்த "தாகத்தை" தன் சம்பாஷணையின் துவக்கமாய் வைத்துக்கொண்டு.... படிப்படியாய், "ஜீவத்தண்ணீரின்" தேவையை அவளுக்கு அவர் உணர்த்தினார்! முடிவில், அந்த முழு கிராமத்தையும் அழைத்து வந்து மனந்திரும்பச் செய்யும்படியாய் ஆண்டவர் அவளைப் பயன்படுத்தினார்!

பார்த்தீர்களா, சமுதாயத்தால் புறக்கணித்துத் தள்ளப்பட்ட ஸ்திரீகளுக்கு இயேசு எவ்வளவாய் நம்பிக்கையைத் தருகிறார்! நீங்களோ ஒடுக்கப்பட்டவர்களாய், அற்பமாய் கருதப்படும் தாழ்ந்த ஜாதிப் பெண்களாய்... உங்கள் உரிமைகளுக்காய் போராடிட ஒருவர்கூட இல்லாதவர்களாய் இருக்கக்கூடும்! உங்களுக்கு இதோ ஓர் நற்செய்தி! ஆம், ஸ்திரீயே இனியும் நீங்கள் அழுதிடத் தேவையில்லை! **உங்களுக் காகவே, உங்கள் மீட்பர் இதோ வந்துவிட்டார்!**

அழுது கொண்டிருந்தாலும் 'விடாமுயற்சி கொண்ட' ஓர் **கானானிய ஸ்திரீயைக்** குறித்து மத்தேயு 15:22-ல் வாசிக்கிறோம். அவளும் "தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததி" அல்ல. இருப்பினும், தேவன் அவள்மீது அக்கறை கொண்டிருந்தார்! அவள் மகளுக்குப் பல ஆண்டுகளாய் அசுத்த ஆவி பிடித்து .... எங்கே? யாரிடம் சென்று, உதவி கேட்பது? என்பதறியாமல் தவித்துக் கொண்டிருந்தாள். அச்சமயத்தில்

ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேல் தேசத்திற்கு வந்திருக்கிறாரெனவும், அவர் பிசாசுகளைத் துரத்துகிறார் எனவும் கேள்விப்பட்டாள். அந்நாட்களில் ஒரு கிராமத்திலிருந்து இஸ்ரவேல் தேசத்திற்குப் பயணம் செய்வது கடினமானது மாத்திரமல்லாமல், பயணச் செலவும் மிகவும் அதிகமா யிருக்கும். மேலும், அவள் ஒரு இஸ்ரவேல் பெண்மணியுமல்ல! ஆகவே, அவள் கூறுவதை இயேசு கேட்பாரா? உதவி செய்வாரா? என்பதை அவள் அறியாது திகைத்திருந்தாள்...

இத்தனை நம்பிக்கையிழந்த இடர்பாடுகள் மத்தியில், தேவன் தன்னை எவ்வளவாய் அன்புகூருகிறார் என்பதையும், தன் கண்ணீரை எவ்வளவாய் கண்டிருக்கிறாரென்பதையும் மாத்திரமே அவள் அறிந்தவளாயிருந்தாள்! அது ஒன்றே போதும், தேவன் அவளிடத்தில் இயேசுவை அனுப்பி விட்டார்!

ஆம், இயேசு கலிலேயாவிலிருந்து நடந்து சென்று, அவள் சொந்த ஊருக்கு சுமார் 50 மைல் அருகில் நெருங்கி வந்து விட்டார்! அவள் இயேசுவைச் சந்தித்தபோது, தான் ஒரு **புறஜாதிப்பெண்** *என்பதையும், தேவனிடத்திலிருந்து யாதொன்று பெறுவதற்கும்* **தகுதியற்றவளென்பதையும்** *நன்கு அறிந்திருந்தாள்! எனவேதான், ஆண்டவருக்கு முன்பாக "ஒரு நாயின் ஸ்தானத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு.... பிள்ளைகள் சாப்பிடும் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளையாவது நான் சாப்பிடட்டும்" என ஆண்டவரிடம் வேண்டி நின்றாள்! பார்த்தீர்களா, ஆண்டவருடைய கரத்திலிருந்து விழும் "ஒரு துணிக்கை" தன் மகளிடமிருந்த பிசாசைத் துரத்துவதற்குப் போதுமானது என்றே அவள் விசுவாசித்தாள்! என்னே அவளது அற்புத விசுவாசம்! அவளுடைய விண்ணப்தை இயேசு ஏற்றுக்கொண்டு, உடனடியாக பதில் தந்துவிட்டார்! அவளுடைய மகள் சுமார் 50 மைல் தள்ளியிருந்தாலும், அந்த வேளையில் உடனடியாக விடுதலை பெற்றாள். அவளுடைய நீண்ட கண்ணீரின் வருடங்கள் மாறி, அந்நாளில் மகிழ்ச்சியும் ஆனந்த சிரிப்பும் இடம் பெற்றுவிட்டது.* **அந்நாள், அவள் கண்ணீருக்குப் பதில் கிடைத்த பொன்னாள்!**

இந்த கானானிய ஸ்திரீ எத்தனை அருமையான சாட்சியாய் இருக்கிறாள். அன்பார்ந்த தாயே, நீங்களும் அவளைப்போலவே நம்முடைய அன்புள்ள ஆண்டவரை முழு இருதயமாய் தேடிவிட நாடுங்கள்! உங்கள் கண்ணீர்களையும் அவர் கண்டிருக்கிறார் .... உங்கள் தேவை என்ன என்பதும் அவருக்குத் தெரியும்! ஒருவேளை உங்கள் பிள்ளை உங்களைவிட்டு வெகு தொலைவில் வசித்துக் கொண்டிருக்கலாம். ஆகிலும் இந்தக் கானானிய ஸ்திரீ செய்ததைப்போலவே, **தூரத்திலிருக்கும் உங்கள் பிள்ளையை நம் ஆண்டவருடைய பாதபடிக்கு** *நீங்கள் கொண்டு வந்துவிட முடியும். ஆம், அவ்வாறு நீங்கள் செய்து*

விட்டால், உங்கள் பிள்ளையும் நிச்சயமாய் விடுதலை பெற்றுவிடுவான்! உங்கள் கண்ணீரைத் துடைத்து உங்கள் அழுகையை நகைப்பாய் மாற்றுவதற்கு 'எவ்வளவு தூரமானாலும்' நம் ஆண்டவர் பயணமாய் வந்துவிடுவார்! இன்று நமக்குக் கிடைத்திருக்கும் மற்றுமோர் நற்செய்தி என்னவெனில், "நீங்கள் ஓர் நாய் அல்ல.... தேவனுடைய சொந்த குமாரத்தி!" இப்போது "மேஜையிலிருந்து விழும் வெறும் துணிக்கை யையல்ல, **பிள்ளைகளின் அப்பத்தையே**" நீங்கள் பெற்றுவிட முடியும்! ஆகவே வஞ்சனையிலும் பிசாசின் ஆளுகையிலும் பீடிக்கப்பட்ட உங்கள் மகள்களுக்காக, மகன்களுக்காக நீங்கள் கேட்க விரும்பியதை ஆண்டவரிடத்தில் விசுவாசத்துடன் சென்று தைரியமாய் கேளுங்கள். உங்கள் பிள்ளைகள் "ஒவ்வொருவரையும்" ஆண்டவர் நிச்சயமாய் விடுதலை செய்வார்!

ஒருசமயம், **விபசாரத்தில் பிடிபட்டு அழுது கொண்டிருந்த** ஒரு பெண், பரிசேயர்களால் இயேசுவினிடத்தில் கொண்டு வரப்பட்டாள் (யோவான் 8). யூத பிரமாணத்தின்படி, அவள் கல்லெறிந்து கொல்லப் பட தகுதியுடையவளாய் இருந்தாள். ஆகவே, போதகருக்கெல்லாம் தலைமைப் போதகராயிருந்த ஆண்டவரை இந்நிகழ்ச்சியின் மூலமாய் எப்படியும் சிக்க வைத்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் அவளை அவரிடம் கொண்டு வந்தார்கள். அவளை அவர் விடுதலை செய்தால் **நியாயப்பிரமாணத்தை அவமதிக்கிறார்!** என்ற குற்றச்சாட்டை அவர்மீது கொண்டுவர முடியும். அவளைக் கல்லெறியும்படி கட்டளையிட்டால் **மனதுருக்கமற்றவர்** என அவருடைய குணாதிசயத்தை களங்கப்படுத்த முடியும்! அந்த சூழ்நிலையில் "எவ்வழியும் தப்ப முடியாது!" என்ற நிலையாய் இருந்தது. 'தலை' என்று சொன்னால் அவர்கள் ஜெயிப் பார்கள். 'வால்' என்று சொன்னால், நீ தோற்றுப் போவாய் என்ற கதிக்கு இயேசுவைக் கொண்டுவந்தார்கள்! இயேசுவோ ஒவ்வொரு சூழ்நிலை களையும் மிகுந்த ஞானமாய் கையாண்டார். ஆம், "தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது"என்ற வசனம் எவ்வளவு உண்மையாயிருக்கிறது (1கொரி. 1:25). அந்தப் பெண்ணை,அவ்வித இழிநிலையில் வாழ்வதற்கு உந்தித் தள்ளிய சூழ்நிலை என்னவென்பதை இயேசு அறிந்திருந்த படியால், அவள்மீது இயேசு மனதுருக்கமாயிருந்தார்! அவளாகவே விரும்பி அக்கொடிய விபசாரத்திற்கு அவள் ஆளாகியிருக்கவில்லை. யாரோ ஒரு தீய மனிதன், அவளுக்குப் பொய்யான பசப்பு வார்த்தை களைப் பேசி இந்தப் பழக்கத்தின் படுகுழிக்குள் தள்ளியிருக்கக்கூடும்! அவ்வித இழிநிலையடைந்தபின், கொடிய புருஷர்கள் அவளைத் தகாத விதமாய் பயன்படுத்திவிட்டு தூக்கியெறிந்து விட்டார்கள்! இந்த

விபசார வாழ்க்கையை அவள் வெறுத்தாள். ஆனால், தான் உயிர் வாழ அவளுக்கு வேறு வழி என்ன இருக்கிறது? அநேகமாக ஒவ்வொரு நாளையும் அவள் கண்ணீரில்தான் கழித்தாள். ஆனால் இதுபோன்ற பின்னணியில் அவளைப் புரிந்துகொள்வதற்கு யார் இருக்கிறார்கள்? யார் அவளுக்கு உதவி செய்திட முடியும்?

ஆம், இவையனைத்திற்கும் இயேசு மாத்திரமே போதுமானவர்! அவளைப் புரிந்துகொள்ளவும்.... அவளுக்கு உதவி செய்திடவும் அவரால் முடியும்!

*இவ்வித கொடிய வாழ்க்கையிலிருந்து, தைரியமுள்ள இயேசுவின் சீஷர்களால் மீட்டெடுக்கப்பட்ட அநேகம் பெண்களை நான் அறிந்திருக்கிறேன். இந்த தைரியமிக்க சீஷர்கள், தங்களையே பணயம் வைத்து, விபசார விடுதிகளை நடத்திய ரௌடித் தலைவர்களின் கோபத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதுபோன்று விபசார விடுதியில் அழுது கொண்டிருக்கும் பெண்கள், இனியும் தங்களால் ஒழுக்கமான வாழ்க்கை வாழமுடியும் என்ற எல்லா நம்பிக்கையையும் இழந்தவர்கள்! இவர்களில் சிலர் "காம வியாபார தரகர்களால்" சிறு பிள்ளையா யிருக்கும்போதே கடத்தப்பட்டு வந்தவர்கள்! இவர்களுக்குத் தங்கள் பெற்றோர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? என்பதைக்கூட அறியாத வர்களாயிருந்தார்கள். இவர்களில் சில பெண்கள், இப்போது போதை மருந்திற்கு அடிமையாக மாறிவிட்டபடியால், அந்தப் போதை மருந்தில்லாமல் வாழமுடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள். அந்தப் போதை மருந்துகளை வாங்குவதற்குத் தேவையான பணத்தை விபசாரத்தின் மூலமாய் பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்! இவர்களில் பலர் எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாய் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்று அழும் பெண்களையும் இயேசு விசாரிக்கிறார்... அவர்களை விடுதலை செய்யவும் விரும்புகிறார்! இன்றும்கூட, "**அந்த**" **விடுதலையின் ஊழியத்திற்கு** உங்களையும் என்னையும் பயன்படுத்த அவர் விரும்புகிறார்!*

அந்த ஸ்திரீ 'இன்னொருநாள் வாழ்வோம்' என்று கூட சிந்தித்திருக்க மாட்டாள் (யோவான் 8). தன்மீது குற்றஞ்சாட்டிய வர்களுக்கு முன்பாக நின்று அழுது கொண்டிருந்த அவள், எந்த வேளையில் தன்மீது முதல் கல் விழுமென்ற பீதியுடன் காணப்பட்டாள். அவ்வேளையில், இயேசுவின் முகத்திலிருந்த மனதுருக்கத்தை அவள் கண்டுவிட்டபடியால்... **கெஞ்சும் கண்களோடு "அவராவது தன்னைப் புரிந்து கொள்வார்!"** *என்ற நம்பிக்கையில் ஏங்கி நின்றாள். ஆம், அவர் அவளைப் புரிந்துகொண்டார்! அவர் அவளை மன்னித்தார்! அவளுடைய வாழ்க்கைப் பாதையை, ஓர் புதிய சீஷத்துவ வாழ்க்கைக்கும், சமுதாயத்தில்* **பயனுள்ள வாழ்க்கைக்கும்** *நேராகத் திருப்பி*

விட்டார்! அதே அதிசயத்தை அவர் உங்களுக்கும் செய்திட முடியும்! நீங்கள் எவ்வளவு கேடான வீழ்ச்சியுற்றிருந்தாலும், அது அவருக்கு ஒரு பொருட்டல்ல.

இன்று அவர் உங்களுக்கும் "உன்னை நானும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை! நீ போ, இனிப்பாவஞ் செய்யாதே!" என்ற தமது அன்பார்ந்த வார்த்தைகளையே தருகிறார்.

பழைய ஏற்பாட்டிலும்கூட, தேவனிடத்தில் இரக்கம் பெற்ற இன்னொரு வேசியைக் குறித்து நாம் வாசிக்கிறோம். அவள் பெயர் **ராகாப்!** அவள் தன் பிள்ளைகளோடு எரிகோ பட்டணத்தில் வாழ்ந்து வந்தாள். அவளுடைய கற்பு ஒழுக்கத்தில் கேடு ஏற்பட்டிருந்தாலும், அவளோ தேவனிடத்தில் **விசுவாசம்** கொண்டவளாய் இருந்தாள்! அவள் தன் கடந்தகால வீழ்ச்சிகளுக்காய் அழுது ஜெபித்திருக்கக்கூடும். இப்போதோ தன்னுடைய பிள்ளைகளுக்காக ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்திட விரும்பினாள். அவளுடைய இருதயத்தின் மெய் வாஞ்சைகளைத் தேவன் கண்டபடியால், இஸ்ரவேலர்களின் வேவுக்காரர்களின் நடைகள் அவளுடைய வீட்டிற்கு நேராகச் செல்லும்படி நடத்தினார்! அவளும் அவர்களுக்கு உதவி செய்தாள். இவ்வாறாகவே, எரிகோ முழுவதும் அழிந்தபோதும், அவளுடைய ஜீவன் காக்கப்பட்டது! அதுமாத்திரமல்லாமல், **சல்மோன்** என்ற இஸ்ரவேலனையும் அவள் திருமணம் செய்துகொண்டு, இயேசுவின் குடும்ப வம்சத்தில் ஒரு பங்கானாள்! இப்போது அவளுடைய பெயர் "விசுவாசப் புகழ் மணக்கும் அரங்கத்தில்" ஆபிரகாம், மோசே, யோசுவா ஆகியவர்களோடு சேர்ந்து அவளுடைய பெயரும் காணப்படுகிறது (எபி. 11). இது ஒரு மகா ஆச்சரியமான செயல் அல்லவா? அக்கால சந்ததியில் வாழ்ந்தவர்களில் **இரண்டு பேர்கள்** மாத்திரமே எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளனர். 1) யோசுவா! 2) ராகாப்! தேவனுடைய வழிகள் எத்தனை ஆச்சரியமாய் இருக்கிறது. ஆம், வழி தவறிவிட்ட அன்பார்ந்த சகோதரியே, தேவன் ராகாபிற்குச் செய்ததை உங்களுக்கும் செய்வார்!

நாயீன் ஊரிலேயும் **அழுது கொண்டிருந்த ஒரு விதவையை** நாம் காண்கிறோம். தன் வயதான தாயை கவனித்து வந்த ஒரே மகனாகிய அந்த வாலிபன் திடீரென்று மரித்துவிட்டான்! அவளோ தாங் கொண்ணா துயரத்தில் அழுதாள். சவப்பெட்டியிலிருக்கும் தன் அன்பு மகனின் முகத்தைக் காணும் ஏக்கத்தில், தன்னால் முடிந்தவரை அடக்க நேரத்தை வெகுவாய் தாமதப்படுத்தினாள்! வேறு வழியில்லாமல், அங்கிருந்தவர்கள் சவப்பெட்டியை தூக்குவதற்கு அனுமதித்து, மிகுந்த கண்ணீரோடு அப்பெட்டிக்குப் பின்னால் சென்று கொண்டிருந்தாள்.

அடக்க ஆராதனை முடிந்ததும், சோகமான அந்த இரவில் **தனிமையில்** அந்த நேரத்தை செலவழிக்கப்போவதை எதிர்நோக்கியிருந்தாள்! ஆனால் பரலோகத்தில் உள்ள அவளுடைய அன்பின் பிதா அவளுக்கென அங்கு **மகிழ்ச்சியை குவித்து வைத்திருக்கிறார்** என்பதை சிறிதேனும் அறியாதவளாகவேயிருந்தாள். சரியாக அதே நேரத்தில்தான், தன் பயணத்தை நாயீனுக்குத் தொடர இயேசு திட்ட மிட்டிருந்தார்.

'சிறிதேனும் தாமதம் செய்யாமல்' சரியான நேரத்தில் அங்கு வந்துவிட்டார். அந்த சவ ஊர்வலத்தை நிறுத்தினார்! சவப்பெட்டியைத் திறந்தார்! மரித்த வாலிபனை உயிரோடு எழுப்பினார்!

உயிர்த்தெழுந்த அந்த மகனை அவனுடைய தாயினிடத்தில் திரும்பவும் கொடுத்தார்! யாதொரு சகாயமுமில்லாமல் தவித்து நிற்கும் அன்பார்ந்த விதவை சகோதரியே, "உங்கள்துன்ப நேரத்திலும்" அவர் **தாமதமில்லாமல்** உங்களுக்க அருகில் வந்து நிற்பார்! ஆம், தேவன் மெய்யாகவே உங்களை விசாரிக்கிறவர்!

தேவனுடைய இருதயத்தில் 'விதவைகளுக்கென' ஓர் விசேஷித்த இடம் இருக்கிறது! பொதுவாய், இந்த விதவைகளைக் கவனித்திட இந்தப் பூமியில் ஒருவரும் இருப்பதில்லை. உதவியற்றவர்களாய் இருக்கும் அவளை அநேக ஜனங்கள் ஏமாற்றத்தான் பார்க்கிறார்கள்!

ஆனால் தேவனோ, விதவைகளின் தேவனும், தகப்பனற்றவர்களின் (திக்கற்றவர்களின்) தேவனுமாயிருக்கிறார். எனவேதான் "உன் விதவைகள் என்னை நம்புவார்களாக" என்று தேவன் கூறினார் (எரேமியா.49:11) .

அன்பார்ந்த விதவை சகோதரியே, வேதத்தில் தேவன் உங்களுக்கென்று அளித்த சுதந்திரத்தை உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு உங்கள் திவ்ய மணவாளனிடத்திலும், உங்கள் சொந்தப் பரலோகத் தகப்பனிடத்திலும் மிகுந்த மகிழ்ச்சியோடும் உரிமையோடும் கிட்டிச் சேருங்கள்!

பழைய ஏற்பாட்டிலும், **மரித்துப்போன ஒரு மகனின் தாயைக்** குறித்து வாசிக்கிறோம் (2 இராஜாக்கள் 4). நிர்க்கதியான இந்நிலையில், எலிசா தீர்க்கதரிசி மாத்திரமே தனக்கு உதவி செய்திட முடியுமென்பதை அறிந்து, தீர்க்கதரிசியைத் தேடி அந்த தாய் சென்றாள்! வீதியில் நீண்ட தூரம் பயணத்தை மேற்கொண்டிருந்த அவளைப் பார்த்த ஒருவராகிலும்கூட "அவள் தன் இருதயத்தின் அந்தரங்கத்தில் அழுது கொண்டிருந்ததைக்" காணமுடியவில்லை. அவள் எலிசாவை சந்தித்தவுடன், அவனிடத்தில் விசுவாசத்திற்கு உகந்த சம்பாஷணையே செய்தாள்! ஆம், தன்னுடைய மரித்த பிள்ளையை அவர் குறிப்பிட்டு விசாரித்தபோது "**என் பிள்ளை சுகந்தான்!**" என்றே கூறினாள் (2இராஜாக்கள்.4:26).

இவ்வாறு விசுவாசத்தில் சிகரமாய் இருந்த அந்த தாய், மரித்த தன்னுடைய மகனை திரும்பவும் பெற்றுக்கொண்டதில் எந்த ஆச்சரியமுமில்லை. இதுபோன்ற விசுவாசத்தையே தேவன் வெகுவாய் கனப்படுத்துகிறார்!

லூக்கா 13-ம் அதிகாரத்தில் **எவ்வித பிரயோஜனமுமில்லாத ஒரு ஸ்திரீயைக்** *குறித்து வாசிக்கிறோம். இவளோ 18 ஆண்டுகளாய் தன் நூதனமான வியாதியினால் முதுகு வளைந்துவிட்டது. கூனியாயிருந்த அவளால் நிமிர்ந்து நடக்க முடியாதவளானாள்! தன்னுடைய உடல் வலியையும் ஊனத்தையும் பொருட்படுத்தாமல் ஓய்வுநாளின் ஒவ்வொரு வாரமும் உத்தமமாய்* **ஆலயத்திற்குச் சென்றுவிடுவாள்.** *நல்ல வேளை, அன்று அந்த ஓய்வுநாள் கூட்டத்திற்கும் அவள் வழக்கம்போல் தவறாமல் வந்துவிட்டாள்.... ஏனெனில்,* **இந்த நாளைத்தான் "அவளுக்கு சுகமளிக்கும் நாளென!"** *தேவன் முன்குறித்து வைத்திருந்தார். ஆம், பல ஆண்டுகளாக அவள் சாத்தானால் கட்டப்பட்டிருந்தாள். எல்லா நம்பிக்கையுமிழந்த வேதனையான அந்தச் சூழ்நிலையில் "ஒரு மிருகத்தைப் போலவே" அவள் கூனியாக நடந்து திரிந்தாள். தன்னிடம் சிக்கிக்கொண்டவர்களை, சாத்தான் முடிவில் இவ்வித நம்பிக்கையற்ற நிலைக்கே அவர்களைக் கொண்டு வருகிறான் (லூக்கா 13:11-13). வீதியில் 18 வருடங்களாய், அவள் கூனி நடந்த தெருக்களில், பிள்ளைகளின் பரிகாசத்தைக் கேட்டு அவள் அதிகமாய் அழுதிருப்பாள்! அவளால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. இருப்பினும் அவளுடைய இருதயமோ "என்னுடைய தேவன் நிச்சயமாய் என்னை விடுதலையாக்குவார்!" என அவருக்காக காத்திருந்தது! அநேகருடைய பரிதாபத்திற்குரிய பொருளைப்போல் அவள் மாறிவிட்டாள்!* **"நான் பரிதாபத்திற்குரியவள்" என்ற எண்ணமே ஒருவரை அழச்செய்துவிடும்!** *அவளுடைய கோணலான முதுகையும் சுருங்கிப்போன முகத்தையும் கண்ட பிள்ளைகளில் அநேகர், அவளைக்கண்டு அஞ்சி ஓடினார்கள்! அவளோ, தன்னிடத்தில் சாத்தான் வைத்துவிட்ட இந்தப் பொல்லாத சாபத்திலிருந்து விடுதலையடையும்படி அநேக இரவுகளில் தேவனிடத்தில் கூக்குரலிட்டு மன்றாடியிருந்தாள்! இப்போது இயேசு வந்துவிட்டார்! அவளை முற்றிலுமாய் விடுவித்துவிட்டார்! அவளை ஆலயத்தில் இயேசு கண்டபோது, தன் முன் வரும்படி அழைத்து* **"ஸ்திரீயே, நீ விடுவிக்கப்பட்டாய்!"** *என்ற மகிழ்ச்சியான வார்த்தைகளைக் கூறியவுடன், அவள் நிமிர்ந்து நின்று, வானத்தை நோக்கிப் பார்த்து, தன்னை விடுதலை செய்த தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்க முடிந்தது!*

அன்று கூறிய "ஸ்திரீயே நீ விடுதலையாக்கப்பட்டாய்" (லூக்கா 13:12) என்ற அந்த வார்த்தைகள் இன்றும் 21 நூற்றாண்டுகளாய் ஒலித்து, உங்களுக்கும் கடந்து வருகிறது!

அன்பார்ந்த சகோதரியே, ஆண்டவரின் இந்த வார்த்தைகளை உங்களுக்கென தனிப்பட்ட விதத்தில் எடுத்துக்கொள்வீர்களா? ஆம், தேவனைத் துதிக்கும்படியாய், நீங்கள் விடுதலையாகிவிட்டீர்கள்! ஒவ்வொரு கட்டுகளிலிருந்தும் விடுதலையாகிவிட்டீர்கள்! ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விடுதலையாகிவிட்டீர்கள்! ஒவ்வொரு மனச் சோர்வுகளிலிருந்தும் விடுதலையாகிவிட்டீர்கள்! கெட்டுப்போன மனநிலையிலிருந்து விடுதலையாகிவிட்டீர்கள்! உங்களைத் தொற்றி வந்த சுபாவங்களிலிருந்து விடுதலையாகிவிட்டீர்கள்! அசம்பாவித நிகழ்ச்சியின் நினைவுகளிலிருந்து விடுதலையாகிவிட்டீர்கள்!

இவ்வாறு ஸ்திரீகளாகிய உங்களைத் துன்புறுத்துவதற்கு காலகாலமாய் சாத்தான் உருவாக்கி வைத்திருந்த ஒவ்வொரு அவலத்திலிருந்தும் நீங்கள் விடுதலையாகிவிட்டீர்கள்!

ஆம், பாரம்பரியக் கட்டுகளிலிருந்து விடுதலை! கெட்ட சுபாவத்திலிருந்து விடுதலை! அடக்க முடியாத நாவிலிருந்து விடுதலை! கசப்பிலிருந்து விடுதலை! மன்னிக்க முடியாத சுபாவத்திலிருந்து விடுதலை! நெஞ்சின் கோபத்திலிருந்து விடுதலை! உங்களை ஆட்கொண்டு இத்தனைக் காலமாய் கட்டிவைத்த சாத்தானுடைய எல்லா சத்துவங்களிலிருந்தும் விடுதலை! **கூனியே..... நிமிர்ந்துநில்!** தேவனை உரத்த சத்தமாய் மகிமைப்படுத்து!

தேவனுக்காக எழுந்து ஊழியம் செய்யுங்கள்! உங்களைக் குறித்து நீங்களாகவே எண்ணிக் கொண்ட தாழ்வான நிலையில் இனியும் நீங்கள் நடக்கத் தேவையில்லை! மற்றவர்கள் உங்களை அற்பமாய் எண்ணி உங்கள் மதிப்பைக் காணத் தவறினாலும், நீங்களோ தேவனுக்கு மிகவும் விலையேறப்பெற்றவர்கள்! இன்று **தேவனுடைய கரம்** உங்கள் ஜீவியத்தின் மீது அமர்ந்துவிட்டது என்பதை அறியுங்கள்!

1யோவான் 3:8-ம் வசனத்தை LIVING BIBLE மொழிபெயர்ப்பு கீழ்காணும் விதமாய் கூறுகிறது: "சாத்தான் உங்களை கட்டிவைத்த **ஒவ்வொரு முடிச்சுகளையும் அவிழ்ப்பதற்கே** தேவகுமாரன் வெளிப் பட்டார்". ஆம், "குமாரன் விடுதலையாக்கினால் நீங்கள் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" (யோவான்8:36).

இயேசு அந்த ஸ்திரீயைப் பார்த்து "ஆபிரகாமின் குமாரத்தியே" என அழைத்தார். 1பேதுரு 3:6 கூறுகிறபடி நீங்கள் "சாராளின் குமாரத்திகள்!" **விசுவாசத்தில் சீர் மிகுந்த இந்த சாராள்** ஸ்திரீகளாகிய நமக்கு மாதிரியாகத் தரப்பட்டிருக்கிறாள். தனக்கு வாக்குதத்தம் செய்யப்பட்ட பிள்ளையை வெகு அற்புதமான வழியில் இந்த சாராள் பெற்றெடுத்தாள். அவளுக்குத் திருமணமானதும், தான் பிள்ளை பெற

முடியாத **மலடியென** அறிந்த நாட்களிலிருந்து.... பல வருடங்களாய் இந்த **சாராளும் அழுதாள்!** வாக்குதத்தம் செய்யப்பட்ட பிள்ளைக்காக நீண்ட வருடங்களாய் காத்திருந்து, "பிள்ளை கிடைக்கும்" என்ற நம்பிக்கையை இழப்பதற்குக்கூட அவள் சோதிக்கப்பட்டாள்! நம் இந்திய தேசத்தில் இருப்பதைப்போலவே, அந்த நாட்களிலும் மலடியாயிருப்பது வெட்கத்திற்குரியதாகவே இருந்தது. "பெருமை கொண்ட" தாய்மார்கள் இந்த சாராளை கேவலமாய் பேசியிருக்கக் கூடும்! பெண்களின் "ஜாடை- மாடையான" பேச்சுக்களுக்கும் இவள் ஆளாகியிருப்பாள்! அதுபோன்ற நேரங்களில் தன்னுடைய கூடாரத்திற்கு ஓடிச்சென்று தன் தேவனுக்கு முன்பாக அழுது புலம்பி யிருப்பாள்! அவளுடைய கண்ணீரைக் கண்ட தேவன் விரைந்து வந்து அவளுக்குப் பதில் அளித்தார். அந்த **சாராள், தன் கண்ணீரின் ஜெபத்தை விட்டுவிடவேயில்லை!** அவளைப் போலவே நீங்களும் ஒருபோதும் விசுவாசத்தை இழந்துவிடாதீர்கள். ஆம், அப்படியாகின், ஓ விசுவாசப் பெண்ணே!.... **உங்களுக்கும்** தேவன் விரைந்து வந்து பதிலளிப்பார்!

பாவியாகிய ஒரு பெண் அழுத அருமையான நிகழ்ச்சியோடு இந்தப் புத்தகத்தின் செய்தியை நான் முடிக்க விரும்புகிறேன்! அவள் முதலாவதாய், தூசி படிந்த இயேசுவின் கால்களைத் தன் கண்ணீர் களினால் கழுவினாள். ஆம், அந்த சோர்வுற்ற பாதங்கள் உங்களுக் காகவும், எனக்காகவும் பாலஸ்தீனா வீதிகளில் அலைந்து திரிந்ததே! பின்பு, தான் கொண்டுவந்த விலையேறப்பெற்ற நளதத்தைக் கொண்டு இயேசுவின் பாதத்தில் பூசினாள்! இயேசு அவளுடைய கண்ணீர்களைக் கண்டார்! அவளுடைய மனந்திரும்புதலைக் கண்டார்! தன் பாவ வாழ்க்கையை விட்டுவிடுவதற்குரிய அவளுடைய விருப்பத்தைக் கண்டார்! தான் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமே என்ற அவளின் வாஞ்சையைக் கண்டார்! **அவளுடைய கண்ணீர்களுக்குப் பின்னால் இருந்த காரணங்கள் எல்லாவற்றையும் கண்டார்!!** ஆனால் அந்த விருந்தில் அமர்ந்திருந்த மார்க்கத் தலைவர்களோ "அவள் ஒரு பாவி!" என்பதை மாத்திரமே கண்டார்கள்!? அவள் அதிகமாய் மன்னிக்கப் பட்டபடியால், இயேசுவை அதிகமாய் நேசித்தாள். அவள் தன் ஜீவ காலமெல்லாம் சேமித்து வைத்து வாங்கிய "வாசனைமிக்க நளதக் குப்பி" தன் அன்பை இயேசுவிற்கு காட்டுவதற்கு கொண்டுவந்த ஓர் அடையாள பரிசேயாகும்!

அந்த நளதத்தின் இனிய வாசனையை அந்த வீட்டில் மாத்திரமல்ல ... அந்த சம்பவத்தில் மாத்திரமல்ல.... நம்மைப் போன்று 21 நூற்றாண்டு காலமாய் வாழ்ந்துவரும் எண்ணற்ற ஸ்திரீகளின் இருதயத்தில் மணம் வீசச் செய்துவிட்டாள்!

இயேசு அவளுக்கு மன்னிப்பையும், இரட்சிப்பையும், சமாதானத்தையும் தந்தார். பின்பு, விருந்தின் பந்தியில் இருந்தவர்களைப் பார்த்து, கடன் கொடுத்த ஒருவன், தன் இரண்டு கடன்காரர்களை மன்னித்ததைக் குறித்த நிகழ்ச்சியைப் பேசினார். அவர்களில் ஒருவன் கொஞ்சம் கடன்பட்டிருந்தான். மற்றொருவனோ அதிகக் கடன்பட்டிருந்தான். "இந்த இருவரில் எவன் கடனை மன்னித்தவரிடத்தில் அதிக அன்பாயிருப்பான்?" என்ற கேள்வியை இயேசு கேட்டார். இந்தக் கேள்வியைக் கேட்ட பின்பு, அந்தப் பாவியாகிய ஸ்திரீயைச் சுட்டிக் காட்டி "**யாரைக் காட்டிலும் இவளே என்னிடத்தில் அதிகம் அன்புகூர்ந்தாள்!**" ஏனென்றால் 'அவள் அதிகமாய் மன்னிக்கப்பட்டிருக்கிறாள்' எனவும் கூறினார்!

பாவியான ஸ்திரீகளையும், துன்பங்கள் நிறைந்த ஸ்திரீகளையும் வைத்து... மற்ற ஜனங்களுக்கு, தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய ஏராளமான அற்புத சத்தியங்களை இயேசு போதித்திருக்கிறார். இன்று நம் இந்திய கலாச்சாரத்தில் வாழும் பெண்களின் நிலைமையையும் அவர் அறிந்திருக்கிறபடியால்.... நம்மைத் தூக்கிவிடவும்! நமக்கு நம்பிக்கையைத் தரவும்! தேவனுடைய பார்வையில் நாம் எவ்வளவு மதிப்புடையவர்கள் என்பதைக் காட்டவும்! அவர் வந்துவிட்டார். அவரைத் தேடிச்சென்ற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளியதில்லை! இந்தப் பூமியில் அவர் இருந்தபோது, தேவையோடு தன்னைத் தேடிவந்த ஒவ்வொரு பெண்ணையும் அவர் ஆசீர்வதித்தார். அந்த இயேசு இன்றும் மாறாதவராகவேயிருக்கிறார்!

அன்பார்ந்த என் உடன்-பெண்மணிகளே, நாம் அனைவருமே அதிகமாய் மன்னிக்கப்பட்டிருக்கிறோம். **நாம் ஆண்டவரை அதிகமாய் நேசித்திடவும் வேண்டும்!** நம் நேசத்திற்குரிய ஆண்டவர், "தம்முடைய மகா ஆச்சரியமான சத்தியங்களை" நம்மைச் சூழயிருக்கும் அநேகருக்குக் காட்டும்படி, நம்மை இப்போது பயன்படுத்தவும் விரும்புகிறார்!

ஆகவே, "எழும்பு 'இந்தியாவின்' சீயோன் குமாரத்தியே, உன் வல்லமையைத் தரித்துக்கொள்! உன் அலங்கார வஸ்திரங்களை உடுத்திக் கொள்! தூசியை உதறிவிட்டு, எழுந்திரு! சிறைப்பட்டுப் போன சீயோன் குமாரத்தியே உன் கழுத்திலுள்ள கட்டுகளை அவிழ்த்துவிடு! எழும்பி பிரகாசி, **உன் ஒளி வந்தது**! கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது!" (ஏசாயா 52:1,2; 60:1), ஆமென்.